# படி

# PAH'DI

விலை : ரூபா. 15.00

**படித்தேன்! படித்தேன்!! படித்தேன் சுரந்தது.**


**உள்ளே.....**


- சமூக மாற்றத்தின் மாபெரும் சக்தி ஆசிரியரே
- மண்ணின் மைந்தர்களுக்கு மகுடம்
- பீடாதிபதி அவர்களுடனான விசேட நேர்காணல்
- உளநலம் பாதிக்கப்படல் - பூக்கோவின் கருத்துக்கள்
- தேவாரங்களில் மொழியாற்றல்
- பாடசாலைப் பாடவிதானம்
- ஞாபகம் (Memory), மாணவர் இடைவிலகல்
- கற்பித்தல் பயிற்சியில் மேற்பார்வை
- இலங்கையின் கடந்த நூற்றாண்டு கல்விச் சீரமைப்புக்கள்
- மனிதவள முகாமை - ஒரு வழிகாட்டி




# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய கட்டடம் கிடைக்குமா!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கான புதிய கட்டிடத்தை அமைக்க உலக வங்கி 400 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. கோப்பாயில் கட்டடம் அமைக்கப்படும் நிலமும் கிடைத்துள்ள நிலையில் புதிய கட்டட வேலைகள் விரைவில் தொடங்குமா! என மக்கள் யாவரும் அவாவுடன் கேள்வி எழுப்பியபடியுள்ளனர். இது தொடர்பாக யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி திரு.திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள் பலருடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், நல்ல மனதுடன் பொதுநோக்குடன் கடினமான சூழ்நிலைகளில் அர்ப்பணிப்பான சேவையாற்றி வரும் எமக்கு நிச்சயம் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான சூழல் ஏற்படும் என நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பம், தொடர்ச்சியான செயற்பாடுகள், புதிய திட்டங்கள் தொடர்பாகப் பீடாதிபதியவர்களிடம் கேட்டபோது, பத்தோடு பதினொன்றாக எமது கல்லூரியும் செயற்படுவதை நான் விரும்பவில்லை. கல்வியின் பெறுமானம் உணர்ந்த எமது மண்ணின் எல்லாக்கல்விச் செயற்பாடுகளிலும் கல்லூரி வீறுநடை போட வேண்டும் என்பதே எனது அவா!

யாழ்ப்பாண மண் கல்விக்கு முதன்மையளிப்பதும், கல்வியில் சாதனை புரிவதும், அந்தக் கல்விக்காக எதையும் ஆற்றத் தயாராக இருப்பதும் எல்லோரும் அறிந்ததே. இதை நாம் மறந்து விடலாகாது. கல்லூரிச் செயற்பாடுகளுக்கு சமூக அங்கத்தவர்கள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் அனைவருமே ஆதரவளித்து உதவி வருகின்றார்கள். இவ் உதவிகள் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வி–சமூகச் சேவைச் செயற்பாடுகளுக்கு உத்வேகத்தையும், பொறுப்பையும் அளித்துள்ளது எனவும் தெரிவித்தார். பீடாதிபதி அவர்களுடனான விசேட நேர்காணலின் முழுவிபரங்களும் உள்ளே பிரசுரமாகியுள்ளது.

## சிறந்த நல் ஆசிரியர்களை கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கும்

இலங்கையில் ஆசிரியர்களின் தொழில் தகமைகளை அதிகரிக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகிறது. இதில் கல்வியியற் கல்லூரிகளின் உருவாக்கமும் அடங்கும். சேவைக்கு முன்னரான வதிவிடத்துடன் கூடிய கல்வியியற்கல்லூரி பயிற்சிநெறி மூலம் சிறந்த நல்லாசிரியர்கள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள். இந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தோற்றமும், தொடர்ந்த செயற்பாடுகளும் சமூகத்திற்குப் பெரும் பயனளிக்கும் என்பது உறுதி என கல்வி உயர்கல்வி அமைச்சின் கல்வியியற் கல்லூரிகளுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் திருமதி பு. இராமகிருஸ்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## அர்ப்பண சேவையே உயர்வுக்கு வழி

அண்மையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் செய்து பீடாதிபதி, விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு பரமேஸ்வரன் அவர்கள் அர்ப்பணிப்பான சேவையே உயர்வுக்கு வழியாகும். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரிக்குப் பல வளத் தட்டுப்பாடுகள் போதாமைகள் உள்ளன. எனினும் உங்கள் அனைவரினதும் ஒருங்கிணைந்த அர்ப்பணிப்பான சேவை, தியாகம் மூலம் கல்லூரியை உயர்வுக்குக் கொண்டு வரலாம். மேலும் எமது அமைச்சினூடாக செய்யக்கூடிய உதவிகளை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு செய்து உதவுவேன் எனவும் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் கல்விச் சேவை

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் சமூகம் நோக்கிய செயற்திட்டங்களில்: தூரவுள்ள, வளப் பற்றாக்குறையுள்ள, பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு கல்விச்சேவை வழங்குதலும் ஒன்றாகும். இப்பாடசாலைகளுக்கு கல்லூரிச் சமூகத்தினர் சென்று நவீன இலத்திரனியல் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்குக் கல்வி போதித்தல், மாணவர்களுக்கான உளநல விருத்திச் செயற்பாடுகளை வழி நடத்தல், சிரமதானம் மூலம் ஏனைய பொதுநிறுவனங்களுடன் இணைந்து பாடசாலையின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் போன்ற பல செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

## படி ஏறி உயர்வதற்கான துலங்கல்

இன்றைய உலகின் புதிய போக்கிற்கும், நோக்கிற்கும் அமைய எமது தாயகம் விரைவான எழுச்சியையும், அபிவிருத்தியையும் வேண்டி நிற்கின்றது. தாயகத்தின் தேவைகளையும், பெருகிவரும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய அறிவும் செயலாற்றலும் மிக்க ஓர் இளம் சந்ததியினரை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமே உள்ளது. தேசிய கல்வி முறைமையில் மாணவர்களுக்கு அடுத்த மனிதவளத் தொகுதியினராக ஆசிரியர்கள் உள்ளனர். எமது பண்பாடுகளின் அடிப்படையிலும், சமூகக் கட்டமைப்பிலும் ஆசிரியர்களுக்கு உயரிய இடம் வழங்கப்படுகின்றது. புதிய கல்விச்சீர்திருத்தத்தினூடாக ஆசிரிய சேவை ஆசிரியர்கல்வி தொடர்பான பல முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய ஆசிரிய முறைமையை ஒருங்கிணைத்து தேசிய ஆசிரியர் கல்விக்கான மேலாண்மைச் சபை (NATE) நிறுவப்பட்டதும் முக்கிய நிகழ்வாகும்.

ஆசிரியர் உயர்கல்வி தொடர்பாக தேசிய கல்வி நிறுவகம் பதினொரு கல்விமானி கற்கை நெறிகளில்: ஒன்பது சிங்கள மொழியிலும் ஒன்று ஆங்கில மொழியிலும், ஒன்று தமிழ் மொழியிலும் நடாத்தப்படுகின்றது. தமிழ்மொழிமூலமான கல்வி முதுதத்துவமானிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே பெற முடியும். மேலும் ஆசிரியர்கள், கல்வியாளர்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டு புலமைப்பரிசில் கற்கைகள் ஏனையபயிற்சிகளைப் பெறும் வாய்ப்புக்கள் எமது பிரதேசங்களுக்குக் கிடைப்பதில்லை. இவ்வாறாகத் தமிழாசிரியர்களின் உயர் கல்விப் பாதை ஒடுங்கியே உள்ளது..

இந்நிலை தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களின், கல்வியாளர்களின் தொழில் வாண்மை வளர்ச்சி, அவற்றினூடாக தமிழ்ப்பாடசாலை மாணவர்களின் கல்விநிலை ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்கள் மிகவும் பாரதூரமானவையாகவே இருக்கும். இவற்றை ஆழமாக ஆய்வுசெய்யின் அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவரலாம்.

எமது தாயகத்தை விட்டு புத்திஜீவிகளும் தற்போதைய சூழ்நிலைகளைக் காரணம் காட்டி வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வேளை யாழ்ப்பாணத்தில் கல்வியியற் கல்லூரியை உருவாக்கி யாழ்ப்பாணக் கல்விக்கு உத்வேகம் அளிக்க வேண்டும் என்ற அவாவுடன் தன் வசதி வாய்ப்புக்களை விடுத்து திரு.தி.கமலநாதன் அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் 1வது பீடாதிபதியாகப் பொறுப்பேற்று பல சவால்களை எதிர்நோக்கி சிறப்பாகக் கல்லூரியை நடாத்தி - வருகின்றார். புதிய யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினரின் அவா அர்ப்பணிப்பான நல்லாசிரியர்களை உருவாக்குவதும், ஏனைய ஆசிரியர்களின் உயர்கல்வி வளர்ச்சிக்கு உயிர்ப்பூட்டுவதும், சமூக அபிவிருத்திப் பணிகளின் உயர்வுக்குப் "படி"க்கற்களாக இருந்து தம்மை அர்ப்பணிப்பதுமாகும்.

இவ்வாறான நோக்குடனும், துலங்கலுடனும் இயங்கும் கல்வியியல் கல்லூரி குறிப்பிட்ட பிரதேசத்தில் சிறப்பாகச் செயற்பட அது இருக்க வேண்டிய இலட்சிய நிலமை பற்றிய தெளிவான காட்சி சமூகத்திடம் இருக்க வேண்டும். சமூகத்தின் ஆதரவு பற்றுறுதி கல்வியியல் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு உயிர்ப்பூட்ட வேண்டும். அந்த வகையிலேயே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் தோற்றமும், தொடர்ந்த செயற்பாடுகளும் சமூகத்தின் முழுமையான இயக்கவிசையுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் இயக்க விசையின் ஒரு கீற்றாகவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆசிரியர் தின சிறப்பு வெளியீடான "படி" உங்கள் கரங்களில் தவழ்கின்றது. இவ் இதழின் மலர்வினால் ஆனந்தக் களிப்படையும் அனைத்து உள்ளங்களிலும் பல கல்வியியற் சிந்தனை ஆக்கங்கள் வெளிவர வேண்டும். அறிவின்மை, வறுமை, பொய், அநீதி இவை எல்லாம் அழிந்து மனித இனத்திற்கு விடுதலை பெறும் பொருட்டு கல்வியின் மேன்மை, தூய்மை, நேர்மை, நாகரிகம், நீதி, ஒற்றுமை, சுதந்திரம் என்பன வெற்றியடையவும், மாணடத்தின் முழுமையைக் காணத் துடிக்கும் எமது பண்பாட்டின் செழுமைக்கும் இவ்வெளியீடு உரமூட்டும். உயர்வுக்கு ஏணிப்"படி"யாக இருந்து வழிகாட்டும்.

சமீப காலமாகப் பிரபல்யம் பெற்றுள்ள பௌதீக வாதம்~தொழில் நுட்ப விருத்திச் சிந்தனைகள் மானிட விழுமிய வீருத்தித் துறைகளைப் பாதித்து வருகின்றன. தற்போது தலையெடுத்துள்ள திருட்டுக்கள், பொய்மை, சுயநலம், ஆக்கிரமிப்பு யுத்தங்கள், கொலைகள் குற்றங்கள் போன்றவற்றால் கல்வியானது தொடர்ந்து ரோபோ போன்ற உணர்வின்றி விழுமியங்களைக் கவனத்தில் கொள்ளாத தலைமுறை ஒன்றை உருவாக்கி விடுமோ என்ற அச்சம் இன்றைய உலக சூழ்நிலையில் எழுந்துள்ளது. இவ் அச்சத்தைப் போக்கி பூரண மனிதத்துவத்தை நோக்கிய கற்றல் கலாச்சாரத்தை மானசீகமாக அமைக்க ஆசிரியர்களினாலேயே முடியும். அதற்கான அர்ப்பணிப்பே இன்றைய நன்நாளில் வேண்டப்படுகின்றது.

பா. தனபாலன் (இதழாசிரியர்)

## கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள் ஆணையாளர் நிஹால் ஹேராத் அவர்களின் செய்தி

ஆசிரியர் கல்வி எமது கல்வி முறையில் உள்ள மிக முக்கியமான ஒரு அலகாகும். புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆசிரியர் கல்வி மேம்பாடு முக்கிய இடம் வகிக்கின்றது. இதன்படி உலக வங்கியின் அனுசரணையுடன் கல்வி, உயர் கல்வி அமைச்சு பல வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. கல்விக்கல்லூரிகளை விஸ்தரித்து ஆசிரிய கல்வியின் தரத்தையும், சந்தர்ப்பத்தையும் மேம்படுத்துவது இவ்வேலைத் திட்டங்களுள் ஒன்றாகும்.

இன்று நாட்டில் பதின்நான்கு தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆசிரியர்களுக்கு சேவை~முன் பயிற்சியை வழங்குவதுடன் நான்கு புதிய கல்லூரிகள் இவ்வருடத்தில் ஆரம்பமாகின்றன. இத்தொடரில் மூன்றாவது கல்லூரி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியாகும். கல்வி யமைச்சரின் உதவியுடன் இப்புதிய கல்வியியற் கல்லூரியின் துரித செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும். இக் கல்லூரியின் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இலங்கையின் கல்வி நிருவாகச் சேவையின் III ஆம் தரத்திற்கு தமிழ்மொழி மூல உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சை

விரைவில் மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் பாடங்களுக்கு ஆயத்தப்படுத்த வேண்டும். நுண்ணறிவுச் சோதனை, கிரகித்தல், கல்வி நிர்வாகம் தொடர்பான விடய ஆய்வு. இவ்வாறான பரீட்சைக்கு முகம் கொடுக்கும் வழிகாட்டல்கள், செயலமர்வுகள் எமது பிரதேசங்களில் மிகக் குறைவு. அத்தோடு இருக்கின்ற அறிவைக் கொண்டு பரீட்சை எழுத முடியாது. பரீட்சைக்குக் கட்டாயம் தயாராக வேண்டும். இல்லையெனில் எமது பிரதேசத் தெரிவுகள் குறையும். எனவே பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துபவர்கள் நிறையவே விடயங்களை அறிய வேண்டும். பொருத்தமான வழிகாட்டல்களைப் பெறச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல் நல்லது.

# சமூகமாற்றத்தின் மாபெரும் சக்தி ஆசிரியரே

நாகரிக சமூதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஆசிரியர் எடுத்துவரும் முயற்சி விலைமதிக்க முடியாதது. இதனால் அக்காலத்தில் ஆசிரியர் வணங்கப்படக் கூடிய நிலையில் விளங்கினர். அன்று மாணவன் கீழ்ப்படிவுள்ள பண்புகளைக் கொண்டவனாகவும் ஒழுக்க சீலமுள்ள ஒருவனாகவும் அமையப் பெற்றது: ஆசிரியரில் லத்தில் அவன் பெற்ற கல்வியினாலேயாகும். அன்றைய ஆசிரியன் கடமை, பொறுப்பு என்பவற்றைச் சரியான முறையில் நிறைவேற்றியது: தாம் வாழ்ந்த சமூகத்திற்குச் சிறந்த பூரணமான பிரஜை ஒருவரைத் தோற்றுவிப்பதற்குரிய உரிமை தனக்குண்டு என்ற பரிசுத்த எண்ணத்திலேயேயாகும். அதற்காக வேண்டி மாணவரினால் கிடைக்கப் பெற்ற காணிக்கைகள் சிறியவைகளாயிருந்த போதிலும் அவை மிகப் பெறுமதியானவைகளென்று கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் காரணமாக ஆசிரியர்சமூகத்திற்கு இன்றியமையாத ஒருவராக இருந்தார். கௌரவத்திற்கும் மரியாதைக்குமுரிய ஓர் உத்தமராகவும் விளங்கினார். சமூக மாற்றத்தின் மிகப் பெரிய சத்தியாகவும் ஆசிரியர் அமைந்து விட்டார்.

ஆனால் இன்று இந்நிலை மாற்றமடைந்து பணத்தின் பின்னால் ஓடிச்சென்று கொண்டிருக்கும் ஓர் சக்தியாக அமைந்துள்ளது. அவ்வாறேற்பட்டதேன்? இலங்கையின் சமூக கலாச்சாரங்களுக்குப் பொருத்தமானதாக இருந்த கல்வி முறை அடிக்கடி ஏற்பட்ட வெளிநாட்டு பிரவேசம் ஆக்கிரமிப்பு என்பன காரணமாக வர்த்தக முறைக்குத் தள்ளப்பட்டது. போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆக்கிரமிப்புக்களால் பாரிய அளவில் மாற்றங்களுக்கு வழிவகுத்த, மிஷனரிக்கல்வி முறையின் செல்வாக்கு காரணமாக தேசியத் தன்மைக்குப் பாதிப்பு ஏற்பட்டது. சம்பிரதாயங்கள், எண்ணங்கள், சிந்தனைகள் யாவும் மேலைத் தேச முறைகளைச் சார்ந்துவிட்டன. இதனால் ஆசிரியரும் வாணிபத்துறையைச் சார்ந்தவராகிவிட்டார். அரசாங்க தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

1865இல் ஆங்கில ஆசிரியர் 60ரூபா சம்பளம் பெறும்பொழுது தமிழ், சிங்கள ஆசிரியர் 20ரூபா சம்பளத்தையும்

1943இல் ஆங்கில ஆசிரியர் 130ரூபா சம்பளம் பெறும் போது சிங்கள, தமிழ் ஆசிரியர் 43ரூபா சம்பளத்தையும்

1958இல் ஆங்கில ஆசிரியர் 155ரூபா சம்பளம் பெறும் போது சிங்கள தமிழ் ஆசிரியர் 88ரூபா சம்பளத்தையும் பெற்றுப் பணம் முறை சார்ந்தவராக மாற்றமடைந்து விட்டார்.

பேரரசு முறைச் சமுதாயத்தின் வகுப்பு வேறுபாடுகளுக்கேற்ப உருவாக்கப்பட்ட சம்பள முறையொன்று, ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டமையினால் ஆசிரிய சேவை ஒரு தொழிலாக மாறிவிட்டது. சம்பள முறைகளின் முரண்பாடுகள் காரணமாக ஆசிரியர்களிடையே பகை,குரோதம், பேதம் என்பன தோன்றின. இந்நிலையில் ஆசிரியர்களின் சேவை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி அர்ப்பணிப்புடன் ஒழுங்கமைந்த ஆசிரிய சங்கங்களின் ஆர்ப்பாட்ட முறைகளினால் 'சமசேவைக்குச் சமசம்பளம்' எனும் போராட்டம் உண்டானது, அதன் பலாபலனாக 1976.05.01 தொடக்கம் ஆங்கில, சிங்கள, தமிழ் என்ற விசேட வேறுபாடுகளின்றி 355ரூபா சம்பளம் வழங்கப்பட்டது. இது சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒரு வெற்றியாகும். 1970-1977 வரை ஆட்சி செய்த ஐக்கிய முன்னணி அரசு இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர்களின் கௌரவத்திற்குப் பாத்திரமாக விளங்கியது.

சமசம்பளப் போராட்டம் வெற்றி பெற்ற போதிலும் அதில் மிகுதியாக இருந்த அம்சங்கள் பல காணப்பட்டன.

i. உரிய ஆட்சேர்ப்பு முறை
ii. உரிய பதவி உயர்வு முறை
iii. உரிய இடமாற்ற முறை

திறமை பெற்ற, சுறுசுறுப்பான ஆசிரியரை வகுப்பறையில் நிலை நிறுத்திக் கொள்ளக்கூடியதான வகையில் கவர்ச்சிகரமான ஒரு சம்பள முறை. என்பவற்றிற்காக ஆசிரிய சங்கங்கள் ஒன்று திரண்டன.

## ஆசிரியர் தினம்

முறையற்ற ஆசிரியரிட மாற்றங்கள் தொகையாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல் போன்ற கல்வித் துறையில் ஏற்பட்ட சீர்கேடுகள் அளவிலடங்கா குருத்துவத்தின் கௌரவம் குன்றிவிட்டது. சமூக மாற்றத்தின் மாபெரும் சக்தி ஆசிரியரல்லாது காடைத்தனமும் பணமுமே என்ற நிலை ஏற்பட்டது. இந்நிலையை மாற்றியமைப்பதற்கு 1966 ஒக்டோபர்மாதம் 5ம் திகதி பாரிஸ் நகரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரிய பிரகடனத்தைக் கவனத்திற் கொண்டு 1990 ஆகஸ்ட் மாதம் 6~10 வரை மத்திய அமெரிக்காவின் கொஸ்தாரிகாவே ஸன்ஜோஸே நகரில் "கொரப்ஸ்" ஹோட் டலிப் நடைபெற்ற உலக ஆசிரிய சங்கங்களின் மகா நாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த இலங்கைச் சுதந்திர ஆசிரிய சங்கத்தின் தலைவர் திரு. எம். பீ. மென்டிஸ் என்பவர் முன்மொழிந்த பிரேரணையின்படி ஒக்டோபர் 06ம் திகதி சர்வதேச ஆசிரியர் தினமாக அமைந்துவிட்டது. அத்திகதி ஆசிரிய சேவையை அமுல் நடாத்துவதற்கு மிகப் பொருத்தமான தினமாகியது.

1994.10.06 திகதிக்கு முன்பு பயிற்றப்பட்ட ஆசிரிய சம்பளத்தின் அடிப்படையில் நியமனம் பெற்ற ஓர் ஆசிரியர் பயிற்றப்பட்ட ஆசிரிய சம்பளத்திட்டத்திலேயே ஓய்வு பெற்றுச் சென்றார். படடதாரிச் சம்பள அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர் அச்சம்பளத்தின் படியே ஓய்வு பெற்றுள்ளார். 1994.10.06 இன் பின் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியராகச் சேவையிற் சேர்ந்த ஓர் ஆசிரியருக்குச் சேவைக்காலத்திலும் அவ்வவ் வகுப்புகளிலும் பெற்றுக் கொள்ளும் கல்வீமற்றும் தொழிற் தகைமைகள் என்பனவற்றின் அடிப்படையிலும் ஆசிரிய சேவையின் முதலாம் வகுப்பு வரை பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறப்புரிமைகள் கிடைத்துள்ளன.

1997.01.01 இன் பின்பு 3:1 வகுப்பில்
55140 - 9 ஒ 1320 - 8 ஒ 1560 - 79500 சம்பளத் திட்டத்தில் நியமனம் பெற்ற ஓர் ஆசிரியருக்கு.
67320 - 12ஒ 2460 - 96840 சம்பளத்திட்டமும் (2:11 வகுப்பிற்கு)
90420 ~ 7 ஒ 3000 ~ 1 ஒ 11420 சம்பளத்திட்டமும் (2:1 வகுப்பிற்கு)
117960 ~ 10ஒ 5520 ~ 17360 சம்பளத்திட்டமும் (1ம் வகுப்பு)
சம்பளத்திட்டங்களைப் பெற்றுக் கொண்டு ஓய்வு பெற கூடிய வசதி கிடைத்துள்ளது. 15 ஆண்டு சேவைக்காலத்தில் 20 புள்ளிகளை உழைத்துக்கொண்டு ஆசிரியர் சேவையின் 1 ஆம் வகுப்பிற்குத் தகைமை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் திறமையான ஆசிரியருக்குக் கிடைத்துள்ளது. 1994.10.06 இற்கு முன்பு சேவையில் சேர்க்கப்பட்ட சகல ஆசிரியர்களுங் கூடத் தகைமைகள் சேவைக்காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உரிய வகுப்புக்களின் உரிய சம்பளப்படிகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

சமூகமாற்றத்தின் மாபெரும் சக்தி ஆசிரியரே என்பதை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் ஆசிரிய சேவையை நிறுவியதன் மூலம் சரித்திர முக்கியத்துவம் பெற்ற ஒரு நடவடிக்கையை எடுத்திருப்பது பற்றி ஆசிரியர்களின் பாராட்டுக்கள் உரித்தாக வேண்டும். புதிய கல்விச் சீரமைப்பு ஆலோசனைகளை அமுல் நடாத்துவதற்கு அர்ப்பணிப்புடனும், மனப்பூர்வமாகவும் செயற்பட்டு சமூக மாற்றமொன்றை ஏற்படுத்தும் பொறுப்பை ஆசிரியர்களேற்றுத் தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு ஆசிரிய தினமாகிய இத்தினத்தில் சகலரும் உறுதி பூணுவோமாக.

**திரு. எம். எஸ். பெரேரா**

# நாளைய தினத்திற்கான உலகை அமைப்பது ஆசிரியரின் கடப்பாடாகும்

எங்கள் பிள்ளைகளுக்காக நாங்கள் மீதப்படுத்தும் உலகம் எவ்வாறானதாக இருக்க வேண்டுமென்பது பெரும்பாலும் அவ்வுலகத்திற்காகச் சேமித்து வைக்கும் பிள்ளைகளின் கல்வியின் தன்மையிலேயே தங்கியுள்ளது. பிள்ளைகளின் சமூக, பொருளாதார பின்னணி, இனம், மதம், அல்லது, ஆண், பெண் தன்மை ஆகிய கருத்திற் கொள்ளப்படாது உலகில் எந்த இடத்திலாயினும் வாழும் சகல பிள்ளைகளுக்கும் கல்வியைக் கொண்டு செல்லும் அதிமுக்கிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது ஆசிரியர்களிடத்திலேயாகும். 1990 ஆம் ஆண்டில் ஜோமனியில் சர்வதேச சமூகத்தினாலும் மீண்டும் 1995 ஆம் ஆண்டில் கோபனேகன் மகாநாட்டிலும் இவ்விலக்கை அடைவது சம்பந்தமான தேவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் நியாயமான, மிகவும் உறுதியான, மிகவும் நடுநிலையான மற்றும் மிக அமைதியான உலகைக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஆசிரியர் தொழிலுக்கே உரித்தான ஒன்றாகும்.

எல்லா புதுச்சந்ததியினர்க்கும் கல்வியையும் பயிற்சியையும் வழங்குதல், அவ்வாறே பல்வேறு வகைகளில் அவர்களை வழிப்படுத்தல் என்பன பற்றிய அடிப்படைப் பொறுப்புக்கள் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வியை அடிப்படையாகக் கொண்ட பொருளியலை நோக்கி நாங்கள் அதிகமாக நெருங்கிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஆயுட் காலக் கற்றல் மற்றும் மாறிவரும் தொழில்வாய்ப்புக்கள் பற்றிய சம்பந்தங்களின் சவால்கள் என்பவற்றை எதிர்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்களின் போது ஆசிரியர்களால் அப்பொறுப்புக்கள் ஏற்கப்படவேண்டும். அவர்கள் நாளையகற்கும் சமுதாயத்தின் பங்குதாரர்களாவர்.

## அர்ப்பணிப்பு

ஆசிரியர்கள் தமது கடமையின் போது எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் தடைகள் என்பவற்றைப் பொருட்படுத்தாது, தமது கடமையின்பால் உள்ள அர்ப்பணத் தன்மை காரணமாக அவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்விசேட தினத்தில் நாம் அவர்கள் யாவருக்கும் நன்றிக்கடன் பாராட்டுகின்றோம். விசேடமாகப் பல்வகையான கஷ்டமான சூழ்நிலைகளில் கடமையாற்றுகின்ற, அதாவது புத்தகம், பேனை, கரும்பலகை, வெண்கட்டி போன்ற முக்கிய பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அயராது பாடுபடுகின்ற ஆசிரியர்கள், போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும், போர் முனைகளுக்கு அண்மையிலுள்ள அகதி முகாம்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், தூரப் பிரதேசத்திலுள்ள கிராமியப் பாடசாலைகள் என்பவற்றில் தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றி வருகின்ற ஆசிரியர்கள் ஆகிய சகலருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகெங்கும் பரந்து விரிந்த கடமையிலீடுபட்டுள்ள சுமார் 50 மில்லியன் எண்ணிக்கையிலான ஆசிரியர்களுள் $^{1}/_{3}$ பகுதியினர் ஆசிரியர் பயிற்சி அற்றவர்களாகவும், இன்னும் $^{1}/_{3}$ பகுதியினர் உரிய முறையில் கடமையைச் செய்வதற்குத் தயாரானநிலையில் இல்லாதவர்களாகக் காணப்படுவதாகவும் புள்ளி விபரங்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. உலகின் பெரும்பாலான பகுதிகளில் வாழ்ந்து கொண்டு சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுக்குக் கிடைக்கின்ற வேதனம் அவர்களின் தொழிலின் மகத்துவத்திற்கு ஏற்றதாக அமையவில்லையென்பதும் பல பகுதிகளாக அச்சம்பளம் வழங்கப்படுகிறதென்பதும் நாம்அறிந்துள்ள விடயமே. பெரும்பாலான ஆசிரியர்கள் போதிய கற்றல் கற்பித்தல் வசதிகள் அற்ற சூழ்நிலையில் செயற்படுவதால் ஆற்றல் மிகு அறிவாளிகள் ஆசியதொழிலைத் தெரிவு செய்வதற்குப் பின்வாங்குகிறார்கள்.

புதிய நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் எங்களுக்குப் பாடசாலைக்குச் செல்கின்ற எதிர்கால மக்கள் சந்ததியினர்களுக்காக வேண்டிய கூடுதலாக இலட்சக் கணக்கான ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். புதிய ஆசிரியர்களுக்கும் ஏற்கனவே சேவையிலீடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கும் ஆசிரியப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டி ஏற்படும். அதே போன்று தொழில் நுட்ப உலகின் சவால்கள் சந்தர்ப்பங்கள் என்பவற்றை எதிர் கொள்ளக் கூடியதான தொழிற்பயிற்சித் தரங்கள் ஆசிரிய உபகரணங்களின் தரங்கள் என்பவற்றை மேம்படுத்துவதும் அவசியமான கருமங்களாகின்றன. விசேடமாகத் தொழில்நுட்ப வேறுபாடுகள், சிறப்பறிவு பெறுதல் என்பன காரணமாகத் தொழில்களின் இயல்பு, தொடர்ச்சியாகவே மாறிக்கொண்டு வரும் இவ்வுலகில் நிலையான சீவனோபாயமொன்றை ஒழுங்கு செய்து கொள்வதற்கான அவசிய ஆற்றல்களைப் பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி முதியோருக்கும் பெற்றுக் கொடுப்பதற்குரிய விளக்கம், அறிவு என்பன ஆசிரியர்களிடத்தே உண்டா என்பது பற்றி நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

யூலை 28ம் திகதி யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா அவர்களும் பாரியாரும் மங்கள விளக்கேற்றுவதையும் பீடாதிபதி திரு.தி.கமலநாதன் அவர்களும், விரிவுரையாளர், மாணவ முதல்வர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

# உளநலம் பாதிக்கப்படுதல் தொடர்பான பூக்கோவின் கருத்துக்கள்

**கலாநிதி சபா ஜெயராசா**
சிரேஸ்ட விரிவுரையாளர்
கல்விப்பீடம்,
தலைவர், நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனிதஉளநலம் பாதிக்கப்படுதல் தொடர்பான மிச்சேல் பூக்கோ (MICHEL FOUCAULT) அவர்கள் முன்மொழிந்த கருத்துக்கள் நவீன சமூக உளவியல் ஆய்வுகளிற் பல கோணங்களிலே திறனாய்வு செய்யப்படுகின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட பிரான்சு நாட்டின் உளவியற்கோலங்களை நேரிலே தரிசித்தும், அனுபவித்தும் முகிழ்த்தெழுந்த ஆய்வறிஞராகவும், செயல் வினையராகவும் பூக்கோ விளங்கினார். சார்த்தர், ஹெகல், பிராய்ட் மார்க்ஸ், அல்தூஸ்ஸர், முதலானோரின் கருத்துக்களால் ஊட்டம் பெற்ற பூக்கோ அவர்கள் ஊசலாடும் கருத்தியல்வாதியாகவும் விளங்கினார். ஒரு வகையிலே பிரான்ஸ் நாட்டின் நிலை குலைந்த வீழ்நிலைக் கோலங்களினது குறியீடாகவும் அவரது உளவியல் கருத்துக்கள் அமைந்தன.

1973ஆம் ஆண்டில் பூக்கோ உளநலம் பாதிக்கப்படுதலை விளக்கும் ஒரு நூலை வெளியிட்டார். பிரீரிரிவயிற் (PIERRE RIVIERE) என்ற இருபது வயது நிரம்பிய நோர்மன் விவசாயின் சின்னாபின்னப்பட்ட உளக்கோலங்களை அந்நூல் சித்தரித்தது. உளநலம் பாதிக்கப்பட்டமையாலும், வன்நடத்தை மேலோங்கலாலும் அந்த இளம் விவசாயி தனது குடும்ப உறுப்பினர்களைக் கொன்று குவித்தான்.

தனது தந்தையார்பால் அவனுக்கு அனுதாபம் இருந்தது, தனது தந்தையாரை நச்சரிப்பிற்கும், துன்புறுத்தலுக்கும் தொடர்ந்து உள்ளாக்கிய தாயாரைக் கொன்று தந்தையை மீட்டெடுக்க முயன்றதாக அந்த இளம் விவசாயி குறிப்பிட்டுள்ளான். அவனது நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாத கொடூரமாக இருந்தாலும் அவனது உளநிலையைப் புரிந்து கொள்ள முடியாத உளமருத்துவர் அவன் உளம் முரிந்த பைத்தியம் (INSANE) என்ற முடிவிற்கு வருகை பூக்கோவின் கருத்தாடலின் மீது செல்வாக்கைச் செலுத்தியது. சமூகத்தின் நியமங்களுக்கு இணங்கிச் செல்லாதவிடத்து தனிமனிதன் ஓரங்கட்டப்படுதல் பூக்கோவின் மனத்தைத் தாக்கியது. சமூகத்தின் நியமங்களால் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டவர்களின் இதய ஒலி கூட்டு மொத்தமான பொது அபிப்பிராயத்தால் நிராகரிக்கப்படுதலை பூக்கோ கண்டார்.

நசுக்கப்பட்ட அந்த இதய ஒலிக்கு உரமட்ட வேண்டுமென்ற உந்தல் அவரிடத்தே எழுந்தது.

பொதுவுடமைக் கருத்தியலில் ஆரம்பத்தில் ஊறியிருந்த பூக்கோ அவர்கள் நித்சேயின் இருப்பியற் கருத்தியலுக்கு நிலைமாறினார். நிச்சே, சோசுரே, லக்கன் முதலியோரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஆய்வுகளை முன்னெடுத்த அவர் மனிதஉணர்வுகள் மற்றும், சமூக நியமங்கள் முதலியனவற்றை வெளியிடுவதிலும், கட்டமைப்புச் செய்வதிலும் மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தொடங்கினார். சமூக ஒழுங்கமைப்பானது எந்த ஒரு செயலையும் நிறைவேற்றுவதற்கும் முன்னர் மொழி வாயிலாகவே கருத்துக்களையும், உணர்வுகளையும் கட்டமைப்புச் செய்கின்றது. மொழிக்கட்டமைப்பையும், மொழியின் கருத்தமைவியத்தையும் (DISCOURSE) ஆராய்வதன் வாயலாகப் பல அடிப்படை வினாக்களை எழுப்ப முடிகின்றது என அவர் கண்டார். அவையாவன.

அ. குறிப்பிட்ட ஒரு கருத்து யாருக்கு சார்பாக அமைகின்றது?
ஆ. யார் அக்கருத்தைப் பற்றிப் பேசுவதற்கு முன்னுரிமையுடையவர்கள்?
இ. அக்கருத்து முன்வைக்கப்படும்பொழுது யார் மௌனமாக இருக்க நேரிடுகின்றது?
ஈ. யார் அக்கருத்தின் ஊற்றாக அமைகின்றார்கள்?
உ. யார் அக்கருத்தினால் ஒதுக்கப்படுகின்றார்கள்?
ஊ. எவை விலக்கி வைக்கப்படுகின்றன?

இவ்வாறு மொழி தொடர்பான பல்வேறு வினாக்களை எழுப்பிய பூக்கோ அதிகாரத்தின் நடுநிலையங்களுடன் (CENTERS OF POWERS) மொழி கொண்டுள்ள தொடர்பை ஆழ்ந்து நோக்கினார்.

நவீன சமூகத்தில் அறிவும், அதிகாரமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளமையை அவர் ஆழ்ந்து நோக்கினார்.

உளக்குலைவு (MADNESS) குற்றமுனைப்பு (CRIME) பாலியல் முனைப்பு (SEXVALITY) முதலியவை அவரது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. அதிகார நிரலமைப்புக்கு ஏற்றவாறு ஆசாரங்களும், நடைமுறைகளும், அவற்றுக்கியைந்த சொற்களும், எண்ணக் கருக்களும் உருவாக்கப்படுதலை பூக்கோ இனங்காட்டினார். இவற்றால் நலன் பெறுவோர் ஒரு சாராரும் விலக்கி வைக்கப்படுவோர் இன்னொரு சாராரும் என்ற வகையிலே சமூகத்தின் இயல்புகள் பிரிந்து காணப்படுகின்றன.

அதிகாரமானது எதிர்மறையாகச் செயற்படும் பொழுது அறிவானது திரித்துக் கூறப்படுகிறது. மழுங்கடிக்கப்படுகிறது. - விலக்கி வைக்கப்படுகின்றது. இதன் பெறுபேறாக அதிகாரத்தோடு இணைந்த குழுவினர் ஏனையோர் மீது அதிகார வலுவைப் பிரயோகம் செய்கின்றனர். இதற்கு உதாரணமாக அதிகாரத்திலுள்ளவர்கள் பொதுமக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி அறிவைத் திரிப்பதை குறிப்பிடலாம். இதனால் சமூகத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் அதிகாரம் சார்ந்த நீரோட்டத்திலிருந்து பிரித்து வைக்கப்படுகின்றார்கள்.

அதிகார முறைமையானது பல்வேறு குழுமத்தடைகளையும், விலக்குகளையும் ஏற்படுத்துகின்றது. விலக்குகள் அதிகாரத்தின் தேவைக்கேற்றவாறு மாறுபட்டும் நிற்கும். உதாரணமாகப் பெண்களின் அரசியற் கட்சி ஈடுபாடு ஒரு காலத்தில் விலக்காத (EXCLUSION) இருந்தது. அது இன்று ஓர் ஏற்புடைமையாகக் கொள்ளப்படுகின்றது.

ஆசாரங்கள், சடங்குகள் வாயிலாகவும் அதிகார முறைமையானது ஒரு சாராரை விலக்கி வைக்கின்றது. உதாரணமாக விழாக்களிலே மாலை சூடுதல், மலர்ச் செண்டு வழங்குதல் முதலியவற்றால் ஒரு சாரார் புகழப்பட்டு இன்னொரு சாரார் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.

ஆதிக்கக் தூல் எழுப்புதல் வாயிலாகவும் சமூகத்தில் ஒரு பகுதியினரை விலக்கிவைக்கப்படுகின்றனர். உதாரணமாக ஐரோப்பிய அறிவு மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி ஒரு கால கட்டத்திலே ஆசியாவின் அறிவுக்குரல் ஒடுக்கப்பட்டது. மொழி, மதம், இனத்துவம் என்ற அடிப்படையிலும் ஒரு சாரார் விலக்கி வைக்கப்படுதல் உண்டு.

"உளநலம் பாதிக்கப்படுதலும் நாகரிகமும்" (MADNESS AND CIVILIZATION) என்ற நூலிலே பூக்கோ அவர்கள் உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் கால்கட்டங்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன பதினாறாம் நூற்றாண்டில் குஷ்டரோகமும் கூடுதலாகப் பெருக்கெடுத்தது. பதினேழாம் நூற்றாண்டு நிலவரங்கள் ஒவ்வொருவரையும் உளநிலம் பாதிக்கப்பட்டவர்கள் என்றநிலைக்குத் தள்ளியது.

உளநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வைத்தியசாலைகளும் திறக்கப்பட்டன - உளநலம் பாதிக்கப்படுதலைத் தீர்ப்பதற்குரிய புதிய விஞ்ஞான அணுகுமுறைகள் உருவாக்கப்பட்டன.

> கட்டுரையாசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா அவர்கள் யாழ்ப்பாணத்து ஈழத்தமிழர்களின் கல்வியியல் கலையியல் நவீன திறனாய்வியல், தொடர்பான தனது எழுத்தாக்கங்களை சமூக அறிவியல் சேவை நோக்கில் வெளியீடுபவர். இவரது கல்வியியல் பார்வைப் புலம் மிக அகன்றது.. அறுபதாவது அகவையில் அமைதியாகச் சேவையாற்றும் அவருக்கு கல்வியியல் கல்லூரிச் சமூகம் வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றது.
>
> இக்கட்டுரை யாழ்பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தொடங்கியுள்ள MEd கற்கை நெறி பாட அலகிற்கு உட்பட்டது தமிழ் மொழியில் பூக்கோவின் கருத்துக்களை முதல் முதலாக வெளிப்படுத்துவதாகும்.

இந்தப் புதிய அணுகுமுறைகளும், சிகிச்சை முறைகளும் முன்னரிலும் கூடுதலான ஒடுக்கு முறைப் பண்புகளைக் கொண்டிருந்தன என பூக்கோ விளக்கினார்.

மருத்துவர்கள் எவை சமூகத்தில் பொது நியமங்கள் என்று கருதினார்களோ அதற்கேற்றவாறு உளநோயாளியின் மனம் சீர்திருத்தி அமைக்கப்படுவதற்கு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளிலே பல கேள்விக்குறிகள் உள்ளடங்கியிருந்தன. பெரும் படைப்பாளிகளினதும், உலுக்க வைக்கும் சிந்தனையாளர்களதும் கருத்துக்கள் ஒருவகையில் பைத்தியத்திற்கு அண்மித்த நிலையில் இருப்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது என்பதை பூக்கோ சுட்டிக் காட்டினார்.

பைத்தியம் என்பது ஒரு நோய்யம் (FACT) அன்று, அது தீர்ப்புக் கூறுதலால் எழந்தது. ஒரு மனிதர் இன்னொருவர் பற்றித் தீர்ப்புக் கூறுதலால் அது தோன்றியது என்று பூகோ குறிப்பிட்டுள்ளார். அதாவது சமூகப் பிரிவினருக்கிடையே காணப்படும் அறிவாதாரங்களின் மட்டங்களை வேறுபடுத்துவதற்கு பூக்கோ முயன்றார். இதன் விளைவாக அவர் மனித விஞ்ஞானங்களின் தொல்பொருளமைப் பண்புகளையும் (ARCHAEOLOGY OF HUMAN SCIENCES) விரிவாக ஆராய்ந்தார்.

புத்திசாலி எஜமானர்களிலும் பார்க்க பைத்தியக்கார ஏவலாளிகள் சிலசமயங்களில் புத்திசாதுரியத்தடனும், நுண்மதியுடனும் செயற்பட்டமையை அவர் சேக்ஸ்பியரது ஆக்கங்களில் இருந்து தெளிவுபடுத்திக் காட்டினார். தனிமனித உள்ளார்ந்த மனத்தின் இயல்புக்கும் சமூக நியமங்களுக்குமிடையேயுள்ள இடைவெளி பெரிதாகும் நிலையில் ஏற்படும் அவலநிலையை ஆழ்ந்து நோக்கிய ஆய்வாளர்களில் பூக்கோ விதந்து குறிப்பிட வேண்டிய ஒருவராவார்.

உளநலத்துக்கும் பாலியல் சார்ந்த சீராக்கத்திற்குமிடையே நேரான தொடர்புகள் காணப்படுகின்றன. ஐரோப்பாவின் 17 ஆம் நூற்றாண்டின் நிலவரங்களை ஆய்வு செய்த பூக்கோ பாலியல் தொடர்பான இரகசியப் பாங்குகள் அக்காலத்திலே காணப்பட வில்லை என்று குறிப்பிட்டள்ளார்.

எதுவித ஒழிவு மறைவுமின்றி, வாழ்க்கையின் ஒரு கூறாகவே அக்காலத்தைய மக்கள் பாலியலைக் கருதினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ச்சியுற்ற விக்ரோரிய ஒழுக்கவியல் (VICTORIAN ETHIC) கோவைகள் மேற்கூறிய நிலவரங்களிலே மாற்றங்களைக் கொண்டு வந்தன. புதிய மாற்றங்களோடு இணைந்த கட்டுப்பாடுகளும் வலியுறுத்தல்களும் சமூக நிறுவனங்களிலே கட்டியெழுப்பப்பட்டன. கட்டுப்பாடுகளும், வலியுறுத்தல்களும் மனத்தில் அழத்தி வைத்தல் (REPRESSION) என்ற செயற்பாட்டினை ஏற்படுத்தி உளநலத்தைப் பாதிப்படையச் செய்தன.

இருபதாம் நூற்றாண்டில் பாலியல் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டபோதும் அது தொடர்பான பிரச்சனைகள் நீடித்தன என்று பூக்கோ எடுத்துரைத்தார். பாலியல்மத்தியாகக் கொண்ட உளப்பகுப்பு ஆய்வுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. பாலியலை மத்தியமாகக் கொண்டே மனித ஊக்கல்களும் கற்பனைகளும், இலட்சியங்களும் வளர்ந்து வருகின்றன. இதனால் உளப்பகுப்பாய்வாளர்களும், உளமருத்துவர்களும், உளவளம் செய்பவர்களும் செல்வாக்குப் பெறத் தொடங்கியுள்ளார்கள் என்பது பூக்கோவின் அவதானிப்பு.

1968ஆம் ஆண்டிலே பிரான்சு நாட்டிலே ஏற்பட்ட கிளர்ச்சியின் விளைவாக பூக்கோவும் அவரது நண்பர்களும், புத்திஜீவிகளும் சிறை வைக்கப்பட்டார்கள். அந்நிலையில் அவர் சிறைச்சாலை நிலவரங்கள், உளநலம், ஒழுங்கு, கட்டுப்பாடு முதலியனவற்றை உள்ளடக்கிய ஒரு நூலாக்கத்தை வெளியிட்டார். ஒழுக்காறு என்பது தனிமனிதர்கள் சிந்தனையை திரட்டிக் கொள்ளவும், காரணகாரியத் தொடர்புகளை வடிவமைத்து சமூகத்திலே நியமமான நடத்தைகளை மேற்கொள்ள வடிவமைத்துக் கொடுக்கின்றது. தன்னியக்கமாக ஒருவரைத் தொழிற்பட வைப்பதற்கு அது துணை செய்கின்றது என அவர் விளக்கினார்.

## திறனாய்வு

பிரபல அமைப்பியல் கோட்பாட்டாளர் அல்துஸ்ஸரது செல்வாக்கினால் பூக்கோ அவர்கள் பிரஞ்சுகமி யூனில்ட் கட்சியில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்தார். முன் றாண்டுகளின் பின்னர் அவர் அதனை உதறித் தள்ளிவிட்டு அரசபணியாட்சியாளராகப் பணி புரிந்தார். ஒரு பண்பாட்டு உத்தியோகத்தர் என்ற பதவியை ஏற்று போலாந்திலுள்ள பிரான்ஸ் நாட்டு தூதுவரகத்திலே அவர் பணி புரிந்தார். அந்த அனுபவம் அரச அதிகார இயல்புகளை அவருக்குத் தெளிவுபடுத்தியது. பின்னர் அவரது நெருங்கிய மாவோவின் சிந்தனைகளோடு தொடர்புகளை ஏற்படுத்தினார். அதன் விளைவாக அவர் ஒரு தீவிர செயல்வினைஞரானார்.

பிரான்சின் தீவிர முதலாளித்துவ வளர்ச்சியும், தீவிரநகர வளர்ச்சியும், அதிகார முனையங்களும், பண்பாட்டு சீரழிவுகளும் அவரிடத்தே பாதிப்பை ஏற்படுத்தின. அவர் எயிட்சினால் தாக்கப்பட்டமையும், தனிமைப்பட்டமையும், உளநலப்பாதிப்பு, குற்றச்செயல்கள், பாலியல் முனைப்பு தொடர்பான மாற்றவகைகள் கருத்துக்களை அவரிடத்தே ஏற்படுத்தின. மேலைத் தேசத்தின் நுண்மதி விழிப்புணர்வின் பிற்பட்ட காலத்தைய கண்ணோட்டத்தில் உளநலப்பாதிப்பு, குற்றச் செயல்கள், பாலியல் முனைப்பு முதலியவற்றை அவர் பரிசீலித்தார்.

ஒருபுறம் தீவிரவாதமும் மறுபறம் அந்நியமாதலும் என்ற பரிமாணங்கள் அவரது எழத்தாக்கங்களிலே இழையோடியுள்ளன.

**FOOT NOTES**

1. ERIBON,D. MICHEL FOUCAULT. HARWARD UNIVESITY PRESS, CAMBRIDGE. 1991. P.58.
2. SHERIDAN. A. THE WILL TO TRUTH, TAVISTOCK, NEW YORK. 1980. P.12
3. FOUCAULT. M. THE ORDER OF THINGS. ROUT LEDGE. LONDON, 1986.
4. FOUCAULT. M. THE BIRTH OF THE PRISON. PANTHEON. NEWYORK. 1977.
5. RADHIKARA COOMARASAMY, INTRODUCTION TO SOCIAL THEORY KONARK PUBLISHERS PVT LTD. DELHI. 1994. P. 124.

## மண்ணின் மைந்தர்களுக்கு மகுடம்

யாழ்ப்பாணப் தேசிய கல்வியியற் கல்லூரியின் 1வது இல்ல பாய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் செப்டெம்பர் 16ல் திகதி வெகு சிறப்பாக நடைபெற்றது. மூன்று இல்லங்களாக ஆசிரியர்களை பிரிக்கப்பட்டு போட்டிகளில் பங்குபற்றினர். பேராசிரியர் சு. வித்தியானந்தன் இல்லம். பேராசிரியர் அ. துரைராஜா இல்லம். பேராசிரியர் ப. சந்திரசேகரம் இல்லம் என்ற நாமங்கள் சூட்டப்பட்டன. மண்ணின் மைந்தர்களாக இருந்து சமூகத்திற்குத் தமிழுக்குப் பெரும் சேவையாற்றிய பெருமக்களை நினைவு கூர்ந்து அவர்களது நாமங்களை இல்லங்களுக்குச் சூட்டப்பட்ட நிகழ்வு பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. பலநூறு கடிதங்கள் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி அவர்களுக்கு வந்தன. பத்திரிகைகளிலும் கடிதங்களாகத் தம் உணர்வுகளைப் பலர் வெளிப்படுத்தி இருந்தார்கள். தரிசின நன்றி றறவாலைக்கு ஒரு பெரிய உதாரணமாக இந்நிகழ்வு கொள்ளப்பட்டதைவிட கல்வியியற் கல்லூரிச் சமூகம் பேருவகையடைகின்றது.

இது போல பேரூர் பல முன்னுதாரணங்களுடன் கல்வி, சமூக சேவை நோக்கினூடாகப் புதிய வரலாறுகள் ஆக்கப்பட உள்ளன. பேற்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பேராசிரியர்கள் பற்றிய வரலாற்று விபரங்களும் தொகுக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் தொடர்பான விபரங்கள், படங்கள், ஆவணங்கள் வைத்திருப்போர் கல்வியியற் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

செல்வி சு. சுகந்தினி
திருமதி ஞா. கணேசநாதன்

## ஆசிரியர் பொறுப்பு

கற்பித்தல் ஒரு பொறுப்பாக கருதப்படல் வேண்டும். ஒரு வகையில் அதுவொரு சமூகப் பணியாகும். அதன் நிமிர்த்தம் மிகுந்த முயற்சியோடு இடையறாது மேற்கொள்ளும் கற்றல் வாயிலாகப் பேணும் விசேட அறிவு மற்றும் விசேட திறமைகள் என்பன ஆசிரியரில் மிளிர வேண்டும். மேலும் தம் பொறுப்பில் உள்ள பிள்ளைகளின் கல்வி, நலன் என்பன தொடர்பாக ஒரு தனி நபர் என்ற ரீதியிலும் கூட்டாகவும் தாம் பொறுப்பினைத் தாங்குவதாக அவர் உணருதல் வேண்டும்.

--யுனெஸ்கோவின் ஆசிரியர் சாசனம்

# தாயகத்தில் நவீன கல்வியியல் சுபீட்சத்தை நோக்கி....

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி

♣ **வினா**

யாழ்ப்பாண ஆசிரியர் கல்வி வரலாற்றில் ஒரு புரட்சியாகவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆரம்பம் கொள்ளப்பட வேண்டும். இக்கல்லூரியைத் தொடக்க தனி ஒருவராக வந்து இரவு,பகல், ஊரடங்கு நேரங்கள்பாராது மிகப் பல கடினமான பாதைகளைக் கடந்து பாடுபட்டீர்கள். பல துன்பங்களை அனுபவித்தீர்கள். கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் இயங்க நடவடிக்கை எடுத்தபோது மாணவர் விடுதிகளை அண்டிய பகுதிப்பற்றைகளை ஏனையவர்களுடன் இணைந்து வெட்டினீர்கள். இரவுநேரங்களில் பாயோ தலையணையோ இன்றி கல்லூரியிலே படுத்துறங்கினீர்கள். இவ்வாறு இன்னும் பலபல அனுபவங்கள் யாழ்ப்பாண மண்ணில் உங்களுக்குக் கிடைத்தது. இவற்றினூடு நீங்கள் எதிர்பார்த்த நோக்கம்! அவா!! என்னவாக இருந்தது.

**விடை**

முன்னர் கல்வியியற் கல்லூரியிலே கடமையாற்றிய காலங்களில் எனக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு. யாழ்ப்பாணத்திலே கல்வியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டுமான முக்கிய தேவையையும் அவசியத்தையும் உணர்ந்து கொண்டேன். இங்கே அதற்கான முக்கிய காரணங்கள் இரண்டினை என்னால் முன்வைக்க முடியும்.

1. கல்வியல் கல்லூரிகளில் கற்பதற்காக வவுனியா, மட்டக்களப்பு வரும் யாழ் மாவட்டப் பிள்ளைகள் போக்குவரத்து மற்றும் பல்வேறு பிரச்சனைகளால் பட்ட கஷ்டங்களை நேரில் கண்டு கொண்டதனால்.
2. யாழ்ப்பாண மாவட்டத்திலே நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையினை கல்விக் கல்லூரி கணிசமானளவு குறைத்து எம் எதிர்காலச் சிறார்களின் கல்விக்கு நல்ல பயனளிக்கும் என்ற நம்பிக்கையினால்ஆகும். மேலும் மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கம் என் உள்ளத்தில் இருந்தது.

♣ **வினா**

இந்தக் கல்வியல் கல்லூரியை ஒரு இக்கட்டான காலகட்டத்தில் ஆரம்பித்து அதன் தலைவராகவும் இருக்கும் நீங்கள் அதன் செயற்பாட்டுச் சிக்கல்கள் பற்றிக் கூறுங்கள்?

**விடை**

சிக்கல் என்று நாம் எதை நினைத்தாலும் அது சிக்கலாகத்தான் தெரியும். நான் எதையும் சிக்கல் என்ற நினைப்பதில்லை சிக்கல் அல்லது பிரச்சனைகள் எம்மை அணுக விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றும் யாழ்ப்பாண மண்ணில் கல்வித்துறையில் உணர்வு பூர்வமாக ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிக்கல்கள் தோன்றுவதறிது. ஏனெனில் யாழ்ப்பாண மண் கல்விக்கு முதன்மையளிப்பதும். கல்வியில் சாதனை புரிவதும். கல்விக்காக எதையும் ஆற்றத்தயாராக இருப்பதும் யாரும் அறிந்ததே. எனவே மேற்கூறிய இரண்டு காரணிகளாலும் மிக இக்கட்டான காலகட்டத்தில் கல்விக் கல்லூரியை ஆரம்பித்தாலும் சிக்கல்கள் என்ற எதுவும் பெரிதாக எனக்கு எழவில்லை. மிகத்துடிப்புள்ள விரிவுரையாளர்கள், மெய்வருத்தம் பாராதுழைக்கும் கல்விக் கல்லூரி ஊழியர்கள், வெறுப்புமைந்த மாணவர்கள் – இவர்கள் என்பக்கம் இருக்கும் போது சிக்கல்கள் தோன்ற வாய்ப்பே இல்லை. என்றாலும் சில வேளை சில சக்திகள் சிறுசிறு தடைகள் போட்டாலும் தர்மத்தின் வழி நாம் செல்வதால் இறுதி வெற்றி எமக்கே கிடைத்து வருகின்றது.

♣ **வினா:**

1960-61 கல்விச்சட்டப்படி ஆசிரிய காலசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து



திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை, நல்லூர் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை, கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டன. அதன் பின் 40 வருடங்களின் பின் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி அரம்பமும் பரிமாணமும் எமதுதாயகத்தில் நவீன கல்வியியல் சுபீட்சத்தை நோக்கிய ஆரம்பப்படி எனக் கூறலாமா?

**விடை:**

ஆம். நிச்சயமாக இங்கு பல விடயங்கள் அவதானத்தில் கொள்ளப்பட வேண்டும். முக்கியமாக எமது சமூகம் இன்று பல விடயங்களில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் பின் தங்கியிருப்பதைக் கவலையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தக் கவலை உணர்வுபூர்வமாக இருக்குமேயானால் கடின உழைப்பின் மூலம் எம்மை அர்ப்பணித்து அதனை வெற்றி கொள்ளலாம். இதையே நான் வவுனியா கல்வியியல் கல்லூரியிலே கடமையாற்றிய காலத்தில் வெளிமாவட்டங்களில் கல்வி வளர்ச்சியையும் வாய்ப்பையும் பார்த்து இந்த வசதி யாழ்மாவட்டவன்னிப் பிரதேசப் பிள்ளைகளுக்கு இல்லையே என்று வேதனைப்பட்டதுண்டு. ஆனால் இங்கெல்லாம் எமது மாணவர்கள் பெறுகின்ற பெறுபேறுகளும் புரிகின்ற சாதனைகளும் என்னை வியக்க வைத்தது. இறுதியாக நடைபெற்ற க.பொ.த உயர்தரத் தேர்வில் யாழ் இந்துக்கல்லூரி மாணவன் நாட்டிலேயே முதலிடத்தைப் பெற்றதையறிந்து அவரது கடின உழைப்பின் உண்மையை உறுதி செய்து கொண்டேன். அந்த வகையிலேயே எமது மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் வழிகாட்டி வருகின்றேன். அவர்களும் நல்ல ஒத்துழைப்புத் தந்து வருகின்றனர்.

இன்னுமொன்று உலகவங்கியின் உதவியுடன் செயல்வடிவம் பெறுகின்ற கல்விக் கல்லூரிகளின் கற்கை நெறிக்கு நல்ல பல புதிய முறையியல்கள் புகுத்தப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தின் நாமும் உலகக் கல்விச் செல் நெறியுடன் இணைந்து கொள்ள வாய்ப்புண்டு.

♣ **வினா:**

தங்கள் கல்லூரியில் தற்போதுள்ள துறைகளுடன் வேறு எத்துறைகள் சேர்க்கப்பட வேண்டும் என எண்ணுகிறீர்கள்?

**விடை:**

ஆரம்பிக்கப்பட வேண்டிய துறைகள் எடுக்கும் போது அவை எமது பிரதேச ஆசிரிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். தற்போது எமது கல்லூரியில் ஆரம்பக்கல்வி. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சித்திரம், நடனம், சங்கீதம், நூலகமும் தகவல் முறையையும் ஆகிய துறைகள் உள்ளன. இவற்றிற்த மேலாக எமது மாவட்டத்தின் தேவை கருதி நோக்குவோமானால் உடற்கல்வித்துறை ஆரம்பிக்கப்பட வேண்டும். இங்குள்ள மாணவர்களின் தேவை கருதி நோக்கும் போது வர்த்தகத்துறைகளிலுள்ள மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய துறைகளும் புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

♣ **வினா:**

புதிய நல்லாசிரியர்களை உருவாக்கும் கல்வியியல் கல்லூரி, சமூகம் நோக்கிய கல்வி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் உள்ளன?

**விடை:**

நிறையவே உள்ளன. சமூகத்துடன் இணைந்த அபிவிருத்திகளை நோக்கியதாகவே கல்வியற் கல்லூரிகளின் பெரும்பாலான செயற்பாடுகள் அமைந்துள்ளன. இன்றைய சூழல், போக்குவரத்துத் தடை, யாழ்குடாநாடு ஏனைய பகுதிகளுடன் துண்டிக்கப்பட்டிருந்தமை என்ற பல காரணங்கள் பலவிடயங்களில் நம்மவர்களை பின்தள்ளப்பட்டுள்ளதற்க காரணங்கள்தான். ஆனாலும் கல்விச் சமூகத்தினர் அவ்வாறிருக்கமுடியாது. காரணம் அவர்கள் சமூகத்தின் வழிகாட்டிகள். சமூகம் அவர்களை நம்பியே தமது குழந்தைகளை அவர்களிடம் ஒப்படைக்கிறது. அவர்களைச் சகலவிதத்திலும் நற்பிரஜைகளாக்கி திரும்பவும் சமூகத்திடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்தினதுமாகும். இது எனது கருத்தல்ல கல்விச் சிந்தனையாளர் நூசோ அவர்களது கருத்து. எனவே கல்விக்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை மறந்துவிடலாகாது. கல்வியூடாக எதைச் செய்தாலும் அது சமூகத்திலேயே பாதிப்பை ஏற்படுத்தும். எனவே எங்கள் செயற்பாடுகளில் மிகுந்த நிதானத் தேவை. கல்வியற் கல்லூரிகளின் செயற்பாடுகள் பல சமூகத்துடன் தொடர்புடையவே.

உயர் சிந்தனைகள், கடின உழைப்பு, உளப்பூர்வமான ஈடுபாடு சமூகத்தை மையப்படுத்திய சிந்தனை என்பவை கல்விக் கல்லூரிகளில் மிகவும் வேண்டப்படுபவை. சமூகத்தை வழிநடத்தும் சிற்பிகளை உருவாக்கும் பணி கல்வியற் கல்லூரிகளினதாகும் போது அவற்றின் சமூக நோக்கிய சிந்தனை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளுங்களே. அத்துடன் கல்வி மற்றும் அபிவிருத்திப் பணிகளின் ஈடுபடும் நோக்குடன் அண்மைக்காலத்தில் கல்வியியல் கல்லூரிகளில் உபவிடாதிபதியொருவர் தொடர்கல்விக்காக நியமிக்கப்படும் வாய்ப்புண்டு. அவர் சேவையில் உள்ள ஆசிரியர்களுக்குத் தொடர் கல்வி வழங்கும் பணிகளில் ஈடுபட்டிருப்பார். அவ்வப்பிரதேச பிராந்திய கல்வி அலுவலகங்களுடன் இணைந்து தொடர் கல்வி வழங்கும் பணிகளை அவர் முன்னெடுத்துச் செல்வார்.

இவ்வாறாக பலவழிகளில் கல்விக் கல்லூரிகள் சமூகம் நோக்கிய கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டிய சந்தர்ப்பங்கள் நிறையவேயுள்ளன. கல்வியல் கல்லூரி மாணவர் விரிவுரையாளர் சமூகத்துடன் இணைந்த பல வேலைத்திட்டங்களிலும் ஈடுபடுத்தும் பல நிகழ்வுகளும் உள்ளன.

♣ **வினா:**

கற்பிக்கும் கலாச்சாரத்திலிருந்து கற்கும் கலாச்சாரத்துக்கு மாணவர்களை நகர்த்துவதற்கான புதிய செயற்திட்டங்களைக் கல்வியற் கல்லூரிகள் மேற்கொள்கின்றன எனக் கூறப்படுகிறது அது பற்றி?

**விடை:**

கல்வியற் கல்லூரிகளில் பயன்படுத்தப்படுகின்ற முறையியல் (Methodology) முற்றிலும் வேறுபட்டவை. பாரம்பரிய கற்பித்தலில் இருந்து நவீன அறிவியல் ரீதியான செல் நெறியிலை அவை கொண்டுள்ளன. கல்வியற் கல்லூரிகளின் பயன்பாட்டுக்கென தேசிய கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள கற்றல், கற்பித்தல், கருவிகளை அவதானித்து நோக்கின் இவ்வுண்மை புலப்படும். பெரும்பாலும் பிரித்தானியா அவுஸ்திரேலியா, பிரான்ஸ் போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளின் ஆலோசகர் உதவியுடனும் உள்நோ் கல்வியாளர்களின் அனுசரணையுடனும் தயாரிக்கப்பட்டுள்ளன அந்தக்கருவிகள் மிகவும் பயனுள்ள முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

நவீன கற்பித்தல் சாதனங்களின் துணையுடன் கற்றல் நடைபெறுவதற்த அங்கு வழிகாட்டப்பட்டுள்ளது. கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் வழிகாட்டியாகவிருந்து மாணவர்களின் கற்றலை ஒழுங்குபடுத்துபவராக, நெறிப்படுத்துபவராக, ஆலோசனை வழங்குபவராக, தொழிற்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதே தவிர, கற்பிப்பவராக அல்லது மாணவர்களுக்குத் தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் திணிப்பவராகத் தொழிற்ப வேண்டிய அவசியமில்லாதிருக்கின்றது. "மாணவர்கள் திணிக்கப்படும் பாத்திரங்களல்ல. ஏற்றப்பட வேண்டிய தீபங்கள்" என்ற கருத்திற்கேற்ப கல்வியியற் கல்லூரி பாட ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதனாலேயே அங்கு கற்பிக்கும் கலாச்சாரம் மறைந்து கற்கும் கலாச்சாரமும் உருவாகியுள்ளது என்ற கூறுவர். கற்கும் கலாச்சாரத்தில் மாணவர் கற்க பின்னர் ஆசிரியருடன் சேர்ந்து மாணவர் கற்க என்ற ரீதியிலே கற்றல் மிக ஆரோக்கியமான சூழ்நிலையிலேயே நடைபெற வாய்ப்புண்டு குழுமுறைக்கற்றல், செய்து கற்றல் கண்டறிமுறைக்கற்றல், பிரச்சனை விடுவித்தல் என்ற முறையிலே கற்றல் செயற்பாடுகள் திட்டமிடப்படுவதையும் இங்கு காணமுடியும்.

♣ **வினா:**

கல்வியூடு புதியவற்றை விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடித்தல், ஆக்குதல் தொடர்பாக உங்கள் கல்வியியல் கல்லூரியில் ஏதும் விசேட திட்டங்கள் பின்பற்றப்படுகின்றனவா?

**விடை:**

நிறையத்திட்டங்கள் உண்டு. ஆனால் அவற்றை நிறைவேற்றிய காலச்சூழல் இடம் தர மறுக்கின்றது. திட்டங்கள் பற்றி எதுவும் இப்போது கூறுவதற்கில்லை. சொல்லிய பின் செய்யத்தவறின் அது எமது கல்வியற் கல்லூரியின் ஆளுமையைக் குறைத்துவிடலாம். எனவே அதற்கான காலம் வரும்போது நிச்சயமாகவே வெளியிடப்படும். எம்மிடம் நிறையவே திட்டங்களைத் தயாரிக்கவும் அவற்றை நிறைவேற்றவும் கூடிய மனவலிமையும் அர்ப்பணிப்பும் உண்டு என்பதை இவ்வேளை கூற விரும்புகின்றேன்.

♣ **வினா:**

ஏனைய கல்வியியல் கல்லூரிகளுடன் ஒப்பிடுகையில் தங்கள் கல்லூரிக்கு வழங்கிய வளங்களின் நிலை?

**விடை:**

நான் ஏனைய கல்வியல் கல்லூரிகள் பலவற்றுக்கும் சென்றிருக்கின்றேன். தங்கியிருந்து அவதானித்துமிருக்கின்றேன். எந்தக் கல்வியியற் கல்லூரியோடு ஒப்பிட்டாலும் தரப்பட்ட வளங்கள் என்ற ரீதியல் விடை பகர்த பூச்சியமே. நாட்டுச் சூழல், போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்கள் சாட்டாகி வளங்கள், கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டே வருகின்றன.

கல்லூரிக்குத் தேவையான கல்விசார் வளத்தை, மனித வளத்தைக்கூட எனது சொந்த முயற்சியினாலேயே பெற்றுக் கொண்டேன். அவர்கள் சம்பளம் நான்கு மாதங்களாக வழங்கப்படாமல் பெரும் பேராட்டத்தின் பின் ஆகஸ்ட் மாதத்திலேயே கிடைத்தது.

இந்த கல்வியை வளர்க்க அதிகாரம் பெற்றவர்கள் கல்வியியற் கல்லூரி வளர்ச்சியில் அக்கறை கொள்ளாமை பெரும் அதிர்ச்சியே. நிச்சயம் அவர்கள் உண்மை உணரும் காலம் வரும்.

ஆனால் பாதுமக்களும், நிறுவனங்களும் தந்த ஆதரவு காலத்தால் செய்தவை. உள்ளுணர்வுடன் கூடியவை அங்கு பிறந்த ஆத்மாவும் எமது சேவைக்கிடைத்த உரம். நாம் எமது சொந்தக் காலில் நிற்கலாம் என்பதற்க சான்று கூறும் செயற்பாடுகள் அவை.

♣ **வினா:**

தாங்கள் எமது மண்ணின் மைந்தர்களான பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் அ.துரைராஜா, பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் பெயரில் யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியில் இல்லங்கள் அமைத்தது பற்றிப் பரவலாக்கப் பேசப்படுகிறது. ஒரு புதிய முன்மாதிரி என நோக்கப்படுகிறது. இதுதொடர்பான எண்ணம் பற்றி?

**விடை:**

இது உண்மையில் எனது தனித்தனி முடிவல்ல இப்படியான விருட்சந்தான் கல்வியியற் கல்லூரியில் வளரவேண்டும் என்ற விதையைத்தான் நான் இட்டேன். என்னை அறிந்து எமது தேவை அறிந்து எனது விரிவுரையாளர்கள் கூடி எடுத்த முடிவு அது. தமிழ் மொழி மீது அளவிலாப் பற்றுக் கொண்டு தமிழ்க்கலைகள் வளரவும் ஈழத்தமிழ் மணமுகழ் பூக்கவும் உழைத்தவர் பேராசிரியர். சு.வித்தியானந்தன். தமிழ்ச்சமூகத்தின் உயர்வுக்காக ஆரவாரமில்லாமல் அளப்பரிய பணியுரிந்தவர் பேராசிரியர் அ. துரைராசா ஈழத் தமிழ்க் கல்வியியலாளர்களின் கல்விப்பணி உயர்வு பெற உழைத்தவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம். இவர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். முன்னவர் இருவரும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இங்கு மிளிர்ந்த எண்ணங்கள்.....

01. நம்மவர்கள் நம்மக்களுக்காற்றிய பணி காரணமாய் அவர்கள் நினைவு கொள்ளப்பட வேண்டும்.
02. அவர்கள் இலங்கையின் எப்பாகத்தில் இருந்தாலும் நினைவு கொள்ளப்பட வேண்டும்.
03. எம்மோடு கூடி வாழ்ந்தவர்கள் நினைவு கொள்ளப்பட வேண்டும்.
04. எம் மக்களோடு மண்ணோடு தொடர்பில்லாதவர்களை நினைவு கொள்வதால் யாது பயனுமில்லை.

இதனடிப்படையில் இவர்கள் மூவரையும் நினைவு கொண்டோம்.

இவர்களிடம் இருந்த சிறப்பும் பண்புகளைவிட ஒரு முக்கிய பொதுப்பண்பும் காணப்பட்டது. அது அவர்களிடம் இயல்பாகவே காணப்பட்ட மனிதத்தன்மையும் சமூக இயைபாக்கமும். மண்பற்றும் இன்று நம்மவர்கள் பலருக்கு மிக அவசியமாக இவை தேவைப்படுவதால் அப் பண்புள்ளவர்களை என்றும் நினைவில் கொள்ள இவ்வேற்பாட்டினைச் செய்து கொண்டோம். அவர்களை வலம்புரி வாக்கியத்தில் கூறுவதனால் 'இறவா மூவர்' ஆகினர். மகிழ்ச்சியே.

(மேம் பக்கம் பார்க்க)

**முதலாவது பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களுடனான நேர்காணல் பேட்டி கண்டவர் K. தர்மன்**

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி புதிய கட்டிடம் அமைக்கப்படவிருக்கும் காணியில் கட்டிட மாதிரிப் படத்தைக் காட்டி ஏனையவர்களுக்குப் பீடாதிபதி விளக்கமளிக்கின்றார்.

# இலங்கையின் கடந்த நூற்றாண்டு

## கல்விக் கொள்கைச் சீரமைப்புக்கள் (ஒரு சுருக்கக் கண்ணோட்டம்)

இலங்கையின் கல்வி வரலாற்றுக் கூர்ப்பு வளர்ச்சி நோக்கில் 1865ம் ஆண்டு சட்ட நிருபணசபை பிரதி நிதியான திருகுமாரசாமி அவர்கள் இந்நாட்டின் கல்வி நிலையை ஆராய்ந்து முறையான கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த ஒரு ஆணைக்குழு தேவை என வேண்டுகோள் விடுத்தார். இதன்படி 1865ல் மோர்கன் குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவால் பல சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. இவற்றுக்கு அமைய 1869ல் பொதுக்கற்பித்தல் நிலைக்களம் (Department of Public Instrutions) ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் பணிப்பாளராக T.S போரேல் நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து சமய மறுமலர்ச்சிகளினூடாக உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1870ல் வைத்தியக் கல்லூரியும் 1884 ல் விவசாயக் கல்லூரியும், 1893ல் தொழில்நுட்பக்கல்லூரியும், 1895ல் சட்டக்கல்லூரியும் உருவாகின.

இலங்கையின் உயர்கல்வி வரலாற்றில் தேசிய பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என சேர் பொன். அருணாச்சலம் பலமுறை ஆங்கிலேயரிடம் கோரிக்கை விடுத்தார். 1906ல் இவர் தலைமையில் இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் உருவாக்கப்பட்டது. இவ்இயக்கத்தை வலுப்படுத்த கலாபோதி ஆனந்த குமாரசாமி அவர்களும் பேராடினார். இவர்களின் உந்துதலால் 1912ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக கல்லூரி (University College) லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனமாவது பின் 1942ல் இலங்கைப்பல்கலைக் கழகமாக உருவாகியது.

1919ல் மனிங் அரசியல் சீர்திருத்தத்தினூடாக 1920ல் 1ம் இலங்கை கல்விச்சட்டம் முறையாக முதன்முதலில் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1912ல் சட்ட நிருபண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட C.W.W கன்னங்கரா அவர்கள் முதன்முதலாக உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒரு சம்பளத்திட்டத்தைத் தயாரித்தார். இது 1927ல் அரசுக்குப் பாடசாலைகளுக்கும் விரிவாகி ஓர் ஓய்வூதியத்திட்டமாகவும் உருப்பெற்றது.

1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பின் சர்வசன வாக்குரிமை கல்வித்துறை மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கல்விக்குத் தனியான நிர்வாகக்குழு இயங்கியது. அதன் தலைவராக C.W.W கன்னங்கரா 17 வருடங்கள் சேவையாற்றினார். சிறாமியக்கல்வி, தாய்மொழிக்கல்வி, மதிய போசனம் வழங்கல், தேசிய பரீட்சை முறைகளில் விருத்திகள் ஏற்பட்டன. 1939ல் 31ம் இலவசக் கல்விச்சட்டமும் 1943ல் விசேட கல்வி ஆணைக்குழு அறிக்கையும் வெளியாவது.

இக்காலத்தில் கட்டணம் அளவிடும் ஆங்கிலப்பாடசாலைகள், கட்டணம் அறவிடப்படாத சுயமொழிப்பாடசாலைகள் என்ற இரட்டை முறைக்கல்வி நிலவியது கல்வி மீதான அரசாங்க செலவீனம் ஆங்கிலப்பாடசாலைகளுக்குச் சாதகமாக இருந்த வேளை கன்னங்கராவின் அறிக்கையினூடு பரந்த சேவை விளைவுகளையுடைய விதப்புரைகள் 1944ல் சூட்டப்பட்டன. இதன் ஒருபடியாக 1945ல் இலவசக்கல்வித் திட்டம் அறிமுகமானது. இதே ஆண்டு ஆரம்ப இடைநிலையில் தொடங்கிய சுய பாடவைக்கல்வி 1960ல் பல்கலைக்கழகம் வரை சென்றது.

- 1950ம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை வெளியானது அவைத்துப் பாடசாலைச் சிறார்களுக்கும் நன்பகல் உணவு நிகழ்ச்சித் திட்டம் விரிவாக்கப்பட்டது. 1951ல் இலங்கை வானொலி கல்விச்சேவை ஒலிபரப்பை ஆரம்பித்தது.
- 1952ல் வறியகுடும்பங்களில் இருந்து வரும் திறமையான மாணவர்களின் நன்மைக்காகப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.
- 1960ல் வேலை அனுபவம் என்ற நிகழ்ச்சித்திட்டமூடாக பாடசாலை மாணவர்கள் சமூகத்தின் பல வேலைத்தளங்களுக்குச் சென்று அனுபவம் பெறும் திட்டம் தொடங்கியது.
- 1961காலப்பகுதியில் பாடசாலை முறைமைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் பெரும்பாலான பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. இவற்றை நிர்வகிக்க கல்வித்திணைக்களச் செயற்பாடுகளும் பரவலாகின. பிரதேச மாவட்டக்காரியாலயங்கள் திறக்கப்பட்டன (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் ஆசிரியகலாசாலைகள் விதிகள் சட்டம் 1960 - 61)
- 1959ல் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் பற்றி ஆராய்ந்த குழுவும் 1961 கல்விஆணைக்குழுவும் 1964, 67 வெள்ளை அறிக்கைகளும் கட்டாயக் கல்வி பற்றிக் கூறின.
- 1964 கல்வி வெள்ளை அறிக்கை பொதுக்கல்வி, தொழிநுட்பக்கல்வி என்ற நோக்கில் தேசிய கல்விமுறை ஒன்றிற்கான ஆலோசனைகளை வழங்கியது.
- 1966ல் விந்தியோதைய (சிறிஜெயவர்த்தனபுர), விந்தியலங்கார (களனி) என்பன முழுநிறைப் பல்கலைக்கழகங்களாகின (1966 உயர்கல்விச்சட்டம்) 1967ல் இலங்கைப்பல்கலைக்கழகத்தின் கொழும்புப்பிரிவாக இயங்கிய கொழும்புப்பல்கலைக்கழகம் சுதந்திரமுடையதாக்கப்பட்டது.
- 1970களின் பின் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புக்கள் பாடவிதானம் பொதுக் கல்வியமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தின. இவற்றின் தொடர்ச்சியாக 1972 கல்வியின் புதிய பாதையினூடாக பாட ஏற்பாடு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 9ம் ஆண்டு பொதுக்கலைத்திட்டம தொழில் முன்னிலைப்பாடம், தேசிய உயர்கல்விச்சான்றிதழ் பரீட்சை போன்ற அம்சங்கள் இணைக்கப்பட்டன. செயல்முறைக்கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
- 1972ல் நட்டுப்பற்ற பல்கலைக்கழகமும், 1974ல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக வளாகமும் ஆரம்பிக்கப்பட்டன. 1970 வரை பல்கலைக்கழகக் கல்வி திறமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பின்னர் வெட்டுப்புள்ளித் திட்டம் பல தாக்கங்களை ஏற்படுத்தியது.
- 1978ல் கல்வி உயர்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது. 1979ல் பல்கலைக்கழகங்களைப் பொதுவாக இணைத்து ஒருங்கிணைத்து முறைப்படுத்தும் சபையாகத் தொழிற்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது.
- 1979ல் பெற்றோர் சாசனம் வெளியிடப்பட்டது. மாணவர்களது பாடசாலைக் கல்வியில் பெற்றோரின் கடமைகள் உரிமைகள் பற்றி இது தெளிவுறுத்தியது. இதே ஆண்டு கல்விச்சேவைகள் அமைச்சும் உருவாக்கப்பட்டது.
- 1980ல் கல்விசார் ரீதியில் சுயமாக இயங்கும் தேசிய பல்கலைக்கழகமாகத் திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது இதே ஆண்டு பாடசாலைகளில் நூல்களை இலவசமாக வழங்கும் ஏற்பாடுகள் ஆரம்பமாகின.
- 1981ல் முதல் தடவையாக உயர் கல்விக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் திட்டம் மூலம் பண உதவி வழங்கப்பட்டது.
- 1981 ல் கல்வி வெள்ளை அறிக்கையினூடாக சமூக பொருளாதார அரசியல் நல்லொழுக்கத் தேவைகளை வழங்க சிபார்சுகள் வழங்கப்பட்டன பாடசாலை அமைப்பு, நோக்கங்கள் தொடர்மதிப்பீடு, ஒழுங்கமைப்பு நிருவாக முறைகள் பற்றியும், வாழ்க்கைத்திறன் பாடும் அறிமுகமாகின. தொடர்ந்து கொத்தணிப்பாடசாலைகள் முறை ஆரம்பிக்கப்பட்டன. இதில் யாழ் மாவட்டத்தில் புங்குடுதீவுக் கொத்தணியும் அடங்கும்.
- 1982ல் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1983ல் ரூபவாகினி தொலைக்காட்சியில் கல்விச்சேவை ஆரம்பமானது.
- 1984ல் மாத்தறையில் றுகுணு பல்கலைக்கழகமும் 1986ல் மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டன.
- 1985ல் கல்விசார்ந்த ஆராட்சி ஆசிரியர்களில் பாடவிதான அபிவிருத்தி மற்றும் ஆளுமையின் பயிற்சி என்பவற்றையைப் பெறுப்பேற்பதற்காக தேசியகல்வி நிறுவகம் உருவானது.
- 1985ல் தொழில்சார் ரீதியில் தகைமை பெற்ற புதிய ஆசிரியர்களை வழங்குவதற்காக கல்விக்கல்லூரிகள் நிறுவப்பட்டன. தேசிய பாடசாலைகள் என்ற கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முழுநிலைப்பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகத் தோற்றுவிக்கப்பட்டன.
- 1988ல் இலங்கை அரசியலமைப்பின் 13வது சீர்திருத்தம் காரணமாக எட்டு மாகாண சபைகளுக்கு நிருவாகம் பகிர்ந்தளிக்கப்பட்டது. மாகாணக் கல்வியமைச்சின் நிருவாகக்கடமைகளாக
  1. திட்டமிடல்
  2. நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும், மதிப்பீடு செய்தலும் இயைவுபடுத்தலும்.
  3. நீர்மானம் மேற்கொள்ளுதலும் மேற்பார்வை செய்தலும்
  4. மனிதவள முகாமைத்துவம்
  5. நிதி கணக்கீடும் கணக்காய்வும்
  6. பொறியியற்துறை சேவைகள்
- பிரிவு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் 1990ல் பகிர்ந்தளிக்கப்பட்ட கல்வி நிருவாகம் ஆரம்பிக்கப்பட்டது. இது எதிர்பார்த்த விளைவைத் தராததால் பிரிவு அலுவலகங்கள் 1995ல் வலயக் கல்வி அலுவலகங்களாக மாற்றப்பட்டன.
- 1992ல் தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவதுஅறிக்கை வெளியிடப்பட்டது.
- 1993ல் இலவச சீருடைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.
- 1994ல் புதிய இலங்கை ஆசிரிய சேவை உருவாக்கப்பட்டு ஆசிரியர்களின் கல்வித்தகமை, தொழிற்தகமை, சேவைநலன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான தரங்களுக்கு உள்வீர்ப்பு செய்யப்பட்டனர்.
- 1995ல் மாறிவரும் பொருளாதார, ஏனைய தேவைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய நன்கமைந்த புதிய கல்விமுறையின் தேவைஉணரப்பட்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கேற்ப தேசிய கல்விக்கொள்கை ஒன்று வரையப்பட்டது. இதே ஆண்டு பெலிருல்ஓயாவில் சர்பிரகடுவா பல்க லைக்கழகமும் அனுராதபுரத்தில் இராசரட்டைப் பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டன.
- 1996ல் ஓலுவிலில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
- 1996ல் தேசிய கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தவும், சீரமைப்புக்களைச் செய்யவும் செயன்முறைத் திட்டங்களைத் தயாரிக்கவும் "ஜனாதிபதி செயலணிக்குழு" ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழு பொதுக்கல்வியை மேம்படுத்த பின்வரும் சீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது.

5-14 வயதுடையவர்களுக்குக் கட்டாயக் கல்வி, பாடசாலைகளிலுள்ள பாடத்திட்ட சீரமைப்புக்கள் சிறந்த முகாமைத்துவத்திற்காக இருவரிசை அடிப்படையில் தற்போதுள்ள பாடசாலைகளை மீள அமைத்தல் ஆசிரிய கல்விக்கான தேசிய மேலாண்மைச் சபை (NATE) உருவாக்கல் ஆசிரியர் மதிப்பீட்டுத் திட்டம், கற்பித்தல் பணிக்கு முந்திய பயிற்சி என்பவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட வகையில் கல்வியின் பல பரிமாணங்களில் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையிலும் பொதுக்கல்வித் துறையானது தரம், கல்வியைப் பெறுவதற்கான வழிவகைகள், தொழில்வாய்ப்புக்களுக்கான பொருத்தமான தன்மைகள் தொடர்பான பல பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

- கல்விமுறையில் வழங்கப்பட்ட தேர்ச்சிக்கும் தொழிற்சந்தையின் தேவைப்பாடுகளுக்கும் இடையில் காணப்படும் பொருத்தமின்மைகள்.
- பாடவிதானம், கற்பித்தல் முறைகளின் குறைபாடுகள் காரணமாக கல்வியின் தரம் குறைவடைந்தமை, பிரதேச ஏற்றத்தாழ்வுகள்.
- முன்பயிற்சியில்லாமல் ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கள் காரணமாக கற்பித்தல் தரத்தின் வலிமை குறைவடைந்தமை.
- கல்வி வசதிகளில் காணப்படும் பரந்த எவிலான சமனற்ற தன்மை
- கிராமப்புறங்களில் வளம் குறைந்த மோசமான உட்கட்டமைப்புக்கள்
- நகர்புறங்களில் மிகப்பிரபல்யமான பாடசாலைகளை நோக்கிய நகர்வுகள் போட்டிகள்.
- கல்வித்துறைக்கான மூலவள ஒதுக்குகள் போதுமானதாக இல்லாமை.
- கல்விகற்ற வேலையற்றோர் தொகை வேகமாக அதிகரித்து வருகின்றமை.

எதிர்காலம் நோக்கி மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளுடனான சவால்களை வெற்றி கொள்வதற்கான வழிவகைகளும் முன்வைக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. எதிர்காலம் என்பது நாம் செல்லுமிடமல்ல மாறாக அதனை நாம் உருவாக்குகின்றோம். 21ம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றிய யுனஸ்கோ வெளியிட்டுள்ள சர்வதேச அறிக்கையில் உலக ரீதியான மனித வாழ்வை மேம்படுத்தும் கல்வி தொடர்பாக பின்வரும் நான்கு தூண்கள் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்கிறது. அறிந்துகொள்ளக் கற்றல், செய்யக் கற்றல், இறைந்து வாழ்வதற்காகக் கற்றல், வாழ்ந்திடக் கற்றல் என்பனவாகும்.

Sri Lanka Journal of Educational Vol, No, 2ல் 1990ம் ஆண்டு "இலங்கையில் ஆரம்பக் கல்வியில் வீண்விரயம்" என்ற தலைப்பில்-இடைவிலகல் காரணங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றது.

1. பெற்றோரின் கல்வி மட்டமும் குறைந்த வருமானமும்.
2. பெற்றோர் பிள்ளைகள் இரு பகுதியினரதும் தாழ்வு நிலைக் குறிக்கோள்.
3. குறிப்பிட்ட பிரதேசங்களில் இடைநிலைக் கல்விக்கு பாடசாலை வசதிகளும் இலகுவான சந்தர்ப்பங்களும் கிடையாமை.
4. குறைந்த பாடசாலைப் பெறுபேறுகளும் தரச் சுட்டிகளும்.
5. பெரிய குடும்பங்கள் - பொதுவாக மூத்த பிள்ளை இடைநிறத்தல்.

மார்கா நிறுவனம் (Marga Institute - Colombo) ஆய்வுரீதியில் மாவட்ட இடைவிலகல்களை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

| மாவட்டம் | இடைவிலகல் வீதம் |
|---|---|
| வவுனியா | 20.6 |
| மன்னார் | 20.5 |
| மட்டக்களப்பு | 20.5 |
| திருகோணமலை | 12.9 |
| யாழ்ப்பாணம் | 11.7 |
| கேகாலை | 8.4 |
| மாத்தறை | 7.2 |
| கொழும்பு | 5.3 |

ஒரு பிரதேசத்தின் தேசியசெல்வம் பிள்ளைகளே மிகப் பெரிய மூலதனமும் மனித வளமும் அவர்களே. அவர்களைக் கல்வியால் தான் உருவாக்க முடியும்.

ஆனால் இடைவிலகல் காரணமாக இந்நோக்கம் நிறைவு செய்ய முடியாமல் உள்ளது இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் 5 வயது-19 வயது வரை பாடசாலையிலிருந்து விலகியோர் விபரம் கூறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 5 - 9 வயது எல்லைக்குட்பட்டவர்களில் - | 08% |
| 10 - 14 வயது எல்லைக்குட்பட்டவர்களில் - | 30% |
| 15 - 19 வயது எல்லைக்குட்பட்டவர்களில் - | 50% |

இவர்கள் பள்ளிக்கூடம் செல்லாமலும் கல்வி தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்குபற்றாமலும் இருக்கின்றனர். இத்தகையதொரு முக்கிய பிரச்சனைக்குக் காரணம் கலைத்திட்டத்திலுள்ள குறைபாடு என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, ரஷ்யா, யப்பான் ஆகிய நாடுகளில் கல்வியமைப்பு நாட்டுத் தேவைக்கு ஏற்ப ஒழுங்கு படுத்தப்

8 ம் பக்கம் பார்க்க)

# மாணவர் இடைவிலகல்
# DROP OUTS

செல்வி கி. வீரசிங்கம்
அதிபர், யா / சாவகச்சேரி மகளிர் கல்லூரி
கல்வியியல் விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவனம்

பொதுக்கல்வியைப் பூர்த்தி செய்யாது, இடையில் பாடசாலையைவிட்டு மாணவர் விலகுவதே - இடைவிலகலாகும். கட்டாயக் கல்வி காலம் எனக் கருதப்படும் 6 வயது தொடக்கம் 14 வயது வரையான அடிப்படைக் கல்வியைக் கூட தொடர முடியாது இவர்கள் இடைவிலகி விடுகின்றனர்.

பொதுக் கல்வியை அடிப்படைக்கல்வி என்றும் கூறுவர். அடிப்படைக் கல்வியே வாழ்வின் அத்திவாரமாகவும், சிறப்புக் கல்வியின் அடித்தளமாகவும் அமைகிறது.

வாழ்க்கைக்கான கல்வியைப் பெற ஒவ்வொருக்கும் உரிமை உண்டு என ஐ.நா காசனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும். பெரும்பான்மான சிறுவர் இவ் உரிமையை அனுபவிப்பதில்லை இரண்டு வகையில் இவ் வாய்ப்பை இழக்கின்றனர்.

1. பாடசாலையில் சேர வேண்டிய வயதில் சேராதோர் ஒருபுறம்
2. பாடசாலையில் சேர்ந்த மாணவருள் அரைவாசிப்பேர் பொதுக் கல்வியைப் பெறாமலே இடையில் விலகிச்செல்லல்.

### பொதுக் கல்வியைப் பெறாமல், மாணவர் இடைவிலகுவதால்,

1. இலவசக் கல்வி வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்தும் வாய்ப்புக்களை இழக்கின்றனர்.
2. மாணவரின் உடல் உள்ளம் சமூக விருத்தி தடைப்படுகின்றது.
3. கல்வியின் நோக்கம் - தனிமனிதனின் திறமைகளைப் பூரணமாக வளர்த்த லும் சகலரும் கல்வியில் சமவாய்ப்புக்களைக் கொடுத்தலும் - நிறை வேற்ற முடியாமல் போகின்றது.
4. இடைவிலகலால் கல்வியில் வீண் விரயம் ஏற்படுகின்றது.

தேசிய கல்வி நிறுவனக்கல்வி ஆய்வு தறையினரின் - "இலங்கை கல்வியில் வீண் விரயம்" என்ற தலைப்பில், 1990 ல் நடாத்திய ஆய்வின்படி, ஆரம்பக் கல்வி மட்டங்களின் குறைபாடுகளை 3நோக்கில் சுட்டிக் காட்டுகின்றனர்.

1. பாடசாலையில் சேராதோர்
2. இடைவிலகல்
3. மீளக் கற்போர் என வகுத்துள்ளனர்.
4. மாவட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு, எல்லா வகைப்பாடசாலைகளை, கிராம நகர ரீதியாகவும் எழுமாற்றாக, 101 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தரம் 3 லிருந்து தரம் 5 வரையும் கணிதம், தாய்மொழி ஆகிய பாடங்கள் பரீட்சிக்கப்பட்டது. பரீட்சைப் பெறுபேறுகளை வைத்துக் கொண்டு அதிபர், ஆசிரியர், பெற்றோர் தெரிவு செய்யப்பட்டு, காரணங்கள் வினாவப்பட்டு அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஆய்வு மூலம் தாழ் அடைவு மட்டம் முக்கிய பாதிப்பை ஏற்படுத்துவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதுவே இடைவிலகலுக்கு முக்கிய காரணமாக அமைவதையும் அவதானிக்க முடிந்ததாகக் கூறப்படுகின்றது. (5ம் தரம் மாணவரில் 50% னர் கணிதம், தாய்மொழியில் முறையே 2ம், 3ம், 4ம் தர நியம தரத்தில் காணப்பட்டனர்)

# தேவாரங்களின் மொழியாற்றல்

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
பீடாதிபதி உயர்பட்டப் படிப்புக்கள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## முன்னுரை

ஓர் இலக்கியப் புலவனுடைய ஆக்கம் சிறப்புற்றமைவதற்கு அடிப்படையாக அமைவது அவன் கையாளும் மொழியேயாகும். மனிதன் எண்ணுதற்கு ஓர் மொழி வேண்டும். அவ்வெண்ணம் உயர்வானதாயும், பயனுடையதாயும் அமையின், அதற்கேற்ற மொழியும் அமைந்துவிடும். சிறந்த புலவன்/கவிஞன் அதற்கேற்ற மொழியினை அமைத்துக்கொள்வான். இந்த வகையிலே, காலத்துக்குக் காலம் எம்முடைய தமிழ்இலக்கியப் புலவர்களுடைய எண்ணக்கருக்களுக்கு ஏற்றபடி தமிழ்மொழியும் அமைந்து வந்துள்ளது. புலவர் தமிழ்மொழியினைப் படைப்பதில்லை. அவர்கள் வாழ்ந்த சமூகத்திலே வழக்கிலிருந்த (எழுத்து வழக்கு / பேச்சு வழக்கு) மொழியைத்தான் அவர்கள் பயன்படுத்தினர். சிறந்த புலவர் அதனைப் பயன்படுத்தும் போது அதிலே புதுமைகள் ஏற்படலாம். அவை மொழியமைப்பினைச் சிற்சில வேளைகளில் மாற்றியமைக்கின்றன. மொழியினுடைய ஆற்றல் அப்பயன்பாட்டினாலே வளர்க்கப்படுகின்றது. சங்கப்பாடல்களிலே அன்று வழக்கிலிருந்த மொழி பயன்பட்டது. செறுத்த செய்யுள் பாடப்பட்டகாலம் அது. மொழியினுடைய செறிவினை அப்பாடல்களிலே காணலாம். ஆனால் தேவார காலத்திலே மொழியினுடைய நெகிழ்ச்சியினைக் காண்கின்றோம்.

"வானில்பொலி வெய்தும்மழை
மேகங்கிழித் தோடி
கூனற்பிறை சேருங்குளிர்
சாராற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி ஐந்தும்அமர்ந்
தாடியுல கேத்த
தேனிற்பொலி மொழியாளொடு
மேயான்திரு நகரே"

இத்தேவாரப் பாசுர முதலடியிலுள்ள "வானில்பொலி வெய்தும்மழை" என்றுந்தொடர், சங்கப் பாடல்களிலே இடம்பெறுமாயின் "வான்பொலி வெய்துமழை" என்று உருபுகள், இடைநிலைகள் பெரிதுமின்றி அமையும். இப்பின்னணியிலே தேவாரங்களிலே தமிழ்மொழியின் ஆற்றல் எவ்வாறு வெளிப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மொழி நெகிழ்ச்சி

பல்லவர் காலத்திலெழுந்த பக்திப் பாசுரங்களிலே கையாளப்பட்ட தமிழ்மொழி நெகிழ்ச்சியடைந்ததற்கான முதன்மைக்காரணி இசைப் பண்பென்றே கூறவேண்டும். சம்பந்தர் போன்ற இசைத்தமிழ் வல்லுநர்கள் கோயில் கோயிலாகச் சென்று பதிகங்கள் பாடியபோது, அப்பதிகங்களை மக்கள் எல்லோருஞ் சேர்ந்து கூட்டிசையாகப் பாடக்கூடியனவாக அமைத்தனர். "பாடியாடப் பாவநாசமே" என்று கூறுவதனூடாக அப்பாடல்கள் பாடப்பட்டு, அவற்றின் தாளத்துக்கேற்ப ஆடப்பட்டதையும் நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

"பண்ணியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லா
ரிருநிலத்தில்
ஈசனெது மியல்பினாரே"
(திருவீழிமிழலை: 11)

"மன்னியசீர் மறைநாவன்
வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து
மிசையுங்கா
லீசனடி யேத்துவார்கள்"
(திருவையாறு:11)

"கந்தம்மலி கமழ்காழியுட்
கலைஞானசம்பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி யாடத்தவ
மாமே"
(திருப்புள்ளமங்கை:11)

என்னும் சம்பந்தருடைய பதிகப்பாடலடிகள் சான்றுகளாக அமைகின்றன. அடியார்கள் இப்பாடல்களைப் பாடியாடுதற்கேற்ற பண்ணிசையும், அதற்கேற்ற மொழிநடையும் அமைந்துவிடுகின்றது. இயல்புநிலை மக்களும் சேர்ந்து பாடுதற்கேற்றமொழி அமைய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதனால் மொழியிலே நெகிழ்ச்சி ஏற்படவும் வாய்ப்புண்டாயிற்று.

இந்நெகிழ்ச்சிக்குத் தமிழ்மொழியிலே பரவலாக் கையாளப்பட்ட இடைநிலைகளும் விகுதிகளும் துணைசெய்தன. தேவாரப் பாசுரங்களிலே 'கள்' விகுதி பதிலிடு பெயர்களிலும் கையாளப்பட்டது. அஃறிணைப் பெயர்களுடன் இணைந்து வந்த 'கள்' விகுதி பின்னர் உயர்திணைப் பெயர்கள், பதிலிடு பெயர்கள் ஆகியனவற்றிலும் இணையத் தொடங்கியது.

"திங்களாம் போதுஞ்செழும்புனலுஞ்
செஞ்சடை மாட்டயல்
வைத்துகந்து
நங்கள் மகிழுநள் ளாறுடைய
நம்பெரு மானிது ருவன்கொல்
சொல்லாய்"
(திருநள்ளாறும் திருவாலவாயும்)

என்னும் சம்பந்தர் பாடலிலே இடம்பெறும் நங்கள் என்னுஞ் சொல், அப்பர் தேவாரத்திலே இடம்பெறும் 'நீங்கள்', 'உங்கள்', 'எங்கள்', 'நீங்கள்' ஆகிய சொற்கள் இக்கால மொழியிலே பயன்பட்டன. பன்மை வடிவத்துடன் 'கள்' விகுதி சேர்ந்து இரட்டைப் பன்மை வடிவம் ஆக்கப்படுகின்றது. இத்தகைய சொல் வடிவங்கள் வேதாரப் பாசுரங்களிலே இடம்பெற்றுள்ளன.

"கரவின்றி நன்மாமலர் கொண்டு
இரவு பகலுந் தொழுவார்கள்
சிறுமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலாடு துறையே"
(திருமயிலாடுதுறை - 7

என்றும் சம்பந்தர் தேவாரப் பாசுரத்திலே 'தொழுவார்' என்னும் பன்மை வடிவம் 'கள்' விகுதி பெற்று இரட்டைப் பன்மை வடிவமாக அமைந்துள்ளது.

இரட்டைப்பன்மை வடிவம் பெயர்ச் சொற்களிலே இடம்பெறுவது போல், இரட்டைப் பன்மை விகுதிகள் வினைச்சொற்களிலும் இடம்பெறலாயின. தேவாரம் மொழியிலே இத்தகைய வடிவங்கள் காணப்படுகின்றன. முன்னர் காட்டிய சம்பந்தர் பாடலிலே 'தொழுவார்' என்னும் வடிவத்துடன் 'கள்' பன்மை விகுதி சேர்ந்து இரட்டைப்பன்மையாயிற்று.

"குண்டரே சமணர்புத்தர் குறியறி
யாதுநின்று
கண்டதே கருதுவார்கள்
கருத்தெண்ணா தொழிமினீர்கள்"
(திருத்துரத்தி - 9)

என்னும் அப்பர் தேவார அடிகளில் 'கருதுவார்கள்', 'நீர்கள்' என்னும் இரட்டைப்பன்மை வடிவங்கள் வந்துள்ளன.

"புகை மலி கந்தமாலை
புனைவார்கள் பூசல்
பணிவார்கள் பாடல்பெருகி
நகைமலி முத்திலங்கு மணல்சூழ்
கிடக்கை
நனிபள்ளி போலு நமர்காள்"
(திருநனிபள்ளி - 7)

என்னும் சம்பந்தர் பாடலடிகளிலும், சிறந்த மாலைக ளஞ்சினோ டஞ்சுஞ்
சிந்தை யுள்ளுருகிச்
செப்பவல்லார்க்கு
இறந்த போக்கில்லை
வரவில்லையாக
யின்ப வெள்ளத்துள்
இருப்பர்கள்
(திருநள்ளாறு - 10)

என்னும் சுந்தருடைய பாலடிகளிலும் 'புனைவார்கள்', 'பணிவார்கள்', 'இருப்பர்கள்' ஆகிய இரட்டைப் பன்மைகள் இடம் பெற்றுள்ளன.

மொழி நெகிழ்ச்சிக்கான இன்னொரு காரணி சொல்லடைகளின் பெருக்கமாகும். ஒரு சொல்லுக்குப் பெருந்தொகையான அடைகள் சேர்க்கும் போக்கினைத் தேவாரப் பாசுரங்களிலே காண்கிகிறோம். இறைவன் என்றும் ஏறும் எருது பற்றிக் கூறும் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"செங்கண் வெள்ளைச் செழுங் கோட்டெருது"
(நம்பி என்ற திருப்பதிகம்: 4)

என்று குறிப்பிடுகின்றார். செம், கண், வெள்ளை, செழும், கோடு என்னும் சொல்லடைகள் எருது என்னும் பெயர்ச் சொல்லுடன் சேர்க்கப்படுகின்றன.

நீண்ட இடைநிலைகள் விகுதிகள் ஆகிய தேவார இலக்கிய மொழியிலே பெருக்கமாய்ப் பயன்பட்டன. 'குறுந்தொகை'யில் பெயரெச்சத்தில் நூற்றிரண்டு இடங்களில் 'இ' கரம் வர, ஒரே ஒரு இடத்தில் மட்டும் 'இன்' (நீடின குறுந். 309.3) வருகிறது. அப்பர் தேவாரத்தில் நானூற்றி முப்பத்தியாறு இடங்களில் 'இ' வர, இருபத்து நான்கு இடங்களில் 'இன்', அப்பர் தேவாரத்தில் இருப்பத்து நான்கு தடவைகளாகப் பெருகியுள்ளன. நிகழ்கால, விகுதி 'கிறு', 'கின்று' எனவும் 'ஆநின்று' எனவும் விரிவடைகின்றது. தேவாரங்களிலே 'கின்று'வும் 'அநின்று' வும் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"எத்தால் மறவாதே நினைகின்றேன்
மனத்துன்னை"
(திருவெண்ணெய் நல்லூர்)

என்னும் சுந்தரர் பாடலிலும்,

"தாயுநீயே தந்தைநீயே சங்கரனே
யடியேன்
ஆயுநின்பா வன்புசெய்வா
னாதரிக்கின்ற துள்ளம்
ஆயமாய காயந்தன்னு
ளைவர்நின்றொன்ற லொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன்
வலிவலமே யவனே"
(திருவிவலம் - 7)

என்னும் சம்பந்தர் பாடலிலும்,

"மெய்யுளே விளக்கை யேற்றி
வேண்டள வுயரத்தூண்டி
உய்வதோ ருபாயம் பற்றி
உகக்கின்றே னுகவாவிண்ணம்
ஐவரை யகத்தே வைத்தீர்
அவர்களே வலியச்சாலச்
செய்வ தொன்றறிய மாட்டேன்
திப்புக லாரனீரே"
(திருப்புகலூர் -9)

என்னும் அப்பர் பாடலிலும் 'நினைக்கின்றேன்', 'ஆதரிக்கின்ற', 'அஞ்சுகின்றேன்', 'உகக்கின்றேன்' என்னுஞ் சொற்கள் 'கின்று' என்னும் இடைநிலை பெற்றமைந்துள்ளன.

தேவாரமொழி நெகிழ்ச்சிக்கான இன்னொரு காரணி பெருமளவிலான வடமொழிச் சொற்சேர்க்கையாகும்.

அங்கமே பூண்டா யனலாடினாய்
ஆதிரையாய் ஆனிழலாய்
ஆனேறார்ந்தாய்
பங்கமொன் றில்லாத்
படர்சடையினாய்
பாம்போடு திங்கள்பகை
தீர்த்தாண்டாய்
சங்கையொன் றின்றியே
தேவர்வேண்டச்
சமுத்திரத்தி னஞ்சுண்டு
சாவாமூவாச்
சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர் மேவியதேவதேவே.
(திருப்புகலூர் - 2)

என்னும் அப்பருடைய திருத்தாண்டகம் இன்னோசையுடையதாகவும், நீண்ட அசைகளையுடையதாகவும் அமைகின்றது. இவ்வாறு நீண்ட அசைகளையும் அடிகளையும் அமைப்பதற்குத் தமிழ்ச் சொற்களுடன் 'அங்கம்', 'பங்கம்', 'சங்கை', 'சமுத்திரம்', 'சிங்கம்' என்னும் வடசொற்களும் பயன்பட்டுள்ளன. அவை தாண்டகத்தின் இன்னோசைக்கும் துணைசெய்கின்றன.

மாதினுக் குடம்பிடங் கொடுத்தானை
மணியினைப் பணிவார்வினை
கெடுக்கும்
வேதனை வேதவேள்வியர்
வணங்கும்
விமலனை யடியேற் கெளிவந்த
தூதனைத் தன்னைத்
தோழமையருளித்
தொண்டனேன் செய்ததுரிசுகள்
பொறுக்கும்
நாதனை நள்ளாறனை யமுதை
ராயினேன் மறந்தென்
னினைக்கேனே.
(திருநள்ளாறு - 8)

என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தேவாரப்பாசுரத்திலே 'மாது', 'தேவன்','வேதம்','விமலன்','தூதன்', 'தொண்டனேன்', 'துரிசு', 'நாதன்' ஆகிய வடமொழிச் சொற்கள் பாடலாக்கத்துக்கு உதவியுள்ளன.

"வர்மனை வணங்க வைத்தார்
வாயினை வாழ்த்த வைத்தார்
சோமனைச் சடைமேல் வைத்தார்
சோதியுட் சோதி வைத்தார்
ஆமனெய் யாட வைத்தார்
அன்பெனும் பாசம் வைத்தார்
காமனைக் காய்ந்த கண்ணார்
கழிப்பாலைச் சேர்ப்பனாரே"
(திருக்கழிப்பாலை - 30)

என்னுஞ் சம்பந்தருடைய பாடல் 'வாமன்', 'சோமன்', 'சோதி', 'பாசம்', என்னுஞ் சொற்கள் பாடல்மொழியினை நெகிழ்ச்சியுறச் செய்கின்றன.

## மொழியுணர் கலை

மொழிபுணர் இயல்பு பற்றி விளக்கந் தரும் செ.வை.சண்முகம்
(1998:385)

"எச்சவியலில் பொருள்கோளை மொழிபுணர் இயல்பு (8-13) என்று விளக்கிருப்பதில்
1. இலக்கிய உருவாக்கமுறை (படைப் பாளி நோக்கு)
2. வாசிப்பு முறை (படைப்பாளி நோக்கு)
ஆகிய இரண்டையும் புலப்படுத்தியிருப்பதோடு மொழி கட்டமைப்பில் தொடரியல் நிலையில் செய்யுள் மொழி மாறுபடும். அவைகளை முறைமாற்றிப் புரிந்துகொள்ள வேண்டும் என்று தெளிவுபடுத்தப் பட்டுள்ளது."

என்று கூறுகின்றார். அவ்விளக்கத்திற்கு எடுத்துக் காட்டாக,

"நெல்லும் உயிரன்றே நீரும்
உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை
உலகம்"

என்னும் புறப்பாட்டை (186) எடுத்துக்காட்டி 'செய்யுள் உருவாக்கத்தில் சில சொற்களைப் புலவர்கள் நீக்கிவிட்டு வாசகர் ஊகிப்பதற்கு விட்டுவிடுவதும் உண்டு' என்பதற்கேற்ப மேற்படி பாடலின் முதல் அடியிலுள்ள இரண்டு வாக்கியத்திலும் இன்னதற்கு யாருக்கு என்று தொழில் முதனிலை குறிப்பிடப்படவில்லை இரண்டாவது அடியிலுள்ள மலர்தலை உலகம் என்பதோடு கொண்டு கூட்டியே பொருள் கொள்ளப்படும் என்று கூறுவர் தேவாரங்களில் இத்தகைய மொழி புணர்நிலை காணப்படுகின்றது.

"கரவின்றி நன்மா மலர்கொண்டு
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன்றிய செஞ்சடை யான்வாழ்
வரமா மயிலாடு துறையே"
(திருமயிலாடுதுறை - 1)

என்னுஞ் சம்பந்தர் தேவாரப் பாடலிலே 'தொழுவார்கள்' என்பவர் யார் என்பது நீக்கப்பட்டுள்ளது. மூன்றாம் நான்காம் அடிகளிலுள்ள செய்திகளின் அடிப்படையிலேயே 'தொழுவார்கள்' யார் என்பதை ஊகிக்க முடிகின்றது.

பல பயனிலைகளை அடுக்கிக் கொண்டுபோய் ஓர் எழுவாயுடன் தொடுக்கும் பாங்கு மொழிபுணர்நிலையைச் சார்ந்ததாகும். இதற்குப் பெருந்தொகையான எடுத்துக் காட்டுக்களைத் தரலாம். வகை மாதிரிக்காக.

"குரும்பைமுலை மலர்க்குழலி
கொண்டதவங் கண்டு
குறிப்பினொடு சென்றவடன்
குணத்தினை நன் கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை
வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன்
கண்ணுதலோன் ....."
(திருக்கலபநல்லூர் - 1)

என்னும் சுந்தருடைய பாசுரத்திலே முதல் மூன்று அடிகளும் 'கண்டு', 'சென்று', 'அறிந்து', 'கொடுத்து', 'செய்த' என்னும் ஐந்து பயனிலைச் சொற்களுடையனவாயுள்ளன.இவை விண்ணவர்கோன் என்னும் ஓர் எழுவாயுடன் தொடுக்கப்படுகின்றன.

எவ்வாறு பல பயனிலைகள் ஓர் எழுவாயுடன் தொடுக்கப்படுகின்றனவோ, அவ்வாறே பல எழுவாய்கள் ஒரு பயனிலையுடன் இணைக்கப்படும் மொழியமைப்புப் பெருமளவிலே தேவாரப் பாசுரங்களிலே காணப்படுகின்றன.

(9 ம் பக்கம் பார்க்க)

கட்டுரையாளர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் ஈழத்தமிழர்களின், தமிழ் மொழியின் குறியீடாக இருந்து உலகளாவிய ரீதியில் அளப்பரிய தமிழ்த் தொண்டாற்றி வருபவர். சமூக சேவையில் மிகுந்த அக்கறையுடையவர். அறுபதாவது அகவையில் மணிவிழா நாயகனான அவருக்கு கல்வியியல் கல்லூரிச் சமூகம் வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றது.

# புதிய உதயம்



கல்விக் கடலின்
கலங்கரை விளக்காய்
இலங்கும் புலம்!
ஒளி காட்டும்
வழி காட்டிகளுக்கு
விடை சொல்லும் விழி!
சீர் திருத்தத்தில்
நவீனத்துவத்தை
நகர்த்திச் செல்லும்
நந்தவனம்!
நாகரீக நடப்புகளுக்காய்
மனித மாற்றங்களை
சீரமைக்கும் சிகரம்!
கமலம் விரிந்த நாதமாய்
கண்ணை விழித்த
கல்விப் பீடம் ~ இது
யாழ் தேசிய கல்வியியல்
கல்லூரி

– மானியூர் ரட்னேஸ்.

# அகதி வாழ்வும் குழந்தை கல்வியும்

கல்வியைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. இவ்வுரிமை பறிக்கப்பட இயலாதது. அந்த உரிமை 1989ஆம் ஆண்டு குழந்தைகளின் உரிமை பற்றிய ஒப்பந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி என்பது பற்றி 1990 இல் நடைபெற்ற ஜாம்டீன் மாநாடடின் இதய நாதமே அந்த உரிமைதான். சமூகப் பணி ஆற்றும் நன்கொடையாளர்கள், அரசுசாரா அமைவனங்கள் போன்றவை அந்த உரிமையைக் காத்து நடைமுறையில் செயல்படுவது கடமையாகிவிட்டது.

கல்வியாளர்களும் உளவியல் வல்லுநர்களும் குழந்தைகளின் கல்வி அதிகநாள் தடைப்பட்டு நின்று போவது சரியல்ல என்று கூறுகிறார்கள். கல்வியும் பொழுது போக்கு வசதிகளும் அளிப்பது குழந்தைகளின் வாழ்வில் ஓர் ஒழுங்கு நடைமுறையைக் கொணர்கிறது. அவர்களுடைய சமுதாய பண்பாட்டுச் சூழலுடன் அவர்களுக்குத் தொடர்பு ஏற்படுத்துகிறது.

தறிகெட்டுப் போன சூழ்நிலையில் பள்ளிப் படிப்பானது குழந்தைகளுக்கு இயல்பு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கிறது. குற்றச் செயல்கள், போதை மருந்துகள் போன்றவற்றின் பக்கம் குழந்தைகள் போகாவண்ணம் காக்கிறது. அவசர நிலைச் சூழலில் பள்ளிகள் இயற்கைச் சூழல், சத்துணவு, காலரா தடுப்பு, எய்ட்ஸ் தடுப்பு போன்றவை பற்றி விவரங்கள் சொல்ல வசதியாக இருக்கின்றன. மனித உரிமைகள், அமைதி காத்தல், மறுவாழ்வு அமைத்தல் ஆகியவை பற்றி எடுத்துப் பேச இடமளிக்கின்றன. மேலும் பள்ளிகள் மக்கள் சமுதாயத்திற்கு உதவிகள் அளிப்பதற்கும் மறுவாழ்வு அளிப்பதற்கும் தகுந்த மையங்களாக உதவக் கூடும். சம்பளத்திற்கு வேலைக்குச் செல்ல இளைஞர்கள் கல்வி பெறுவது அவசியம்.

வயது வந்தோர் புதிய சூழ்நிலையில் சரிவர நடந்து கொள்ள கல்வி உதவும். எல்லாவற்றுக்கும் மேலாக வருங்காலவாழ்வு சிறக்க கல்வி உதவும். சண்டை ஓய்ந்த பின் வருங்கால வாழ்வுக்கு கல்வி அளிப்பது மிக முக்கியமானதாகும்.

நெருக்கடி நிலையில் விரைவான கல்வித் திட்டம் தேவை என்று சொன்னாலும், கடந்த கால அனுபவங்களை வைத்து அனைத்துலக முதன்மைகள் உதவிக் காரியங்கள் என்னென்ன வகையில் செய்யப்பட வேண்டும் என்பது பற்றி வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்துள்ளன. ஒரே நாளில் பழைய பள்ளிப் படிப்பைக் கொணர்ந்து விட முடியாது. ஒவ்வொரு கட்டமாகச் செயல்பட வேண்டும். குழந்தைகளின் எண்ணிக்கை, கிடைக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை போன்றவற்றைச் சேகரித்த பின் முதல் கட்டமாக பொழுது போக்கு அம்சங்களைப் புகுத்தி சிறிதளவு பாடங்களும் கற்பிக்க வேண்டும். இரண்டாவது கட்டத்தில் முறைசாரா கல்வியை அளிக்க வேண்டும். அப்போது சோமாலியாவில் பயன்படுத்துவதற்காக யுனெஸ்கோ வகுத்த ஆசிரியர் பயன்பாட்டு முறையைக் கைக்கொள்ள வேண்டும். அந்த முறையின்படி, ஆரம்ப நிலைக் கல்வி பெற வேண்டிய 80 குழந்தைகளுக்காக நடமாடும் வகுப்பு ஏற்படுத்த வேண்டும். பாடங்களோ தேர்வோ இன்றி எண்ணும் எழுத்தும் மட்டும் சொல்லித் தரப்பட வேண்டும். குழந்தைகளுக்கு சிலேட்டுகள், சாக்கட்டிகள், பயிற்சிப் புத்தகங்கள், பென்சில்கள் இவை வேண்டும். ஆசிரியர்களுக்கு எழுத்து, எண் பெருக்கல் முதலியவற்றுக்கான விளக்கப் படங்கள், கல்விபுகட்டும் முறை பற்றிய வழிகாட்டி நூல், வருகைப் பதிவேடு, மொழி, எண் விளையாட்டுகளுக்கான சாமான்கள் ஆகியவை கொடுக்கப்பட வேண்டும். ஆறு மாதத் திட்டத்தில் கல்வி அளிக்கப்பட வேண்டும். ஓரளவு பள்ளிப் படிப்பு கொடுக்க இயலுவதாகத் திட்டம் அமைந்திருக்கும்.

நன்றி யுனெஸ்கோகூரியர்

*சாதகமான பதில் கிடைத்த போதும் நடைமுறையில் இன்னும் வரவில்லை. இதற்காக கல்வி உலகம் கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும்.*

**♣ வினா:**

**பொதுவாக பாடசாலை வகுப்பறைக் கற்பித்தல்- முகாமைத்துவ செயற்பாடுகளில் ஒரு வரட்சித் தன்மை தற்போதைய சூழ் நிலைகளில் உள்ளது, கல்வி மாணவர்களுக்கு ஒரு பெரும் சுமையாகத் திணிக்கப்படுதல் தொடர்பாக உங்கள் கருத்து?**

**விடை:**

*யாழ் மாவட்டத்தை பொறுத்தவரை அந்த வரட்சித் தன்மை காணப்படுதல் உண்மையே அதற்குக் காரணம் பொதுவாக நாட்டுச் சூழல் என்று கூறப்படுகிறது. ஆனால் நாம் எவ்வளவு காலத்தான் இதைக்கூறி காலத்தைக்கழிக்கப் போகின்றோம்? எங்கள் சோம்பேறித் தனத்தை மறைக்கவே இந்தச் சாட்டைச் சொல்லி வருகின்றோம். இலங்கையின் ஏனைய பகுதிகள் எவ்வளவோ முன்னேறிவிட்டன. நாம் அரைத்த மாவையே அரைப்பதைவிட்டு புதியவற்றை நாட வேண்டும். உலகக் கல்விச் செல்நெறிகளுடன் சேர்ந்து கொள்ள வேண்டும். அது எம்மால் முடியும்.*

# தாயகத்தில்.....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

**♣ வினா:**

**தங்கள் கல்லூரியில் சேவையாற்றும் விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்களுடைய நிலை எவ்வாறு உள்ளது?**

**விடை:**

*எங்கள் கல்லூரியில் சேவையாற்றும் விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் என்று மூன்று பிரிவினர் பற்றிக் கேட்டுள்ளீர்கள். இவர்களில் அனைவருமே தகுதிபடைப்படையில் நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விரிவுரையாளர் தெரிவில் பேராசிரியர் க. சின்னத்தம்பி அவர்கள் நேர்முகக் குழுவின் தலைவராகவிருந்தார். மிக்க உளத் தூய்மையுடன் தொழிற்பட்டு கல்வியியற் கல்லூரிக்கும் பொருத்தமான விரிவுரையாளர்களைத் தெரிவு செய்து தந்தார். உண்மையான தகுதி, நேர்மையான தெரிவு காரணமாக கல்விசார் பணிகள் தொய்வின்றி இங்கு செயல்படுகின்றது. ஏனைய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்கள் போல் பல்வேறு விதமான வெளியில் சென்று கருத்தரங்குகளில் பங்கு கொண்டு அதனைப் படைப்பில் பணியாற்ற முடியாவிட்டாலும் கல்வியியற் கல்லூரிகளின் தேவைக்காக தேசிய கல்வி நிறுவகம் தயாரித்தளித்த கருவிகளின் துணைகொண்டு விரிவுரையாளர் கல்விசார் நடவடிக்கைகளை உற்சாகமாக முன்னெடுத்துச் செல்கின்றார்கள்.*

*கல்விசாரா ஊழியர்கள் தமது கடமையை நன்குணர்ந்து தொழிற்பட்டு வருகின்றார்கள். ஒவ்வொரு பணியையும் நன்குணர்ந்து அவர்கள் செய்து வருவதால் பல காரியங்கள். இலகுவில் நடந்தேறி விடுவதை இங்கு காணமுடிகின்றது.*

*மாணவர்களும் அளவுக்கதிகமான வசதிகள் வேண்டும் சொகுசு வேண்டும் என்ற நினைக்காது, கிடைத்த வசதிகளைக் கொண்டு திருப்தியுடன் தமது கல்வியை மேற்கொள்ளுகின்றார்கள். அவர்கள் பழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் அவதானிக்கும் போது நல்லதோர் எதிர்காலம் அவர்களுக்கிருப்பது புலனாகின்றது.*

**♣ வினா:**

**கோப்பாயில் காணியும் ஒதுக்கி அதற்கான எல்லைகளையும் இட்டு வரைபட வேலைகளும் முடிவுற்ற இந்த நேரத்தில் புதிய யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள்?**

**விடை:**

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரிக்கான கட்டிடப்பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கு பல காரணிகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது நாட்டின் இன்றைய நிலமை அதையும் மீறி கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்களை பெற விளம்பரப்படுத்தப்பட்ட போது அதற்கு போதியளவு விண்ணப்பங்கள் கிட்டவில்லை. உலகவங்கியால் 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதும் யாழ்ப்பாணத்தில் அப் பெருந்தொகைக்கு கட்டிட ஒப்பந்தம் செய்யக்கூடியவர்கள் இல்லாதிருந்ததும், யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள ஒப்பந்தகாரர் இங்கு பெருந்தொகை முதலீட்டு வேலைகளைச் செய்ய விரும்பாமையும் கல்வியியற் கல்லூரிக்கான கட்டிடம் அமைப்பதில் தாமதம் ஏற்படக் காரணமாயிற்று ஆனால் இப்போ இதற்கான வேறுபல முயற்சிகளை செய்து வருகின்றோம். எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்ற நம்பிக்கையுண்டு.*

**♣ வினா:**

**கல்வியையும் - தொழில் நிறுவனங்களையும் - தொழில் வாய்ப்புக்களையும் ஒன்றிணைத்தலே தற்போதைய சமூகத் தேவையாகவுள்ளது. இது பற்றி?**

**விடை:**

*சமூகத்தேவையான தொழில்வாய்ப்புக்களைப் பெறக் கல்வி வழிகாட்ட வேண்டும் என்ற நிலை கல்வியின் பெறுபேறுகளுக்கும் தொழில்வாய்ப்பின்மைக்குமிடையிலான இடைவெளி அதிகரித்துள்ளதைப் புலப்படுத்துகிறது. இதற்கப் பல மாற்ற ஏற்பாடுகள் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியியற் கல்லூரி மூன்று வருட பயிற்சி முடித்ததும் ஆறு மாதங்களில் அசிரியர் தொழிற் கட்டாயமானது என்ற நிலை ஏனைய தொழில் சார் முன் பயிற்சி நிறுவனங்களின் பரந்த செயற்பாட்டு விருத்திக்கு வழிகாட்டுகிறது. எனினும் கல்விக்குப் புனிதத்தன்மை கொடுத்து தனிமனித வளர்ச்சியூடே சமூகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டு முன்னேற்றத்திற்காகச் செயற்படும் கல்வியற் கல்லூரிகளின் பணிகளை தொழில் வாய்ப்பு என்ற சிறிய வட்டத்துள் கொச்சைப்படுத்திவிட முடியாது. கல்வியில் கல்லூரிகளது கலைத் திட்டத்தினையும் செயற்பாடுகளையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். சமூகவிருத்தியானது ஒருபுறம் தனிமனித விருத்திக்கும் மறுபுறம் நாட்டின் விருத்திக்கும் உதவும் என்பதை உணர்ந்து ஏற்படுத்தப்பட்ட திட்டமது. அதை உணர்ந்து கல்விக் கல்லூரிகளை நோக்கி, சமூகமும் சமூக நிறுவனங்களும் கல்விக்கல்லூரிகளின் வளர்ச்சிக்குதவ முன்வரவேண்டும். கல்வி தொழில் நிறுவனம் – தொழில்வாய்ப்பு இணைத்தல் தற்போதைய சமூகத்தேவையென்னும் முடிவு கொள்ளமுடியாது. தற்போதய எமது சூழலில் சமூகத்தேவைகளில் இதற்கும் மேலாக வேறும் பல அவசியமாகின்றன.*

**♣ வினா:**

**இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் உள்ளதைப்போன்று கல்வி, தொழில் வழிகாட்டுதலும் ஆலோசனை வழங்குதலும் தெடர்பான நிபுணத்துவ சேவை யாழ்ப்பாண மாணவர்களுக்கும், மக்களுக்கும் அவசியம் தேவையாவுள்ளது. இச் சேவையை தங்கள் கல்லூரியால் வழங்க முடியுமா?**

**♣ விடை:**

*தேவையான நிதி வசதியையும் மேலும் ஆளனி வசதியினைப் பெற அதிகாரமும் வழங்கப்படின் நிச்சயமாக எமது கல்லூரியால் அப்பணியினை ஆற்ற முடியும்.*

**வினா:**

**ஆசிரியர் கல்வியின் வழியாக வாழ்க்கையில் நீடித்த கல்வி முதலியவற்றை முன்னெடுத்தல் தொடர்பாகத் தங்கள் கருத்து?**

**விடை:**

*ஓடுகின்ற நீரில் ஸ்நானம் செய் என்பது ஒரு சீனப்பழமொழி. ஒரு ஆசிரியன் எப்போ கற்க மறக்கின்றானோ அன்றே அவன் தன் தொழிலை விட்டுவிட வேண்டும். கற்க மறந்த அல்லது மறந்த ஆசியரியன் அழுக்கான தேங்கிய நீர்தான். அதனாலேதான் "ஓடுகின்ற நீரில் ஸ்நானம் செய்" என்றார்கள் எனவே ஆசிரியர் கல்வி என்பது முதலில் நீடித்த கல்வியாக அமையவேண்டும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அடுத்து இதற்கேற்பவே கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப்படுகின்ற ஆசிரிய முன்பயிற்சிக் கல்வி அமைவதையும் தெரிந்து கொள்ள வேண்டும். அங்கு வகுப்பறைகளில் பயன்படுத்தப்படுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையியலை முறையாகப் பயன்படுத்த வேண்டுமானால் ஆசிரியர் தொடர்ந்து கற்றுக் கொண்டேயிருக்க வேண்டும்.*

*இதற்கு மேலாக உலக வங்கியினால் சிபார்சு செய்யப்பட்ட தொடர்கல்வி முறையும், ஆசிரியமையங்களும், ஆசிரியர் நிறுவனங்களும் ஆற்றவுள்ள பணிகள் ஆசிரியர்களின் நீடித்த கல்விக்கு உரமேற்றும் செயற்பாடுகள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.*

**♣ வினா:**

**இன்றைய யாழ்ப்பாணத்து அசிரியர்களுக்கு உயர் கல்வி பெறுதல், ஆய்வுகளைச் செய்து வெளியிடல் தொடர்பாகப் பல பிரச்சனைகள் உண்டு. B.Ed. பாட நெறி கூட இங்கு ஆரம்பிக்கப்படவில்லை. இது பற்றிப்பலர் அக்கறை கொள்ளாமல் இருப்பதற்குக் காரணம்?**

**விடை:**

*எம்மவர்களிடம் சமூக உணர்வு என்பது இன்று பெரிதும் சுருங்கி விட்டது என்ற கருத்தின் பாய்மை வடிவம்மதான் அந்த அக்கறை இன்மை என்பது. எமது சமூகம் வாழ வேண்டும். அப்போதுதான் எனது வளர்ச்சியில் பொருளிருக்கும் சமூகத்தை புறக்கணித்து நான் மட்டும் வளர்ந்தால் போதுமானது என்ற எண்ணம் என்று எம்மவர்களிடம் மறைகின்றதோ அன்றுதான் எமது சமூகம் வளரும். அப்போதே ஒவ்வொருவருடைய வளர்ச்சிக்கும் அர்த்தம் கிடைக்கும் யார் என்ன சொன்னாலும் எனது சொந்தக்கருத்து "ஆசிரியர்கள்தான் சமூகத்தின் முதுகெலும்புகள்" அவர்கள் வளர வேண்டும். அதற்கு B.Ed. போன்ற பாடநெறிகள், ஆய்வு மேற்கொள்ள வாய்ப்புக்கள் பெற்றுத் தரப்பட வேண்டும். எம்மைப் பொருத்தவரை B.Ed. நெறி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட வேண்டும் என்று உரத்த குரல் கொடுத்துள்ளோம்.*

**♣ வினா:**

**நீங்கள் இலங்கையில் பல பாகங்களில் கடமையாற்றியுள்ளீர்கள், நிறைந்த கல்வி முகாமைத்துவ அனுபவங்களையும் பெற்றுள்ளீர்கள். இன்றைய சிக்கலான நெருக்கடியான காலத்தில் அவசியமாகத் தேவைப்படும் முகாமைத்துவ நுட்பங்கள் எவையாகவுள்ளன?**

**விடை:**

*ஏனைய பகுதிகளில் கடைப்பிடிக்கப்படும் முகாமைத்துவமுறைகள் எமது பகுதிக்கு முற்றிலும் பொருத்த முடையதல்ல எமது பகுதிக்கேற்ற முகாமைத்துவ முறைகள் பின்பற்றப்படல் வேண்டும். ஆனால் பொதுவான விதி முறைகளிலிருந்து வேறுபடக் கூடாது. பொதுவாக மனிதநேயம் பாவற்றையும் அளவோடு முகாமைத்துவத்தில் பங்கு கொள்ளச் செய்யும் நுட்பம் போன்ற வெற்றியளிக்கக் கூடிய முகாமைத்துவ முறைகளாகலாம். இதற்கு அனுபவமும் துறைசார்ந்த நிபுணத்துவ அறிவுடன் மனித உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்படும் ஆற்றல்களும் தேவை.*

**♣ வினா:**

**ஆசிரிய கல்விகோள் நிலைச் சமூகத்தில் (Global Socecty) உலக பரிமாணங்களோடு ஒன்றிணைத்தல் தொடர்பான உங்கள் கல்லூரியில் திட்டங்கள் வெளிநாடுகளுடன் ஏதும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளீர்களா?**

**விடை:**

*தற்காலக் கல்விச் செல்நெறி உலகச் செல்நெறியாவும் கோள் நிலை சமூகத்தில் அதிகளவு ஈடுபாடு கொண்டிருக்கும் போது கல்வியில் புதிய விளிம்புநர்வை ஏற்படுத்திவரும் கல்வியியற் கல்லூரிகளால் அதிலிருந்து எவ்வாறு விலகியிருக்க முடியும்? ஆனால் எம்மைப் பொறுத்த வரை பிரச்னைகளை (இதைச் சாட்டாகக் கொண்டு நாம் வாழாதிருக்கக் கூடாது) தற்போதைய நாட்டுச்சூழல் சிறு தடைக் கல்லாகவேயுள்ளது. எமது தேவைகளின் அடிப்படையினைக் சில நிறைவு பெற்றதும் அப்பணியைத் தொடங்கும் திட்டம் உண்டு.*

❖❖❖

# கல்வி உளவியலில் ஞாபகம் MEMORY

திரு. S. செந்தில்மணி
விரிவுரையாளர்
யா / கோப்பாய் ஆசிரிய கலாசாலை
பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா
தேசிய கல்வி நிறுவகம்.

கற்றல். கற்பித்தல் செயற்பாடுகளில் ஞாபகம் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. மாணவர் தாம் கற்றவற்றை மிக விரைவில் மறந்து விடுவது கல்வியில் பின்னடைவைக் கொடுக்கிறது. ஞாபக சக்தியுள்ள மாணவர்கள் பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைவதையும் மற்றவர்கள் தோல்வியடைவதையும் பாடசாலையில் காணலாம். மீத்திறன் மாணவர் உயர்ந்த ஞாபக சக்தியை உடையவராக இருக்கின்றனர். எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் நினைவாற்றலை வளர்க்க வளம்படுத்த வேண்டிய கடப்பாடு உடையவராக உள்ளார்கள். இதைச் செய்வதற்கு ஆசிரியருக்கு ஞாபகம் பற்றிய தெளிவான விஞ்ஞான பூர்வமான விளக்கம் அவசியமாகும்.

மாணவர்களின் நினைவாற்றலை வளர்க்க உதவும் ஆசிரியர் தனது நினைவாற்றலையும் வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும். சிறந்த நினைவாற்றல் உள்ள ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக நடத்துகிறார்கள். இவர்கள் வகுப்பறையில் இருக்கும் தமது மாணவர்களின் பெயர்களை நினைவில் இருத்துவார்கள். மாணவர்களின் சொந்தப் பெயர்களைப் பயன்படுத்தி பணிப்புரை வழங்குவார்கள். சிறந்த நினைவாற்றல் உடைய ஆசிரியர்கள் வகுப்பறையில் அடிக்கடி புத்தகங்களையும். குறிப்புக்களையும் புரட்டி மாணவருக்குச் சலிப்பு ஊட்டமாட்டார்கள். இவர்கள் தாம் கற்பிக்கும் விடயங்களுடன் பல்வேறு விடயங்களைத் தொடர்புபடுத்தி கற்பித்தலைச் சிறப்பாகச் செய்வார்கள். மாணவர்கள் திறம்படக் கற்கவும். கற்றனவற்றைப் பலநாள் நினைவில் இருத்தி. தேவையானபோது பயன்படுத்திக் கொள்ளவும் இவர்கள் வழிகாட்டுவார்கள். எனவே ஞாபகம் பற்றிய விளக்கம் ஆசிரியர். மாணவர் ஆகிய இருசாராருக்கும் முக்கியமானதாகும். இவற்றை விளக்கும் வகையில் இத்தலைப்பு விரிவடைகிறது.

## ஞாபகத்திற்கான உயிரியற் காரணிகள்

ஞாபகப்படுத்தலுக்கான செயற்பாட்டில் மூளையானது மத்திய நிலையமாகத் தொழிற்படுவதாக நவீன விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் எடுத்துக் காட்டுகின்றன. புலன்கள் ஊடாகச் செல்லும் தகவல்கள் ஞாபகச் சுவடுகளாக மூளையில் பதியப்படுவதாக கருதப்படுகிறது. மூளையில் தோன்றும் மின் அலைகளும் இரசாயன மாற்றங்களும் ஞாபகத் தொழிற்பாட்டில் தொடர்புபடுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. தொடர்ந்து மூளை பற்றிய ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

### இவற்றுக்கு ஆதாரமாகச் சில சம்பவங்களைக் குறிக்கலாம்

1) விபத்தின் மூலம் மூளையில் பாதிப்பு ஏற்படும் பொழுது சில சமயங்களில் ஞாபக சக்தி இழக்கப்படுகிறது.
2) வில்லியம் என்ற நரம்பியல் நிபுணர் தனது நோயாளியின் மூளையில் சத்திர சிகிச்சை செய்யும் போது தவறுதலாக மூளைப்பகுதியைச் சேதப்படுத்தியதால் நோயாளி ஞாபக சக்தியை முற்றாக இழந்தார். தனது வீடு. உறவினர் அனைவரையும் மறந்தார்.
3) உளவியலாளர் டேவிட் கிறெச் (David krech) என்பவர் எலிகளை A. B என்ற இரு குழுக்களாகப் பிரித்தார். A குழுவில் இருந்த எலிகளுக்கு மூளைக்கு வேலை கொடுக்கக் கூடியதாக சில கற்றல் செயற்பாடுகளையும் மீள வலியுறுத்தல்களையும் கொடுத்து உற்சாக நிலையில் வைக்கப்பட்டது. B குழுவில் இருந்த எலிகளுக்கு ஒருவித செயற்பாடும் கொடுக்கப்படாமல் சோம்பேறிகளாக இருக்க ஒழுங்கு செய்யப்பட்டது. இரு மாதங்களின் பின்னர் இரு குழுக்களிலும் உள்ள எலிகளின் மூளைப்பகுதி வெட்டி ஆராயப்பட்டது.

A குழுவின் மூளைப்பகுதி விரிவடைந்தும் கனதியாகவும் இருப்பது காணப்பட்டது. ஆனால் B குழுவில் உள்ள எலிகளின் மூளைப்பகுதி இதற்கு எதிர்மாறாகக் காணப்பட்டது.
இவை மூளையானது கற்றல். நினைவில் இருத்தல். பிரச்சினை தீர்த்தல் போன்ற உயர் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

## நூல் நிலையத்தை ஒத்த ஞாபகச் செயற்பாடு

ஒரு நூல் நிலையத்தில் நூல்களைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்தாவிடில் அவை தொலைந்ததாகவே கருதப்படும்.. நூல்களைப் பெறல். நூல்களுக்கு இலக்கமிடல். பதிவு செய்தல். எண்ணிடப்பட்ட நூல் நிலையத் தட்டுகளில் ஒழுங்குமுறையில் அடுக்குதல் அல்லது களஞ்சியப்படுத்தல் போன்றவற்றை சரியான முறையில் செய்யும் பொழுது தான் எமக்குத் தேவையான நூலை அந்நூலகத்தில் இருந்து உடனடியாகப் பெறமுடியும். இந்நூலகச் செயற்பாட்டை நாம் ஞாபகச் செயற்பாட்டுடன் ஒத்து நோக்கலாம்.

| நூலகம் | ஞாபகம் |
|---|---|
| 1) நூல்களைப் பெறல் | புலன் மூலம் தகவல் பெறல் |
| 2) களஞ்சியப்படுத்தல் | ஞாபகம் வைத்தல் |
| 3) தேவையான நூல்களை எடுத்தல் | ஞாபகப்படுத்தல் (நினைவு கூர்தல்) |
| 4) தேவையான நூலைப் பெறமுடியாமை | மறதி |

ஞாபகம் என்ற செயற்பாட்டில் புலன்களின் மூலம் தகவல்களைப் பெற்று அவற்றைக் கள்சியப்படுத்தல் மூலம் ஞாபகத்தில் வைக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படுவது ஞாபகச்சுவடுகள் என்றும் அழைக்கப்படலாம். தேவையான பொழுது ஞாபகப்படுத்துதல் நினைவுகூர்தல் ஆகும். ஞாபகப்படுத்த முடியாவிட்டால் அது மறதி என அழைக்கப்படும்.. எனவே ஞாபகத்தைப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

## ஞாபகம் என்பதன் வரைவிலக்கணம்

தகவல்களைக் களஞ்சியப்படுத்தி திரும்ப மீட்டறிதல் ஞாபகம் ஆகும்.
ஞாபகம் மூன்று படிமுறையில் நடைபெறுகிறது. அவையாவன.
1) புலனுக்குரிய ஞாபகம் (Sensory memory)
2) குறுகியகால ஞாபகம் (Short term memory)
3) நீண்டகால ஞாபகம் (Long term memory)

மேற்கூறியவற்றை பூரணமாக விளங்கிக் கொள்ள சில புதிய விஞ்ஞானக் கலைச் சொற்களை அறிந்திருப்பது அவசியமாகும்..

### 1) பரிபாடை செய்தல் (Coding)

பரிபாடை என்பது பரிமாறுகின்ற பாஷை என்பது பொருளாகும். அதாவது குறியீடு செய்தல். சங்கேதமொழி என்பன இதன் கருத்தாக அமையும். மூளை சூழலிலிருந்து பெறும் தகவல்களைச் சில குறியீடுகள் மூலம் ஞாபகச் சுவடுகளாக (Memory Trace) தன்னுள் பதித்துக் கொள்கிறது. இச்செயற்பாடு பரிபாடை செய்தல் எனக் குறிப்பிடலாம்.

### 2) வகைப்படுத்தல் (Sorting)

தபால் நிலையத்தில் கடிதங்களை வகைப்படுத்துவது போல் மூளையும் சூழலிலிருந்து வரும் தகவல்களில் எவை ஞாபகத்தில் இருக்க வேண்டியவை. எவை தேவையற்றவை எனப் பாகுபடுத்தல் வகைப்படுத்தல் ஆகும்.

### 3) ஒத்திகை செய்தல் (Rehearsel)

நினைவில் இருக்க வேண்டியவற்றைத் திரும்பத் திரும்ப பழக்குவதும். பயிற்சி அளிப்பதும் ஒத்திகை செய்வதாகும்.

ஞாபகப் படிமுறைகளுக்கான விளக்கப் படம்




குழலிருந்து உள்வரும் தகவல்கள் புலன் சேமிப்பில் குறுகிய வினாடிக்கு வைக்கப்பட்டு அவை நீக்கப்படுகிறது. அதாவது மறக்கப்படுகிறது. அல்லது ஆரம்ப வகைப்படுத்தல் செய்யும் போது தகவல்கள் குறுகிய ஞாபகத்துக்குச் செல்கிறது. தகவல்கள் மீண்டும் மீண்டும் ஒத்திகை செய்யப்படும் பொழுது குறுகிய கால ஞாபகத்திற்குச் செல்கிறது. அல்லது குறுகிய காலத்தில் (20 வினாடி) மறக்கப்படுகிறது. ஒத்திகை செய்யும் காலம் அதிகமாகவும். தகவல்கள் பரிபாடை செய்யும் போதும் அவை நீண்ட கால ஞாபகத்திற்குச் செல்கிறது. நினைவு கூரப்படும் பொழுது தகவல்கள் நீண்ட கால ஞாபகத்திலிருந்து குறகியகால ஞாபகத்திற்குச் சென்று உணரப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக மூளை பயன்படுகிறது என உளவியலாளர் கூறுகின்றனர். மூளையில் இவை ஞாபகச் சுவடுகளாகப் பதியப்படுகிறது. (Memory Trace)

## புலனுக்குரிய ஞாபகம்

ஞாபகத்துக்குரிய முதலிடமாக சூழல் கருதப்படுகிறது. சூழலில் உள்ள தகவல்கள் புலன் உறுப்புக்கள் மூலம் எம்மை வந்தடைகின்றன. இவை புலன்சார் களஞ்சியப்படுத்தலின் மூலம் மிகக் குறுகிய வினாடிகளுக்கு நிலைத்து நிற்கும்.. பின்னர் மறக்கப்படும்.. இரவில் விளக்கு அணைக்கும் பொழுது இறுதியாகக் கண்ட பொருளின் விம்பம் குறுகிய வினாடிகளுக்கு நிலைத்து நிற்பது போலாகும்..

## குறுகியகால ஞாபகம்

புலனுக்குரிய ஞாபகத்தில் உள்ளவற்றை ஆரம்பவகைப்படுத்தும் பொழுது அவை குறுகிய கால ஞாபகத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இங்கு இருக்கும் காலம் குறுகியதாக இருந்தாலும் புலனுக்குரிய ஞாபகத்தை விட சிறிது அதிகமாக இருக்கும். (30வினாடிகள்) இதை நாம் தொலைபேசி எண்களைக் கொண்ட புத்தகத்தில் உள்ள எண் ஒன்று எமது ஞாபகத்தில் சிறிது நேரம் தங்கியிருப்பதைப் போன்ற செயலுக்கு ஒப்பிடலாம்..

மில்லர் என்ற உளவியலாளர் குறுகியகால ஞாபகத்தில் ஐந்திலிருந்து ஒன்பது வரையுள்ள பொருட்களை ஞாபகப்படுத்தலாம் எனத் தனது ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடித்துள்ளார். நீண்டகால ஞாபகத்தில் தேவையற்ற விபரங்கள் மேலதிகமாகச் சேர்வதைத் தடை செய்வதைக் குறுகிய கால ஞாபகம் செய்கிறது.

## நீண்ட கால ஞாபகம்

குறுகிய கால ஞாபகத்திலுள்ள தகவல்கள் மீண்டும் மீண்டும் ஒத்திகை செய்வதன் மூலமும் தகவல்கள் பரிபாடை செய்வதன் மூலமும் நீண்டகால ஞாபகத்தை அடைகின்றன. தகவல்கள் மூளையில் ஞாபகச் சுவடுகளாகப் பதியப்படுகின்றன. சூழலையும் நீண்ட கால ஞாபகத்தையும் இணைக்கும் பாலமாக குறுகிய கால ஞாபகம் அமைந்துள்ளது. நீண்டகால ஞாபகத்தில் தங்கியிருக்கும் தகவல்கள் நினைவுகூரும் பொழுது அவை குறுகிய கால ஞாபகத்திற்கு மாற்றப்படுகிறது. நீண்டகால ஞாபகத்தில் பாடசாலை விட்டு விலகிய ஒருவரை 30 வருட காலத்தின் பின்னரும் ஞாபகப்படுத்தலாம்.

## பரிபாடல் செய்வதற்கான முறைகள் (Coding)

பரிபாடல் செய்ய இருமுறைகள் பயன்படுத்தப்படுகிறது.
i) வாய்மொழி (VERBAL) ii) உருவம் (FIGURE)

வாய்மொழியாகவும் உருவம் மூலமாகவும் வரும் தகவல்கள் பரிபாடல் செய்யப்படுகிறது. உருவ ஒழுங்கமைப்பு மிக விரைவாக நீண்டகால ஞாபகத்துக்குச் செல்கிறது. ஆசிரியர்கள் மாணவர்களிடம் உருவங்களை பயன்படுத்தி சொற்களை வாய்மொழியாகச் சொல்லும் பொழுது அவை சிறப்பான முறையில் ஞாபகப் படுத்தப்படுகின்றது.

## ஞாபகத்தின் அளவீடுகள்

ஞாபகத்தை அளவிட மூன்று முறைகள் உள்ளன.
1) மீட்டறிதல் (Recall)
2) இனங்காணல் (Recognition)
3) மீளக்கற்றல் (Relearninig)

### மீட்டறிதல்

மீட்டறிதல் என்பது குறித்தவிடயம் கண்முன்னால் இல்லாத பொழுது குறைந்த தகவல் துணையுடன் சிந்தனையில் வரவைத்தல்.
உ-ம் : குறித்த வினாவுக்கு விடை எழுதுதல்

### இனம் காணல்

இனம் காணல் என்பது முன்னால் இருக்கும் பொருளை அல்லது விடயத்தை இதற்கு முன்னால் அறிந்தது என உரைப்படும் செயல்.
உ-ம் : பல்தேர்வு வினாவிற்கு விடையளித்தல்

### மீளக்கற்றல்

முன்பு கற்றவற்றை ஒருவர் மீண்டும் எவ்வளவு விரைவில் கற்கிறார் என்பதில் தங்கியுள்ளது. இதன் மூலம் கூடிய காலத்திற்கு பெரிய அளவிற்கு ஞாபகம் வைக்கலாம்.. சில சமயங்களில் ஒருவரால் ஒரு விடயத்தை மீட்டறிதல் இனம் காணல் முடியாதிருக்கலாம். ஆனால் அவ்விடயத்தை மிக விரைவில் மீளக் கற்கலாம்
உ-ம் : 1) பிரான்சுக்குப் போக முன்னர் ஒருவர் பிரான்ஸ் மொழியை மீளக்கற்றல். (Brushup)
2) ஒரு வேலைக்குப் போகமுன்னர் ஒருவர் சுருக்கெழுத்தை மீளக்கற்றல்

## நிரைப்படுத்தல் நிலையின் தாக்கம் (Serial Position effect)

பொருட்களோ எண்களோ நிரைப்படுத்தும் பொழுது அவை பற்றிய ஞாபகம் அவை இருக்கும் நிலையில் தங்கியுள்ளது.
3. 8. 2. 3. 5. 6. 8. 9. 1. 5. 4
மேல் உள்ள எண்களை ஒருமுறை சத்தமாக வாசித்த பின்னர் மீண்டும் எழுதச் சொன்னால் முதல் எண்ணையும் கடைசி எண்ணையும் பலர் ஞாபகப்படுத்துவார்கள். மற்ற எண்களில் பிழை விடுவார்கள்.

### காரணங்கள்

1) முதலுமும் கடைசியும் கண்ணில் தெளிவாகத் தெரியும்.
2) முதல் எண் நீண்டகால ஞாபகத்திற்கு முதல் சென்றுவிடும். கடைசி எண் குறுகிய கால ஞாபகத்திலிருக்கும். தேர்தல் வேட்பாளர்களின் சின்னங்கள் முதலாவதாகவும். கடைசியாகவும் உள்ளவை வாய்ப்பாக அமைகிறது.

## ஞாபகம் வைத்துக் கொள்ள சில நுட்பங்கள்

### 1) கதையாக்கல் முறைகள்

சில சொற்களை ஞாபகப்படுத்த வேண்டுமாயின் அவற்றை ஒழுங்கு முறையில் வைத்து கதை புனைதல் மூலம் ஞாபகப்படுத்தலாம்.
கண்டிவீதி. அழகியபெண். கௌரவப்பிரச்சினை. ஓட்டப்போட்டி. ஓயில். வேலி. புன்னகை. வைத்தியசாலை. கவலை.

**இச்சொற்களை ஒழுங்கு முறையில் ஞாபகப்படுத்த இச்சொற்களை வைத்துக் கதை புனைவோம்.**

குமரன் மோட்டார் சைக்கிளில் கண்டி வீதியால் சென்று கொண்டிருந்தவேளை அழகிய பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் குமரனை முந்திக்கொண்டு சென்றார். அவர் குமரனின் கண் மூலம் புலன்சார் ஞாபகத்திற்குச் சென்றார். ஒருபெண் தன்னை முந்துவதா என்ற கௌரவப் பிரச்சினையுடன் வேகமாகக் குமரன் அவரைப் பின் தொடர்ந்தான். ஆனால் அப்பெண்ணைக் கடக்க முடியவில்லை. இவ் ஓட்டப் போட்டி காரணமாக வீதியில் கசிந்திருந்த ஓயிலைக் கவனிக்காமல் சென்ற குமரனின் வாகனம் சறுக்கிக் கொண்டு வேலியோடு மோதி நின்றது. அவ் அழகியபெண் குமரனைத் திரும்பிப் பார்த்து புன்னகை செய்துவிட்டுச் சென்றார். குறுகியகால ஞாபகத்திலிருந்த அவ் அழகிய பெண். வைத்தியசாலைக் கட்டிலில் இருக்கும் போதும் ஞாபகம் வந்ததால். தனது நீண்டகால ஞாபகத்துக்குள் அப்பெண் சென்றுவிட்டார் என்பதை அறிந்து குமரன் கவலையடைந்தான்.

### 2) ஒழுங்குமுறை (Locus Method)

இதன் மூலம் பலசொற்களையோ கணிதச் சமன்பாடுகளையோ ஒழுங்குமுறையில் ஞாபகப்படுத்தலாம். முதலில் எமக்குத் தெரிந்த ஒரு பாதையைத் தெரிய வேண்டும். ஞாபகப்படுத்த வேண்டிய சொற்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அப்பாதையின் வழியே செல்லும் போது எமக்கு நன்கு தெரிந்த இடங்களில் இச்சொற்கள் ஒவ்வொன்றையும் தொடர்புபடுத்த வேண்டும். இதன் மூலம் நாம் பல நாட்களுக்குப் பின்னரும் அப்பாதையால் செல்வதாக நினைத்துக் கொண்டு உரியனவற்றை ஞாபகப் படுத்தலாம்.

உதாரணமாக கொக்கு.பாம்பு.வெறுமை. வாசனை. கோவா. இச்சொற்களை ஒழுங்குமுறையில் ஞாபகப்படுத்த கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலிருந்து கோப்பாய் சந்திக்குச் செல்லும் போது அவ்வழியிலுள்ள சில இடங்களை ஒழுங்கு முறையிலெடுப்போம்.

காவலர் அறை. கோப்பாய் மகாவித்தியாலயம். கடை. மில்சந்தி என்பவற்றை எடுப்போம். காவலர் அறையின் மேல் ஒரு கொக்கு இருப்பதாகவும். மகாவித்தியாலய மதிலில் பாம்புகள் பல இருப்பதாகவும் கடையில் அலுமாரி வெறுமையாக இருப்பதாகவும் மில்லில் இருந்து வாசனை வருவதாகவும் சந்தியில் கோவா பல சிதறி இருப்பதாகவும் தொடர்புபடுத்துவோம். இதன்மூலம் பாதை வழியாக செல்வதாக நினைத்து இதை ஞாபகப்படுத்தலாம்.

### 3) ஞாபகம் வைப்பதற்கான நுட்பங்கள்

முன்பு கணிதம் கற்ற மாணவர் π இன் பெறுமானத்தை 13 ஆம் தசமதானம் வரை ஞாபகப்படுத்திய ஒருமுறையைப் பார்ப்போம். ஆங்கிலப்பாட்டை ஞாபகப் படுத்துதல் இங்கு தேவைப்படுகிறது.

How I wish I Could determine
of circle round
the exact relation
Archimdes found

இப்பாட்டில் வரும் ஒவ்வொரு சொல்லினதும் எழுத்துக்களின் எண்ணிக்கையை ஒழுங்கு முறையில் எழுதவேண்டும். அப்பொழுது
π=3.1415926535895 என்பதைப் பெறலாம்.

### 4) குறியீட்டு முறை

குறியீட்டு முறை மூலம் சிலவற்றை நாம் ஞாபகப்படுத்தலாம். இம்முறை பாடசாலையில் பயன்படுத்துவதைக் காணலாம்..
1. ஏழு நிறங்கள்
VIBGYOR
2. கணிதச் செய்கை ஒழுங்கு
BODMAS

### 5) கிழமை நாட்களில் எப்பொழுது இராகுகாலம் வருகிறது என்பதை நினைவில் வைத்திருப்பதற்கான முறை

| Edward | brought | home | a |
|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | ↓ |
| தி | செ | பு | வி |

| good | ford | Car |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| வெ | ச | ஞா |

ஒவ்வொரு சொல்லிலும் உள்ள முதல் எழுத்து அகரவரிசையில் எவ்வளவு என்பதை அறிந்து அதனை 1½ யால் பெருக்கல். வரும் விடையும் அதனுடன் 1½ மணி கூட்டுவதால் பெறப்படும் விடைக்கும் இடைப்பட்ட காலம் இராகு காலம் ஆகும். முதல் எழுத்து திங்களில் தொடங்கி ஒழுங்கு முறையில் செல்கிறது.

# பாடசாலையும் பாடவிதானமும் ஒரு நோக்கு

**தா. அமிர்தலிங்கம்** [M.A.(Ed.)]
**விரிவுரையாளர் - பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா**
**தேசிய கல்வி நிறுவனம்**
**பிரதி அதிபர் யா/ அத்தியார் இந்துக்கல்லூரி**

"பாடசாலை சமூகத்தினது பிரதிவிம்பம்" என்பது டுயியின் கருத்தாகும். சமுதாயம் தாம் பெற்றவற்றை இளம் சந்ததியிடம் ஒப்படைப்பதற்கு அடித்தளமாக பாடசாலை இருக்க வேண்டும். அதேவேளை எதிர்காலத்திற்குத் தேவையான அறிவு, திறன் மனப்பாங்குகளையும் உருவாக்கும் அமைப்பாகவும் செயற்பட வேண்டும். கல்வி வாய்ப்புக்கள் இன்று எல்லோருக்கும் சமமாக கிடைக்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. மாணவன் இன, மத, சமூக நிலை, மற்றும் வேறுபாடுகளின்றிப் பாடசாலைகளில் கல்விகளை வழங்கி கல்வியைச் சந்தோஷகரமான சூழலில் கற்பின் கல்வி இலகுவாக இருப்பதுடன் வெற்றியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த காலத்தில் இவற்றைச் செய்யத் தவறியதால் பல குறைபாடுகள் கூறப்படுகின்றன. அவையாவன.

01. கல்விவேறு வாழ்க்கைவேறு என்றநிலை இருந்தமை.
02. கல்வியானது பல்வேறு பிரச்சனைகளை மாணவன் எதிர்கொள்ளக் கூடிய அளவில் வழங்கப்படவில்லை.
03. மாணவனிற்குத் தன்னைப் பற்றி, சமுதாயத்தில் தன்நிலைபற்றிச் சரியான விளக்கமின்மை.
04. தீர்மானம் எடுக்கும் ஆற்றல் இல்லை.
05. ஆக்கபூர்வமான சிந்தனைகள் வளரவில்லை.
06. மாணவர்களது இயல்பான ஆற்றலை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பங்கள் பாடசாலையில் வழங்கப்படவில்லை.
07. இன மத விரோதங்கள் அதிகரித்திருக்கின்றன.
08. தலைமுறை இடைவெளி அதிகரித்திருக்கின்றது.
09. பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் பாடசாலைக் கல்வி போதியளவு பங்களிப்புச் செய்யத்தவறிவிட்டது.
10. மாறிவரும் உலகிற்கேற்ப பொருத்தப்பாடு இல்லை.

இவ்வாறான குறைபாடுகளை நீக்கப் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் 1997ல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

இன்றைய பாடசாலைகள் பல நோக்கங்களை உடையதாகச் செயற்படுகின்றன.

01. உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சமநிலை ஆளுமை உடைய மனிதனை உருவாக்குதல்.
02. வேலையுலகை அறிமுகம் செய்தல்.
03. சமூகத்திறன் உடையவனாக்குதல்.

1வது நோக்கத்தைப் பொறுத்தவரையில் பல கருமங்கள் எழுகின்றன. மாணவரிடம் காணப்படும் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டு வரல், ஒழுக்கம் உடையவனாக்குதல், தகவல் திரட்டும் திறனையும் பகுத்தாயும் திறனையும் வளர்த்தல், நேர்மை நட்புறவு ஆகியவற்றை வளர்த்தல், பிறர்நலம் பேணல், சமூகவிழுமியங்களை வளர்த்தல் போன்றவற்றைப் பாடசாலை வளர்க்க வேண்டும்.

2.ஆவது நோக்கத்தைப் பொறுத்தவரையில் வேலைஉலகு பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவனிடம் பல பண்புகளை எதிர்பார்க்கின்றது. கடின உழைப்பு, மரியாதை, கீழ்ப்படிவு, பொறுப்புடைமை, நேர்மை, கையெழுத்து, நேரம் தவறாமை, சந்தோஷகரமான தோற்றப்பாடு, தொழில்நுட்பத்திறன்கள், கணனிப்பிரயோகம் போன்றவற்றை எதிர்பார்க்கின்றது. எனவே பாடசாலை, வேலை உலகிற்குப் பொருத்த மானவர்களை உருவாக்கி நாட்டின் அபிவிருத்திக்கும் தனியார் வளர்ச்சிக்கும் உதவவேண்டும்.

சமூகத்திறனைப் பொறுத்த வரையில் மாணவர்கள் பல தன்மைகளைப் பெற்று விளங்க வேண்டும். தலைமை தாங்கும் தன்மை, விட்டுக்கொடுக்கும் உணர்வு, பிறர்நலனைப் பேணும் சகிப்புத்தன்மை, சமூகநீதியை வளர்த்தல், தலைமுறை இடைவெளியை உணர்தல், சமயப்பற்றை வளர்த்தல், பல்லின சமதாயத்தின் கலை கலாச்சாரவிழுமியங்களை அறிந்து மதித்தல் போன்ற திறன்கள் பாடசாலையில் வளர்க்கப்பட வேண்டும்.

பாடசாலையின் நோக்கங்கள், இலக்குகள் நிறைவேற அடித்தளமாக அமைவது பாடவிதானமாகும். இப்பாடவிதானம் முறைகள் பாடவிதானம், பாடசாலையில் இப்பாடவிதானம் முறைசார்பாடவிதானம், இணைபாடவிதானம், முறையில் பாடவிதானம், பாடசாலையில் உருவாக்கப்படும் வேலைத்திட்டங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. பாடவிதானம் என்கின்ற பொழுது பாடசாலையின் கற்றல் செயற்பாடுகள் நோக்கங்கள், இலக்குகள், பாட உள்ளடக்கம், கற்பித்தல் அணுகுமுறைகள், தொடர் மதிப்பீடு, கற்றலிற்கு அவசியமான வளங்கள் யாவற்றையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட வேண்டும். இவ்விதம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் அமையும் போது பாடசாலையினுடைய நோக்கங்கள் நிறைவேறுவதோடு, இன ஒருமைப்பாடு, சமூகநீதி, நாட்டின் அபிவிருத்தி இலக்கு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமான இடத்தைப் பெறல் ஆகிய தேசிய இலக்குகளும் எய்தப்படுகின்றன.

பாடசாலையில் 1999ல் இருந்து ஆரம்பக்கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. இங்கு தமிழ், சுற்றாடல், கணிதம், சமயம், ஆங்கிலம், ஆகிய பாட ஒழுங்குகளுடன் இணைபாடவிதான செயற்பாடுகளும் முக்கிய இடம் பெறுகின்றன. மேலும் மாணவர்களிற்கு ஒழுக்கம், கலாச்சார தத்துவங்களைப் பற்றிய அறிவும் வழங்கப்பட வேண்டும். இவ்வாரம்பக்கல்விச் சீர்திருத்தங்களை பொறுத்தவரையில் மூன்று கட்டங்களாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் (பாடவிதானம்) அமுல்படுத்தப்படுகின்றன.

## முதற்கட்டம் தரம் I. II

### இங்கு முக்கிய கற்றல் முறைகளாவன

01. மேற்பார்வையுடனான விளையாட்டு
02. செயல் சார்ந்த கற்றல்
03. மேசை சார்ந்த கற்றல் (முன்னைய இரண்டிலும் பார்க்க குறைவு)

## இரண்டாவது கட்டம் தரம் III, IV

முதற்கட்டத்தில் உபயோகிக்க மூன்று முறைகளும் சரிசமமான அளவில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் இடம் பெறும்..

## மூன்றாவது கட்டம் தரம் V

இங்கு மேசை சார்ந்த கற்றல் முறைக்குத் துணையாக ஏனைய இரண்டு கற்றல் முறைகளும் உதவும்.

ஆரம்பக் கல்விச் சீர்திருத்தங்கள் வாயிலாக மாணவன் அடிப்படைத் திறன்களை வளர்ப்பதுடன் கற்றலிற்கான கற்றலை மகிழ்ச்சிகரமாக வளர்த்துக் கொள்கின்றான். இத்தகைய ஆர்வம் இடைநிலைக் கல்விக்கு அவசியம்.

### செயற்பாட்டறை :

பாடசாலைச் செய்முறைத்திறன்களை வளர்க்கும் நோக்குடன் செயற்பாட்டறை பாடசாலைகள் தோறும் அமைக்கப்படவேண்டும். இச் செயற்பாட்டறையில் மாணவர்கள் தமக்குரிய திறன்களை இனம்கண்டு வளர்க்க வழிவகை செய்யப்படல் வேண்டும். செயற்பாட்டறையுடன் விவசாயப் பண்ணைகளும் அமையும்போது சூழலிற்குப் பொருத்தமான திறன்கள் வளர்க்கப்பட வேண்டும். இச செயற்பாட்டறை மாணவனது திறன்களைப் பரீட்சயப்படுத்திக் கொள்ள உதவும்..

இடைநிலைப் பாடவிதானத்தில் அமைந்த பாடங்களை மேலும் வளப்படுத்த பாட மேம்பாட்டுத்திட்டங்கள் பாட ஆசிரியர்களால் தயாரிக்கப்பட வேண்டும். இம்மேம்பாட்டுத்-திட்டங்கள் களப்பிரயாணங்கள், பாடத்தினங்கள், பாடப்பாசறைகள், பாத்திரமேற்று நடித்துக்காட்டல், காட்சிப் பலகைகள், மாணவர் ஆக்கங்கள், உங்களிற்கு தெரியுமா? நிகழ்ச்சி (வினாடிவினா) பிற அறிஞர்களை வரவழைத்து விரிவுரை களை ஒழுங்குசெய்தல் போன்றனவாக இருத்தல் வேண்டும். பாட ஆசிரியர்கள் காலத்திற்குக் காலம் இவற்றில் ஒன்றையோ / இரு செயற்திட்டங்களையோ நடைமுறைப்படுத்துகின்ற போது அந்நிகழ்வுகள் பாடம் பற்றிய அறிவை வளர்ப்பதோடு மாணவனது மனங்களில் என்றும் நினைத்து நிற்கக்கூடிய சந்தோசகரமமான நிகழ்வாக அமையும்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் ஊடாக பாடசாலை மட்டக்கணிப்பிடு நடைமுறைக்கு வந்துள்ளது. இத்தொடர் மதிப்பீட்டின் ஊடாக பாடங்களில் மாணவன் அடையும் முன்னேற்றம், மாணவன் கற்கும் விதம், கடினமான பகுதிகளை இனங்காணல், குறைநீக்கல், போன்றவற்றைச் செய்ய இக் கணிப்பீடு உதவுகின்றது. இன்று பரீட்சைக்கணிப்பீட்டுத் திணைக்களம், 9ம் ஆண்டு மாணவர்களிற்கு 2000ம் ஆண்டு முடிவில் பாடசாலை மட்டக் கணிப்பீடு, மாகாண அமைச்சின் பொதுப் பரீட்சையின் பெறுபேறு ஆகியவற்றை உள்ளடக்கிய சான்றிதழ்களை வழங்க இருக்கின்றது. இச் சான்றிதழ்களை வருங்காலத்தில் வேலை உலகு ஏற்றுக் கொள்ளும்.

புதியகல்விச் சீர்திருத்தங்களும் வெற்றிபெற ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அத்தியவசியமானதாகும். அவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் பாடவிதான சீர்திருத்-தங்கள் வெற்றிபெற முடியாது. எனவேதான் கல்விச் சீர்திருத்தக் ஆசிரியஅபிவிருத்திக்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளன. மாணவமையக் கல்வி விரிவுபடுத்தப்பட வேண்டும். மாணவன் தேடலிற்கு அவசியமானவற்றை உருவாக்குதல் ஆசிரியரின் பணியாகும். இதன் பொருட்டு பரிசோதனைகள், ஒப்படைகள், பாட மேம்பாட்டுத்திட்டங்கள், செய்திட்டங்கள், கட்புல செவிப்புல சாதனங்களை உருவாக்குதல் போன்றவற்றில் ஆசிரியர்கள் அதிக ஈடுபாட்டைக் காட்ட வேண்டும். ஆசிரியர் மாணவனினது நடத்தைக் கோலங்களை அவதானித்து ஆலோசனை கூறவும் வழிகாட்டலும் முக்கிய பணியாகும். புதிய சீர்திருத்தங்களின் படியும் எதிர்கால கல்விச் செல்நெறிக்கமையவும் தம் தரம் முடிவில் ஒரு தொகுதி மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறும் பொழுது அவர்களிற்குத் தொழில் வழிகாட்டலைச் செய்தல் ஆசிரியர்களின் முக்கிய பணியாகும்.

மேல்வகுப்புக்களில் மாணவர்களின் வாசிப்புப்பழக்கம் விரிவுபடுத்தப்படவேண்டும். இதன் பொருட்டு ஆசிரியர்கள் பலவற்றை, அதாவது வகுப்பறை நூல்நிலைய, பாடசாலை நூல்நிலையங்களை விரிவுபடுத்த வேண்டும். மாணவனினது சந்தோஷகரமான தோற்றப்பாட்டினை வேலையுலகு எதிர்பார்க்கின்றது. இந்நிலையில் ஆசிரியர் பாடசாலையிலும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் சந்தோஷகரமான கவின் நிலையை உருவாக்க வேண்டிய பொறுப்பு உடையவர் ஆவார்.

### பாடசாலைக் கவின் நிலை:-

பாடசாலைக் கவின்நிலை என்பது மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் சிற்றூழியர்கள் யாவரினாலும் கட்டியெழுப்பப்பட வேண்டிய தொன்றாகும். மாணவர்கள் பாடசாலைக்கு வர உந்து சக்தியாக இருப்பது பாடசாலைக்கவின் நிலை ஆகும். இக்கவின் நிலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சந்தோஷகரமாக நீடிக்க உதவும். அழகான கட்டடங்களிலும் பார்க்க இக்கவின் நிலையே மகிழ்ச்சிகரமானதாகும். பாடசாலையின் கற்றல் தொழில்நுட்பம் இலகுவாக இருப்பதுடன் ஆசிரிய அதிபர் தொடர்புகள் சிறப்பாக இருந்தால் தான் மாணவன் பாடசாலையிலிருந்து நல்ல விழுமியங்களையும், பழங்க வழக்கங்களையும் கற்றுக் கொள்ளலாம்

எனவேதான் வேலைத்திட்டங்கள் பாடசாலை மட்டத்தில் காணப்படும் பிரச்சனைகள், வளங்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஆண்டு தோறும் உருவாக்கப்படுகின்றன. இவ்வேலைத் திட்டங்களையும் முறைசார் பாடவிதானம், இணைபாடவிதானமும், மறை பாடவிதானம் ஆகியவற்றை இணைத்து பாடசாலைப் பூரணபாடவிதானம் உருவாக்கப்படுகின்றது. இத்தகைய பூரண பாடவிதான ஆசிரியருக்கு இருக்கும் போது பூரண மனிதனை உருவாக்கும் பணி இலகுவாகிவிடும் இலக்குகளும் அத்துடன் தேசிய இலக்குகளும் அடையப்படுவதோடு பாலர்தன்மையை உருவாக்கும்

### தேவாரங்களின்.....கூற்றாயினவாறு என்று தேவாரத்தில்....

(ஏனை பக்கத் தொடர்ச்சி)

'கூற்று' என்பது இறைவன் முன்னர் அப்பருக்கு கூறிய கூற்று எனப் பொருள் கொண்டு, அக் கூற்றுக்கு ஏற்றவாறு 'வில்லாக்கலை' எனக் கொள்ளப்படுகின்றது.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம் .....' என்னும் தாண்டகப் பாடல் நவீன கால அரசியல் நிலைக்கேற்றபடியானதொரு வாசிப்புப் பெறுவதை நாம் அறிவோம்.

### நிறைவுரை

தமிழ்மொழியினுடைய ஆற்றற் பண்புகள் பல தேவாரப் பாசுரங்களூடாகப் புலப்படுகின்றன. தமிழ் இப்பாசுரங்களிலே பக்தியின் மொழியாக பரிணமிக்கின்றது. மொழியின் பல்வகையான வளர்ச்சி நிலைகளைத் தேவாரப் பாடல்களிலே காண முடிகின்றது. பதிகம் என்னும் இலக்கிய வடிவத்தினை ('பதிகம்' பற்றிப் பார்க்கவும் சண்முகதாஸ், 1986) அமைப்பதற்குத் தமிழ்மொழி தன்னாற்றல்களைத் தந்துள்ளது. அவ்வடிவம் 'பக்தி' என்னும் பொருளை உணர்த்துவதாயமைந்தது.

### உசாத்துணைகள்

1. மூவர் தேவாரம் : தலைமுறை, ஸ்ரீ காமகோடி ஆய்வு மையம், கும்ப கோணம், 1988.
2. சண்முகம், செ.வை: 'மொழி', சங்க இலக்கியம்: கவிதையியல் நோக்கு - சிந்தனைப் பீன்புல மதிப்பீடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
3. சண்முகதாஸ், அ.: 'பதிகம்: தோற்றமும் வளர்ச்சியும், தமிழியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1986, பக். 73 - 94.

♦♦♦

### மாணவர் இடைவிலகல்.....

பட்டு பொருளாதாரம், கல்வி இரண்டும் இணைந்து செயற்படும் அமைப்பு நம் நாட்டில் இல்லாமையே முக்கிய குறைபாடாகும்.

நம் நாட்டில் பாடசாலையை விட்டு விலகும் மாணவரிடையே வறுமை முதலிடம் பெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பொருளியல் நோக்கு -1981 (ஆதாரம்)

| இடைவிலகல் காரணம் | நூற்றுவிதம் |
|---|---|
| வறுமை | 48.29 |
| பாலியல் குற்றங்கள் | 14.18 |
| பொருத்தமற்ற பாடத்திட்டம் | 12.01 |
| பாடசாலை இல்லாமை | 4.01 |
| தொழிலுக்குச் செல்லல் | 1.09 |
| காரணமின்மை | 20.42 |
| | 100.00 |

### இடைவிலகலுக்கான காரணங்கள்

1. குடும்பப் பின்னணி
2. பாடசாலைப் பின்னணி
3. நாட்டு நிலமை
4. கலைத் திட்டக் குறைபாடு

### குடும்பப் பின்னணி

1. பொருளாதாரப்பிரச்னை -உணவு, உடை, பாடசாலை உபகரணப் பற்றாக்குறை
2. பருவ கால உழைப்புக்குச் செல்லல்
3. பெற்றோர் அக்கறையின்மை - வயிற்றுப் பிழைப்பில் காட்டும் அக்கறை பிள்ளை வாழ்க்கை விருத்தியில் காட்டுவதில்லை.
4. வீட்டு சூழல், உளத்தாக்கமும், பீன்தங்கலும் (பெற்றோர் பிரிவு - குடிபோதை)
5. பகலில் பிழையான பொழுதுபோக்குகளை நாடல்
6. பெற்றோர் கல்வியறிவின்மையால் வழிகாட்ட முடியாமை
7. பாடசாலை வீட்டுச் சூழல் முரண்பாடு
8. சமுதாய சூழலிலுள்ள தீய பழக்கவழக்கங்கள்.
9. உளவியல் காரணிகள்- வளர்ச்சிக் கட்டப் பருவமாற்றம் -மனநிலை மாற்றம்

சமவயதுக் குழுவின் (Peer Group) பாதிப்பு

### பாடசாலை சார்ந்த காரணி

1. பாடசாலைப் பாடம் சுமையாக இருத்தல்
2. பரீட்சை அச்சுறுத்தல் பயம்
3. ஆசியர்கவர்ச்சிகரமான கற்பித்தல் முறையைக் கையாளாமை
4. பிள்ளையின் உளநிலையறிந்து அணுகாமை
5. பிள்ளையின் பிரச்சனையறிந்து வழிகாட்டாமை
6. பாடசாலை நிருவாகம், ஆசிரியரின் தண்டனை முறையும் - கருமையான கட்டளைகளின் தாக்கமும் (மனமுறிவுகள்)
7. தொடர்ச்சியான நோய் - புறக்கணிப்பு
8. வளப் பற்றாக்குறை பௌதீக வளம் - ஆசிரிய வளம்
9. ஆரம்பக்கல்வி அபிவிருத்தியைப் புறக்கணித்தல் or அக்கறை எடாமை

இது தொடர்ந்து பிள்ளையை கற்றலில் பின்னடையச் செய்கின்றது. இப் பிள்ளை இடைநிலைக் கல்வியில் மேலும் உளநெருக்கடிகளைச் சந்திக்கின்றது. கல்வியில் வெறுப்பு ஏற்பட பிள்ளையை இடைவிலக வைக்கிறது.

(ஆரம்பக்கல்வி கவர்ச்சிகரமாக அமையின், பிள்ளைக்கு கல்வி ஆர்வம் ஏற்படின் இடைவிலகலை பிள்ளை விரும்பாது)

### நாட்டு நிலைமைத் தாக்கம்

1. சமகால பேர்ச்சூழல் விரக்தி
2. பாதுபாப்பு பற்றிய உளநெருக்கடி
3. இடப்பெயர்வு கல்வியைப் பாதிக்கிறது
4. வெளிநாட்டுக் கவர்ச்சி கல்வி ஆர்வத்தைப் பாதிக்கிறது - தாவும் போகலாம் என்ற எதிர்பார்ப்பு.
5. வெளிநாட்டுப் பணத்தால் பாதிப்பு ஆடம்பர மனப்பாங்கு
6. தாய், தந்தை வெளிநாட்டில் உழைக்கச் செல்வதால் வீட்டில் பாதிப்பு அல்லது சகோதரரை அனுப்ப நீண்ட காலம் கொழும்பில் நிற்றல், பிள்ளைக்கு வேலைச்சுமை, பாதுகாப்பு, அன்பு, கவனிப்பு, தேவை நிறைவேற்றாமை, வழிகாட்டில் வீட்டில் கிடையாமை உளநெருக்கடி சந்தர்ப்பங்கள், உணவு பராமரிப்பு குறைபாடு.

### கலைத்திட்டத்திலுள்ள குறைபாடுகள்

1. பரீட்சை இலக்குக் கல்வி
2. தொழில் நுட்பக் கல்விக்கு முக்கியமளியாமை
3. கல்விவேலை உலகு தொடர்பின்மை
4. சுயவிருத்திக்கு இடமில்லாத கல்விமுறை
5. ஆன்மீக ஆளுமை விருத்திக்கு அழுத்தம் கொடாமை
6. செயல்முறையை விட அறிமுறைக்கு அழுத்தம் வழங்கியமை

♦♦♦

# உயர்வு நோக்கிய இலக்கிற்கு வழிகாட்டும் மனிதவள முகாமைத்துவம்

சமூக மாற்றங்களுக்கு ஏற்பவே பொது நிறுவனங்கள் கல்வியமைப்புக்கள், பாடசாலைகளின், இருப்பும், போக்கும், செயற்பாடுகளும் அமைதல்வேண்டும். புதிய நூற்றாண்டை நோக்கி உலகம் வேகமாக மாற்றடைந்து வருகின்றது. இம் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து இயைபாகி நோக்கங்களை நிறைவேற்ற புதிய மனிதவள முகாமைத்துவக் கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது.

பல்வேறு நிலைகளில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் இலகுவாகத் தீர்ப்பதற்கே பல நிறுவனங்களில் முகாமையாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். அனால் பெரும்பாலான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அரசசேவை, பாடசாலை முகாமையாளர்கள் இருக்கின்ற பிரச்சனைகளை மேலும் அதிகமாக்கி விடுகின்றார்கள் என புலிசேப் அமைப்பின் சமூக முகாமை நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். இதைப் போக்க மனிதவள முகாமை பற்றிய விழிப்பு அவசியமாக வேண்டப்படுகின்றது. அத்துடன் தற்போதைய எல்லாப் பொது நிறுவனக்கட்டமைப்புக்களில் நிர்வாகக் கலாச்சாரம் மாற்றமடைந்து முகாமைத்துவ கலாச்சாரமே நடைமுறையில் கைக் கொள்ளப்படுத்தவைபற்றி அறியாமல் உள்ளனர். இந்நிலையைப் போக்கவும் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையின் கல்வித்துறையில் 1984ம் ஆண்டு கல்வி முகாமைத்துவ சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டமையையும் இவ்வேளை நினைவில் கொள்ளவேண்டும்.

## தந்திரோபாய முகாமை

விரைவான சூழல் மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அவை தவிர்க்க முடியாதவை. ஆனால் போட்டிகளும், சவால்களும் வெற்றி கொள்ளப்படக் கூடியவை. இவை சரியானநேரத்தில் சரியான தந்திரோபாய நுட்பத்தைச் சரியான வழிகளில் பயன்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும். இங்கு தந்திரோபாயம் (Strategy) என்பது சூழலின் நிலைமைகள் சவால்களுக்கு ஏற்ப நிறுவனத்தின் நலன்களைக் கருத்திற் கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட தொடர்ச்சியான கருத்துக்களும் செயற்பாடுகளும் கொண்ட ஒரு விசேட திட்டமாகும். இது சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றமடையும் நிபந்தனைகளையும் கொண்டது.

தந்திரோபாய நுட்பங்களைக் கொண்ட தீர்மானங்களே ஒருநிறுவனத்தின் சிறந்த தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியை உறுதி செய்கின்றன. ஒரு நிறுவனத்தின் தகவல்களையும் செயற்பாடுகளையும், பகுப்பாய்வு செய்வதுடன், நிறுவனத்தின் தேவைகள், எதிர்கால ஆபத்துக்கள், சவால்கள் என்பவை பற்றிய முழுமையான மதிப்பீடு தந்திரோபாய தகவல் முறையைத் திட்டமிடல் எனப்படும்.

குறிப்பிட்ட நிறுவனத்தின் இலக்கை அடைவதில் அச்சுறுத்தலாகவும், தடையாகவுமுள்ள காரணிகளை எதிர்த்து நிற்கக் கடிய வகையில் தந்திரோபாய மாற்றீடுகளைப் பகுப்பாய்வு செய்து, சிறப்பான மாற்று உத்திகளைத் தெரிவு செய்தலும் அவசியமாகும். இதற்குத் தகவல் தொழில் நுட்பத்தையும், தொடர்பாடல் முறைகளையுமே முழுமையாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்திற்கான தந்திரோபாயப் பங்களிப்பு (The strategic Role for Information Technology) மனித வள முகாமையில் இன்று பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. கணனியுடான தகவல் தொழில்நுட்பம், தொழில்பாட்டு வினைத்திறனை மட்டும் பெற என்ற நிலை நீங்கி அது மனிதவள முகாமையின் பல்வேறு மட்டங்களுக்கும் உதவும் வகையில் தகவல்களை வழங்குதல், தீர்மானம் எடுத்தல், அறிக்கையிடல், கட்டுப்படுத்தல் எதிர்கால நடவடிக்கைகள் போன்ற பல்வேறு முகாமைத்துவத் தொழிற்பாடுகளுக்கும் பயன்படுகின்றது. இதனூடாகத் திறமை மிக்கதான வளப் பயன்பாட்டினையும் ஏற்படுத்த முடியும். இங்கு வினைத்திறன் (Efficiency), பயனுறுதி (Effectiveness) என்ற இரண்டு முக்கியம் பெறுகின்றது. வினைத் திறன் வளங்களோடும், பயனுறுதி குறிக்கோள்களோடும் நிறுவனத்தை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

நிறுவனத்தின் செயற் திட்டங்களை வெற்றிகரமான ஒரு முடிவு நிலைக்குக் கொண்டு வருதலைச் சாதனைபுரிதல் என்ற அம்சம் குறிந்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு ஊழியரும் நிறுவனத்தின் நோக்கங்களோடும் இலட்சியங்களோடும் வாழும் போது தான் சாதனை புரிதல் ஏற்படும். சாதனை புரிதல் புதுமையான ஈடுஇணையற்ற திட்டங்களை உருவாக்கல் என்பவற்றில் ஊழியர்களின் பங்களிப்பினை உயர்ந்த வழிகாடும்.

## சமூக – நிறுவன கலாச்சாரம் (Socio Organisational Culture)

மனிதவள முகாமை நோக்கிய கலாச்சாரம் எனபது சமூகக்கலாச்சாரம், நிறுவன கலாச்சாரம் என இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றது. பொதுவாக சமூக நடத்தைகளின் தொகுப்பாகவே சமூக கலாச்சாரம் கொள்ளப்படுகின்றது. இப் பண்புகள் ஒவ்வொரு சமூக அங்கத்தவரது நம்பிக்கைகள், நடத்தைகள், என்பவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது. இச்சமூகக்கலாச்சார விழுமியங்களில் நிறுவனங்களும் ஊடாடி தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நிறுவனத்தின் நடிக் துடிப்பின் எச்சங்கள் சமூக கலாச்சாரம் நோக்கிய அதன் வெளியீட்டு இதழ்கள், நூல்கள், ஆய்வு ஏடுகள், விவரங்கள், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள், பத்திரிகை அறிக்கைகள் என்பனவாகும். நிறுவன கலாச்சாரம் என்பது அதன் வழமையான செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு என எடுகோள்களின் தொகுப்பாகவுமுள்ளது. இக் கலாச்சாரங்கள் வழமை புதுமைப்புனைவுகளை ஏற்படுத்தலாம். அப்போதுதான் நிறுவனம் வெற்றிப் பாதையில் வீறு நடை போடும்.

கலாச்சாரத் தொகுப்புக்களில் ஊக்கப்படுத்தல் தொடர்பாக கூட்டுக்கலாச்சாரப் பண்புகள் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. இதில் வேலை தொடர்பான ஊழியரின் எண்ணம், பாதுகாப்புத் தன்மையின் பங்கு, அதிகார இடைவெளி, சமயம் மற்றும் கலாச்சார நம்பிக்கைகளின் பங்குகள், ஆர்வங்கள் என்பன செல்வாக்கு செலுத்துகின்றன.

மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவ நோக்கில் மேற்கூறிய விடயங்களுடன் நிறுவனம் தன்னை எப்பொழுதும் உயிர்த்துடிப்புள்ளதாக வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் புதியன புகுவதிலும் அக்கறை காட்ட வேண்டும். பயன்தரும் முகாமை மூலமே நிறுவனங்கள் உயருவும், ஒரு நாடு அபிவிருத்தியடையவும் முடியும். இதற்குச் சிறந்த முகாமைத்துவத் தலைவர்களின் வழிகாட்டல் அவசியம். தான் விரும்பிய ஒன்றை, தான் விரும்பியபடி மற்றவர்களைக் கொண்டு அவர்களது விருப்பமின்றி செய்து முடிப்பவரே சிறந்த முகாமையாளர் இந்த முயற்சியில் அவர் மேற்கொள்ளும் உபாயங்களே சரியான மனிதவள முகாமைத்துவமாகும். இதுவே நிறுவன உயர்வு நோக்கிய இலக்கிற்கு வழிகாட்டும்.

♦♦♦

# கற்பித்தல் பயிற்சியை வெற்றிகரமாக்கும் சிறந்த மேற்பார்வை

## - ஓர் கண்ணோட்டம்

திரு. கு. சண்முகநாதன்
MA(Ed)
சீரேஸ்ட விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம்
அதிபர் தரம் -1

ஆசிரியர் கல்விபற்றி நமது நாட்டில் மிக அண்மைக் காலத்தில் வியக்கத்தக்க விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஒரு சமூகம் கல்வியினால் எய்தப்பட வேண்டிய முழுமையை அடையாத நிலைமையே இத்தகைய விழிப்புணர்விற்கு தூண்டுகோலானது. சமூக நலன் விருத்தி என்பது ஆசிரியர்கள் கருமத்தின் விளைவே என உணரப்படுகிறது. கற்பிக்கும் கலையையோ, அதன் நுட்பங்களையோ நுகர விரும்பாத பிரகிருதிகள் ஆசிரியர்களாக வகுப்பறைப்பிரவேசம் செய்தமையினால் நமது சமூகம்அடைந்த தீமைகள் காலங்கடந்தேனும் இன்று உணரப்பட்டுள்ளது. வேண்டத்தகாத பலர் ஆசிரியர்களாக வந்த தூரதிஸ்ரம் பற்றி கல்வி அமைச்சே பகிரங்கமாக கருத்துத் தெரிவித்துள்ளது. இதன்விளைவே ஆசிரிய விருத்திக்கான 'NATE' என்ற தனித்துவ அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இன்று நமது நாட்டில் தேசிய கல்வி நிறுவகம், பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் ஆசிரியர் கல்விவழங்கும் பொறுப்பை ஏற்று வழிநடாத்துகின்றன. இவை அறிமுறைசார் கல்வியை மட்டுமன்றி, செயன்முறைசார் திறன்களையும், கல்விப்பயிற்சி தொடர்பான அனுபவங்களையும் ஆசிரியர் கல்வியாக வழங்கி வருகின்றன. ஆசிரியர் கல்வியின் உயிரூட்டும் அம்சம் செயன்முறை சார்ந்த கற்பித்தற் பிரயோகப் பயிற்சியும், அக்காலத்து மேற்கொள்ளப்படும் மேற்பார்வையுமே யெனலாம்.

### களப்பயிற்சி

மேற்பார்வை என்றதும் வெறும் மதிப்பீடுதொடர்பானது என ஆசிரிய மாணவரும், பிறரும் எண்ணிக் கொள்ளும் மனப்பாங்கு வளர்ந்துள்ளமை பொருங்குறை பாடாகும். வழிகாட்டலும், மதிப்பீடும் ஒன்றிணைந்த செயற்பாடே கற்பித்தல் மேற்பார்வையாகும். மருத்துவக் கல்வியில் பல்வேறு துறைசார் அறிமுறைகள் கல்வியாக வழங்கப்பட்ட போதிலும், களப்பயிற்சியாக அமையும் வைத்தியசாலை அனுபவங்களாக செயன்முறை அனுபவப் பயிற்சியும், கட்டுறுப் பயில்வினையாக **(Internship)** வழங்கப் பெறும் அனுபவக் கல்வியுமே ஒருவனை வைத்தியனாக உருமாற்றம் செய்கிறது. தகுந்த அறுவைச்சிகிச்சை நிபுணத்துவமும், நோயாளர் சிகிச்சை நட்பமும், நோய்களை பரிசோதித்து கண்டறியும் திறனும் வைத்திய சாலையில் வழங்கப்படும் துறைசார்நிபுணத்துவ வழிகாட்டலின் கீழ் பெறும் பயிற்சியுமே ஒருவன் வைத்தியனாக வழிகோலுகிறது. இதே மனோ எண்ணம் ஆசிரியபயிற்சிக்கு முற்றிலும் பொருத்தமுடையதே என்பதை நாம் நினைவிற் கொண்டு செயற்பட வேண்டும். நெறிமுறையான கற்பித்தல் மேற்பார்வையென்பது ஆசிரிய மாணவர் அடையும் துரித முன்னேற்றத்தினாலேயே மதிப்பிடப்பட வேண்டும். ஆசிரியமாணவனது ஆற்றலிலும், பயன்பாட்டிலும் நிறைவான ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி புத்தூக்கம் படைக்கும் ஒருவராக ஆசிரியரைத் துலங்கச் செய்வதே மேற்பார்வையின் இயல்பாகும்.

கற்பித்தற் கலையின் பல்வேறு திறன்களை ஒன்றிணைப்பதே ஒரு ஆசிரியரை உருவாக்கும் என்று ஒரு காலம் கருதப்பட்டது. ஆசு + இரியன் குற்றமற்றவன் ஆசிரியன் என்று சொல்விளக்கந் தரப்பட்டது. குற்றமற்ற இணைப்பண்பு மட்டும் ஒருவனது ஆசிரியத்துவச் செயற்பாட்டை விளைவிக்கப் போதுமானதல்ல. பாடசாலை தொடர்பான அனுபவங்களை வழங்கி வழிகாட்டுதல், ஒரு ஆசிரிய மாணவன் தனக்கெனச் சுயமான கற்பித்தற் பாங்கொன்றினை உருவாக்குதல், தனது பலம், பலவீனங்களைப் புரிந்துகொண்டு பாடசாலைக் கருமத்தில் அதிகஉச்சளவு தன்னை இணைத்தல் என்பனவே இன்று ஆசிரிய கல்வியாக கொள்ளப்படுகிறது. பாடசாலை அனுபவங்கள் என்று கூறும் போது, அது இன்று முற்றிலும் ஒரு புதிய சூழ்நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது. பள்ளிகள் தொடர்ந்து ஒரே பாங்கில் இருக்கின்றன என்ற எண்ணமே மிகத்தவறானது. புதிய சூழ்நிலைககளை உணராத நிலையில் ஆசிரியர் கல்வி அமைதல் தவறு. மாணவனைத் தன்னைச் சூழவுள்ள சமூகத்திலிருந்தும், இடர்பாட்டிலிருந்தும் விடுவித்து, மீண்டும் சமூகத்துடன் பொருந்தும் வகையிலான திறன்களுடன் மீளச் சமூகத்திற்கு ஒப்படைக்கும் ஒருவராக ஆசிரியர் பொறுப்பேற்றுள்ளார்.

ஒரு குறுகிய காலத்தில் கற்பித்தல் நுட்பங்களையோ, கற்பித்தல் முறைகளையோ வழங்கமுடியும் என்பது யதார்த்தமான செயலல்ல. ஆனால் ஒரு ஆசிரிய மாணவன் பெறும் பயிற்சி, சுய கற்பித்தல் பாங்கொன்றினை தீர்வு செய்து தன்னுடன் பொருத்திக் கொள்ளல் என்பது சாத்தியமான செயலாகும். சுறுசுறுப்பான செயற்பாடு, சிந்தனையைக் கிளறும் வினாக்களைக் கேட்டல், விளக்கிக் கூறும் நுட்பம், பொருத்தமான உதாரணங்களைக் கையாண்டு விளக்குதல், கரும்பலகையைப் பயனுறும் வகையில் கையாளுதல், மாணவர் சுயமாக ஈடுபாட்டில் கற்க, செயற்படத் தூண்டுதல், சிக்கல்களில்ஈடுபட்டு விடுவித்தல் போன்ற ஆசிரிய நுணுக்கங்களைப் பயிற்சிக் காலத்தில் கற்றுக் கொள்ள முடியும். மேற்பார்வையாளர் இத்தகைய திறன்களை ஆசிரிய மாணவரிடத்தே பொருந்தச்செய்ய வேண்டும்.

மேற்பார்வையின் முக்கியஇலக்கு கற்பித்தல், நுட்பங்களைப் பாடப்பரப்பினூடாகக் கையாளச் செய்தலும், கால வேளைக்கமைய பாடங்களைத் தயார்ப்படுத்தும் சாத்தியத்தையும் பயன்பாட்டையும் பெற்றுக் கொள்ளச் செய்தலுமேயாகும். குழந்தை உளவியல், கற்றல் கொள்கைகள், பாடசாலை ஒழுங்கமைப்பு, கலைத்திட்டம், ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான கோட்பாடுகளுக்கும், பாடசாலைக் கருமத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்பினையும் முக்கியத்துவத்தினையும் அனுபவ உணர்வாக வழங்குதலே மேற்பார்வையின் பயன்பாடாகும். இது ஒரு செயன்முறை சார் தொழிற்பாடாகும். ஆனால் இந்நோக்கில் நடைமுறையில் மேற்பார்வை நடைபெறாது, உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படாமை ஆசிரியர் கல்வியின் துரதிஷ்டமான நிலையாகும்.

ஒரு ஆசிரிய மாணவன் தனது பயிற்சிக் காலத்து எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளையும், அதற்கான தீர்வுகளையும் மேற்பார்வையினூடாகப் பெற வழிகாட்டப்பட வேண்டும். நமது நாட்டில் கற்பித்தற் பிரயோகம் பயிற்சிக்காலம் பெரும்பாலும் 10 வாரங்களாக உள்ளது. ஆனால் அக்காலத்து தொடர்மேற்பார்வை என்பது பல்வேறு காரணிகளால் சாத்தியப்படுவதில்லை. கல்வியியற் கல்லூரிகளில் மட்டும் கட்டுறுப் பயில்வினை நடைமுறையிலுள்ளது, மேற்பார்வைக்குரிய ஆளணி என்பதும் முழுமையான, செயற்பாட்டு இலக்கினை எய்தப் பொருத்தமாக அமையவில்லை. பொரும்பாலும் பொறிமுறைசார்ந்த ஒரு செயற்பாடாகவே இன்று மேற்பார்வை நடைமுறை உள்ளது,

ஒவ்வொரு பாடஅலகும், திட்டமிட்டு வழங்கப்படும் முறை மேற்பார்வை செய்யப்படுகிறது. பாடக் குறிப்பிலிருந்து விலகிச்சென்று கற்பிப்பது அவதானிக்கப்படுகிறது. மொத்தத்தில் இரண்டும் அல்லது மூன்று பாடவேளையே நேரடி அவதானிப்பில் அமைகிறது. எந்த ஆசிரிய மாணவனுக்கும் போதியளவு வழிகாட்டுதல்களைப் பெற்று தன்னை ஒழுங்கமைக்கக் கூடிய வாய்ப்புக்களை பெறுகிறான் என்று உறுதியாக கூறமுடியாது.

### சிறந்த மேற்பார்வையாளர்:

மேற்பார்வையாளர் தகுதியைப் பெறுத்ததே அதன் வழிகாட்டுதல்களின் முழுமையெனலாம். பயிற்சியாளர் எவரிடமிருந்து அதிகளவு நுட்பங்களைக் கற்றுக் கொள்ள முடியுமோ? எவருடைய ஆலோசனை ஏற்று வழிநடத்தல் எளிதாக உள்ளதோ? திறந்த மனதுடன் பயிற்சி ஆசிரியர் எதிர்நோக்கும் இடர்பாடுகளை எவருடன் கலந்துரையாட முடியுமோ வேண்டுங் காலத்து, வேண்டும் வழிகாட்டுதல்களை பெறத்தகைமை கொண்டவர் எவரோ அவரே சிறந்த மேற்பார்வையாளராவார். பாடப்பரப்பை விரிவுரை செய்வதை விட கற்பித்தல் நுட்பங்களை கையாளுந் திறன் வாய்க்கப் பெற்றவராயிருத்தல் வேண்டும். வகுப்பறைச் சூழலுக்கேற்ப பாட உள்ளடக்கத்தை தீர்மானிக்குந்திறன் வேண்டும். ஒரு ஆசிரிய கல்வியாளரைவிட பாடசாலை ஆசிரியர்கள் சிறந்த மேற்பார்வை நுட்பங்களை அறிந்திருப்பர். நாளாந்த பாடசாலை கருமத்துடன் தொடர்புற்றிருப்பவர்களே, ஆசிரிய இடர்பாடுகளை சரிவரப்புரிந்து கொள்ள முடியும். கால் நூற்றாண்டிற்கு மேலாக பாடசாலைக் கருமத்துடன் தொடர்பு பெறாத பலர் இன்று ஆசிரியர் கல்விப் பொறுப்பை வழிநடத்துவது எந்தளவிற்கு பயனுறுதி தரும் என்பதைக் கல்வியுலகம் சிந்திக்க வேண்டும்.

புதிய கல்விப் போக்கையோ, கல்வி மாற்றங்களையுமோ அறியும் ஆர்வம் சிறிதுமில்லாத, விமர்சன உள்ளமுடைய பலர் மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே மேற்பார்வை பயனுறுதி மிக்கதாக ஒழுங்கமைப்படுதல் வேண்டும்.

பாட ஆசிரியர், பாடமேற்பார்வையாளர் அதிபர் போன்ற பாடசாலை உள்ளக மேற்பார்வையுடன் தொடர்புடையவர்களது ஒத்துழைப்பும், ஆக்கபூர்வமான வழிகாட்டுதல்களும் கற்பித்தல் மேற்பார்வையின்போது இணைக்கப்படுதல் அவசியம்.

பயிற்சிக் கால பாட அலகுகளில் 20முதல் 30வரையிலான அலகுகள் பயிற்சியாளருடன் தெளிவாக கலந்துரையாடப்படல் வேண்டும். பாட இலக்கு, இலக்கினை எய்தும் நுட்பம், மாணவர் ஈடுபாடு பற்றி மேற்பார்வையாளர் அலகினுக்கமைய வழிகாட்டுதல்களை முன் கூட்டியே கலந்துரையாடப்படுதல் நன்று. இத்தகைய அலகுகளில் 50 முதல் 75 வீதம் வரை மேற்பார்வை செய்யப்படுதல் நன்று. புதிய நுட்பங்களை வழிகாட்டின் பயிற்சியாளர் உற்சாகமடைவர். ஒரு பாட அலகின் முழு அம்சங்களிலும் கவனம் செலுத்துவதைவிட ஒரு சில அம்சங்களில் விசேட கவனஞ் செலுத்தி வழிகாட்டப்படுதல் பயிற்சியின் ஆரம்ப காலத்துக்கு கூடிய நன்மை தரும்.

மதிப்பீட்டில் கூடிய கவனம் செலுத்தும் பயிற்சியாளரது கவனம் திசை திருப்பப்பட வேண்டும். ஒருமதிப்பீடு நடைபெற்று முடிந்ததும், பயிற்சியாளர் கவலைக் குறைவாக நடப்பதுடன் மறுமதிப்பீட்டின்கருமத்தில் அதிக அக்கறை செலுத்துபவராகக் காணப்படுத்தல் வழமை. ஆகவே இந்நிலையை தொடர அனுமதியாத வகையில் மேற்பார்வைக் கருமங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். குறிப்பாக மேற்பார்வைக்குரிய காலம் கட்டுறுப் பயில்வினைக் காலமெனக் கொள்ளத்தக்க வகையில் ஆசிரிய மாணவர் மனப்பாங்கினைத் தோற்றுவித்தல் வெற்றிகரமான சூழலை தோற்றுவிக்க உதவும்.

இன்று ஆசிரியப்பணி சிக்கர்ந்த ஒருபணியாக ஆகிவிட்டது. சமூகம் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் நிலை அருகி, ஆசிரியர்களை இடர்ப்படுத்தும் ஒரு தர்ப்பாக்கிய நிலை உருவாக்கியுள்ளது. இந்நிலையில் ஆசிரியர் கல்வி என்பது சூழ்நிலைக்கமைய, இதற்கு முகங்கொடுக்கும் ஒருவராக ஆசிரியரை உருவாக்கும் நிலையே வேண்டப்படுகிறது. ஆகவே கற்பித்தற் பயிற்சி முழுமைபெற, அதற்குறுதுணையாகும் மேற்பார்வை முழுமை பெறவேண்டும். வகுப்பறைப் பிரவேசத்திற்கு முன்னரே ஆசிரியர் கல்வி வழங்கப்படுதல் முழுமையாகப் பின்பற்றப்படுதல் நன்று. கட்டுறுப்பயில்வினையான கற்பித்தற் பயிற்சியே அதிக பயனுறுதி வாய்ந்ததாகும். ஆயினும் இன்றைய சூழலுக்கமைய வழங்கும் கற்பித்தற் பயிற்சியில் மேற்பார்வை திருந்தியஒன்றாக ஒழுங்கமக்கப்படின் அது வெற்றிகரமான ஓர் நிலைக்கு ஆசிரிய பயிற்சியாளரை இட்டுச் செல்லும் என்பதில் கல்வியுலகம் அக்கறை காட்டட்டும்.

எமது மண்ணில் உதித்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரி சிறந்த கல்வேப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்
அம்பிகை களஞ்சியம்
304 (110) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### உலக மக்களின் துன்பங்கள்

1. உலகில் ஒரு பில்லியன் மக்கள் வாசிக்கவோ, தம் பெயரை ஒப்பமிடவோ தெரியாதவர்களாக இருக்கின்றனர்.
2. 130 மில்லியன் பிள்ளைகள் கல்வி மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பிள்ளைகள் பெண் பிள்ளைகள் ஆவர்.
3. 250 மில்லியன் சிறுவர்கள் பாரிய தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
4. கோடிக்கணக்கான சிறுவர்கள் போசாக்கின்மையால் நோயோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
5. கடந்த தசாப்தங்களில் ஒன்றரை மில்லியன் பிள்ளைகள் யுத்தத்தின் காரணமாக இறந்துள்ளனர்.
6. போர் நடவடிக்கை காரணமாக நாலு மில்லியனிலும் கூடுதலான பிள்ளைகள் வலது குறைந்தோராக ஆக்கப்பட்டுள்ளனர்.
7. ஐந்து மில்லியன் வரையிலான பிள்ளைகள் அநாதைமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

### அபிவிருத்தி அடையும் நாடுகளில் இரவு உணவின்றி 88 கோடி பேர்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த 440கோடி பேரில் 88 கோடி பேருக்கு இரவு உணவில்லை.

கடந்த 25 ஆண்டுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. ஆனால் சராசரியாக நாள் ஒன்றுக்கு இரண்டு டாலருக்கு குறைவாக 30 கோடி பேர் வருமானம் பெறுகின்றனர் என ஐ.நா.சபையின் சமீபத்திய அறிக்கை தெரிவிக்கிறது.